புலப்பாட்டு நெறி

டாக்டர்
பி. தெட்சணாமூர்த்தி

புலப்பாட்டு நெறி

(Rhetorics)

டாக்டர் பி. தெட்சணாமூர்த்தி
முதுகலைப் பேராசிரியர்—தமிழ்த்துறைத் தலைவர்,
ம. தி. தா. இந்துக்கல்லூரி,
திருநெல்வேலி—10

இலஞ்சியார் பதிப்பகம்
5, வ. உ. சி. தெரு,
திருநெல்வேலி—6

விலை ரூ. 12 – 00

விற்பனை உரிமை
வளனருள் வெளியீடு
49, காமகோடி நகர்,
வளசரவாக்கம்,
சென்னை—600 087

முதற்பதிப்பு: டிசம்பர் 1984

காணிக்கை

நினைவில் வாழும் அன்பு இளவல், பி. வேலு, B. E.க்கு
(பொறியாளர், மின்துறை)

உள்ளுறை

அச்சிட்டோர் ;
வெற்றி அச்சகம்,
91, டாக்டர் பெசன்ட் ரோட்,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

டாக்டர் சூ. இன்னாசி
பேராசிரியர்—தலைவர்,
கிறித்தவத் தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் பி. தட்சணாமூர்த்தி அவர்களின் 'புலப்பாட்டு நெறி' என்னும் இந்நூல் சிறியதாயினும் சீரிய நூல். புதுவதான ஒரு பொருளை நெறிப்படுத்திக்காட்டும் அரிய நூல். மேனாட்டார் புலப்பாட்டு நெறியின் வரலாறு தொடங்கித் தமிழ்நாட்டு உரை நடையாளர் நெறிமுறைகள் வரை வகுத்தும் தொகுத்தும் வகைபடக் கூறும் நூல்.

மேனாட்டுப் புலப்பாட்டு நெறி வரலாற்றினைச் சுருக்கமாகவும், நுணுக்கமாகவும் தந்திருப்பது தமிழ் இலக்கிய உலகினுக்குப் புதியதும் போற்றற்குரியதுமாகும். கிடைத்தற்கரிய வைணவ உரையாசிரியர்களின் நூல்களிற் காணலாகும் நெறிகளைக்கூட மேலோட்டமாக அல்லாமல், ஆழ்ந்து சிந்தித்து வெளிப்படுத்தியிருப்பதும், அண்மைக் கால உரைநடையாசிரியர்களின் தனித்தன்மைகளை ஆங்காங்கே தொட்டுக்காட்டியிருப்பதும் ஆசிரியரின் ஆய்வுத் திறத்தினையும் அதனைப் புலப்படுத்தும் அவர் தம் நெறியினையும் காட்டவல்லன.

ஆசிரியர் இன்னும் பல புதிய வகை நூல்களைப் படைத்துதவித் தமிழுலகிற்குத் தொண்டாற்ற, இறையருள் என்றும் துணைநிற்க வேண்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

சென்னை
10—12—1984

அன்பன்,
சூ. இன்னாசி

என்னுரை

அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் பதினாறாம் கருத்தரங்கு 1-6-1984 அன்று டில்லியில் நடைபெற்றபோது ''தமிழில் புலப்பாட்டு நெறி'' எனும் தலைப்பில் கட்டுரை படித்துக் கலந்துரையாடலிலும் பங்கு பெற்றேன். இக்கட்டுரைப் பொருளை விரிவாக்கி நூல்வடிவாக்குமாறு நண்பர்கள் கூறினர். சென்ற கல்வியாண்டு முதல் பருவமுறையிலும் இக்கல்வியாண்டு முதல் அல்பருவ முறையிலும் எம். ஃபில் ஆய்வுப் பட்டப்படிப்பு எங்கள் கல்லூரியில் தொடங்கப் பெற்றது. அதன் விளைவாலும் இந்நூல் வெளி வருகின்றது.

இந்நூல் வெளிவர அனுமதி அளித்த எங்கள் கல்லூரிச் செயலர் திருமிகு. கி. ந. அம்மையப்பன் அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் பேராசிரியர் திருமிகு. சிவ. இராமச்சந்திரன், எம். ஏ. அவர்களுக்கும் நன்றி.

அணிந்துரை நல்கி, ஊக்கமும் ஆக்கமும் அளித்து இந்நூல் வெளிவரப் பல்லாற்றானும் துணை நிற்கும் சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத் தமிழ் இலக்கியப் பேராசிரியர் டாக்டர் சூ. இன்னாசி எம்.ஏ. பிஎச்டி அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி உரித்தாகுக.

அரிய நூலான வைணவ உரை நூலைத் தந்துதவிய பேராசிரியர் திருமிகு. கோ. சங்கரராசுலு எம்.ஏ.எம்.லிட் (துணை இயக்குநர், கல்லூரிக் கல்வி) அவர்களுக்கும் அடிப்படை ஆங்கில நூலைத் தந்துதவிய எங்கள் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் திருமிகு. டி. என். நெல்லையப்பன் எம், ஏ. எம். ஃபில், பி. டி. அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

நல்ல முறையில் அச்சிட்ட சென்னை வெற்றி அச்சகத்தார்க்கு நன்றி.

திருநெல்வேலி,
12-12-1984,

அன்பன்,
பி. தெட்சிணாமூர்த்தி

இயல் 1

மேனாட்டார் புலப்பாட்டு நெறி

கிரேக்கச் சொல் (Rhetor) என்பதற்குப் பேச்சுக் கலையாசிரியன் என்பது பொருளாகும். (Rhetoric) என்பதுமொழியைத் திறம்படக் கையாளும் கலையாகும். இதுபேச்சிலும் அமையும். எழுத்திலும் அமையலாம். பேச்சுக்கலை அல்லது சொற் கோப்புக்கலை என்றும் இதற்கு நேரடியாகப் பொருள் கூறுவர். ஒருவன் தன் மனக் கருத்தை மற்றவனுக்குப் புலப்படுத்த மொழியைக் கருவியாக்குகிறான். சொல்ல வந்த கருத்தை மற்றவன் மனம் கொள்ளும்படி கூற வேண்டியதிருப்பதால் படிப்பவனிடத்தோ அல்லது கேட்பவனிடத்தோ ஒரு விரும்பும் தன்மையை ஏற்படுத்த வேண்டும். விருப்பத்தை உருவாக்கப் பல உத்திகள் கையாளப்படுகின்றன. அவ்வுத்திகள் சில நெறிமுறைகளுக்கு உட்படுகின்றன. சொற்பொருள் புலப்பாட்டிற்குரிய நெறிமுறைகள் பேச்சிலும் எழுத்திலும் உள்ளன. பொருளைப் புலப்படுத்துவதுடன் வேட்ப மொழியும் சொல்லாகச் சொற்கோப்புக்கலை விளங்குவதால் அதனைத் தமிழில் 'புலப்பாட்டு நெறி' என்றழைக்கின்றனர். மொழியைப் போன்றே இக்கலையும் பழைமை வாய்ந்ததாகும். கிரேக்க மொழி அறிஞர்களே இப்புலப்பாட்டு நெறிக்கு வித்திட்டனர்: விதிகள் வகுத்தனர்; நூல்கள் எழுதினர். கி.மு.

ஐந்தாம் நூற்றாண்டு முதல் இன்று வரை இக்கலை வளர்ந்து வருகிறது எனலாம்.

கிரேக்க நாட்டில் வழக்கு மன்றங்களில் முதன் முதலாகப் புலப்பாட்டு நெறிமுறை பின்பற்றப்பட்டது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலேயே இந்நெறி அங்கு எழுத்து வடிவம் பெற்றுவிட்டது. நீதிமன்றத்தில் விவாத முறையில் கருத்துக்களை நிலை நாட்டவும், உண்மையைக் கண்டறி யவும் இப்புலப்பாட்டு நெறி பயன்படுத்தப்பட்டது. அரசி யலில் இந்நெறி பேச்சுக்கலையாக வேரூன்றியது. பதி னாறாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இந்நெறி செல்வாக் குப் பெற்றது. இன்று உலகெங்கும் பேச்சிலும் எழுத்திலும் மாற்றத்தை உண்டாக்கி உள்ளது.

சொல்வன்மைக் கலையாகக் கிரேக்கத்தில் இந்நெறி மலர்ந்த நிலையைக் கிரேக்க இலக்கியங்கள் வழி அறியலாம். ஹோமரின் இலியத்திலும் ஒடிசியிலும் காப்பியப் பாத்திரங் கள் பேச்சுக்கலை வல்லுநராய் விளங்குவதைக் காணலாம். கிரேக்க நாடகங்களில் தருக்க முறை உரையாடல்கள் காணப்படுகின்றன. ஹிரோடாடஸ் (Heridotus) தியூ சிடைடஸ் (Theycydites) போன்றோரின் வரலாற்று நூல் களிலும், ஹீஸாய்டின் (Hesoid) தத்துவங்களிலும்கூட சொல்வன்மை செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காணலாம். கோரக்ஸ் (Corex) புலப்பாட்டு நெறியின் முதல்வர் ஆவார். நீதிமன்றப் பேச்சுக்களையும் விவாதங்களையும் புலப்பாட்டு நெறிக்குள் அடக்கியவர் இவரே. கி,மு. ஐந்தாம் நூற்றாண் டில் சிசிலி நாட்டில் அரசியல் கலவரம் தலைதூக்கியது. திராஸி பியூலஸ் (Thrasybalus) என்ற கொடுங்கோல் மன்னன் மக்களின் சொத்துக்களைக் கவர்ந்து கொண்டான். அதனால் எழுச்சி ஏற்பட்டு அவன் ஆட்சி ஒழிக்கப்பட்டது. மக்கள் தங்கள் சொத்துக்களை மீண்டும் பெற நீதி மன்றத்தை நாடினர். சொத்துக்குரிய ஆதரவுச் சான்றுகள் இல்லாத போது மக்களுடைய உடைமைகளைத் தம் வாதத்

திறமையால்உலகியலில் காட்டி உறுதி செய்தார். கோரக்ஸ் மக்களுக்காக வாதிட்ட நீதிமன்றப் பேச்சுக்களே புலப் பாட்டு நெறி தோன்ற வித்திட்டன. அவருடைய விவாத முறையில் முன்னுரை (Proem), நிகழ்ச்சிக்கோவை முறை (Narration), விவாதம் (Arguement), முடிவுரை (peroration) ஆகிய நான்கு பகுதிகள் இருந்தன. உடன்பாட்டு முறை யிலும் (Conformation) மறுத்துக் கூறல் முறையிலும் (Refutation) விவாதத்தை அமைத்து வாதாடி வெற்றி பெற்றார். இப்பகுப்பு முறையே பிற்காலப் பேச்சுக்கலைக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்ததால் கோரக்ஸ் புலப்பாட்டு நெறியின் முதல்வர் என்று அழைக் கப்படுகிறார்.

திதியாஸ் (Titias) என்பவர் கோரக்ஸின் மாணவர் ஆவார். வழக்குமன்றத் தீர்ப்புப் பொழிவுகளை எழுதி வந்த லிசியாஸ் (Lysias) ஐசோக்ராடீஸ் (Isocrates) ஆகி யோரின் ஆசிரியர் இவரே. இவர்கள் இருவரும் அத்திக் சொற்பொழிஞர்கள் (Atticorators). தூதராகவும் பேச்சுக் கலை ஆசிரியராகவும் பணியாற்றிய இவரது சொல்லாற் றலில் முரண் அணி (Antetehsis) இணையணி (Parallelism) ஆகிய ஈரணிகள் நடமிடுவதைக் காணலாம்.

கார்கியஸ் (Gorgias) என்பவர் கி.மு. 427 ல் சிசிலியி லிருந்து ஏதென்சுக்கு வந்தவர். ஏதென்சு நகர சோபிஸ்டு களில் குறிப்பிடத்தகுந்தவர். இவரது பேச்சில் உணர்ச்சி உண்டு. உயர்சிந்தனையும் உண்டு. ஒரு கருத்தைக் கூறும் போது அதன் மாற்றுக் கருத்தை உடன் கூறுவார்.

ஐசாக்ரடீஸ் (Isocrates) என்பவர். ஏதென்ஸ் நகரில் பேச் சுத்திறன் வளர்க்கப் பள்ளிகளை நிறுவியவர் கார்கியஸ் சிந் தனைப்போக்கு இவரிடம் படிந்து காணப்பட்டது. கிரேக்கப் புலப்பாட்டு நெறியாளர்களில் மிகுந்த செல்வாக்கு உடைய ராய்த் திகழ்ந்தார். கல்வி நிலையங்களில் பேச்சுக்கலையைப்

படமாக்கிக் கற்பித்தவர்களைச் சோபிஸ்டுகள் என்றழைத்தனர். பயிற்சிப் பள்ளிகள் பல நிறுவிப் புகழ் வாழ்ந்த சொற்பொழிவாளர்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. 21 சொற்பொழிவு நூல்களும். 9 கடிதங்களும் இவர் வழங்கினவையாம். இவருடைய சொற்பொழிவுகளின் கருத்துக்களைக் கொண்டே மேனாட்டுக் கல்வி முறை உருவாக்கப்பட்டது. எங்கு, எதனை, எப்படிப்பேச வேண்டும் என்று பயிற்சிப்பள்ளியில் சுற்றுக்கொடுத்தார். இப்பயிற்சியால் காரண காரிய உத்திமுறை வாதம் (Reasonal Argument) தோற்றம் கண்டது. இவரது பேச்சில் நீண்ட வாக்கியங்களும் ஒலி நயங்களும் மிகுந்து காணப் பெறும். கலையறிவை வளர்ப்பவன் ஒழுக்கசீலனாகவும் இருக்க வேண்டும் என்பது இவரது கருத்தாகும். பேச்சிலும் செயலிலும் செம்மை உடையராய்த் திகழ்ந்தார். தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஒருவன் வாழவேண்டும் என்ற ஒழுக்க உபதேசம் இவரது பேச்சில் மிளிரும். சோபிஸ்ட் சிந்தனைப் பள்ளியில் பணம் படைத்தோர் பயின்றனர். அன்றைய சமுதாய மரபிற்கு மாறாகவே சோபிஸ்டுகளின் கருத்துக்கள் இருந்தன. கார்கியசும், ஐசாக்ரடீசும் சோபிஸ்ட் சிந்தனைப் பள்ளி ஆசிரியரேயாயினும் கார்கியசின் நடையில் அலங்காரமும் உருவகமும் காணப்பட்டன. ஐசாக்ரடீசின் நடையில் பெருமிதமும் ஒலி ஒழுங்கும் இருந்தன. கலை நயமிக்க உரைநடைக் கோட்பாட்டை அவர் வகுத்துள்ளார்.

சோபிஸ்டுகளின் கோட்பாடுகள் இளைஞர்களைக் கெடுப்பதாகவும் காசு ஒன்றே குறிக்கோள் உடையதாகவும் இருப்பதாகக் கூறிப் பிளேட்டோ (Plato) அரிஸ்டாட்டில் (Aristotle) போன்றோர் சோபிஸ்ட் கருத்துக்களை ஏற்க மறுத்துவிட்டனர். பேச்சுக்கலையில் கற்பனையும் புகழுரையும் கலப்பதால் அது உண்மையான கலையாகாது. குழலுக்கேற்றபடி இக்கலை அமைந்துள்ளதேயன்றி உலகப்பொதுமைக் கோட்பாடு இக்கலையில் காணப் படவில்லை. உள்ளத்தை உல்லாசப்படுத்துகிறார்களே

யன்றி அறிவூட்டுவதில் ஆர்வங்காட்டவில்லை என்று பேச்சாளர்களைப் பற்றிய குறைகளைப் பிளேட்டோ குறிப்பிடுள்ளார். பேச்சாளன் பேசப்போகும் பொருளின் உண்மையை உண்மையாகவே அறிய வேண்டும். தலைப்பில் அமைந்த சொற்களுக்கு இலக்கணம் தரவேண்டும். பேசப்படும் பொருளைத் தகுந்த முறையில் பகுத்துக்கொள்ள வேண்டும். கேட்பவன் மனநிலையை அறிந்து பேச்சினை அமைக்க வேண்டும் என்றும் பிளேட்டோ விதிமுறைகளை விளக்கியுள்ளார்.

பிளேட்டோவின் மாணவரான அரிஸ்டாட்டில் ஐசாக்ரடீசுக்கு எதிராகப் பேச்சுக்கலைப் பள்ளியைத் தொடங்கினார். தம் ஆசிரியர் பிளேட்டோ கருதிய பேச்சுக்கலையின் தாழ்ந்த மதிப்பீட்டை மாற்றவேண்டும் என்ற ஆசை பற்றி 'Rhetoric' என்னும் நூலை எழுதினார். வாத நெறியே இவரது தலையாய கோட்பாடாகும். அதனால் பின்வந்த வாதநெறிக் கோட்பாடுகளுக்கு இந்நூலே அடிப்படையாயிற்று. முதலிருபாகங்கள் வாதநெறிக் கோட்பாடுகளை விளக்குவன.

மூன்றாம் பாகம் சொற்களின் ஒழுங்கு நடைபற்றிக்கூறும். இவர் எழுதிய மற்றொரு நூலான கவிதையியலில் 'Poetics' மொழிநடை பற்றிய விவாதங்கள் காணப்படுகின்றன. புலப்பாட்டு நெறி மீதிருந்த வசையைப் போக்குவதில் பேரார்வம் காட்டினார் என்பதை இந்நூல்கள் காட்டும், பேச்சுக்கலை நூல்களுக்கு அடிப்படையான நூல் இவரது நூலே. பிளேட்டோ புலப்பாட்டு நெறியை ஒருநயம் என்றே கருதுகிறார். ஆனால் அவரது மாணர் அரிஸ்டாட்டிலோ அதனை ஒரு கலை என்கிறார்.

பேச்சுக் கலையால் அமையும் நன்மைகளை நான்காகப் பகுத்துக் கூறியுள்ளார். நீதிக்குப் புறம்பாக நடைபெறும் தவறுகளைப் போக்கக் கூடியது (Corrective). அறிவூட்டுந்

தன்மை (Instructive) உடையது. உடன்பாட்டிலோ, எதிர் மறையிலோ குறிப்புப் பொருளைத் தெரிவிக்கக் (Suggestive) கூடியது. அற்றம் காக்கும் கருவியாகக் கூடியது (Defensive) ஆகிய நான்கு நன்மைகளை நல்கும் கலை பேச்சுக்கலை யாகும். ஒரு சொற்பொழிவில் ஐந்து பகுதிகள் இருக்க வேண்டும் என வரையறை செய்துள்ளார்.

'Inventis' பேச்சிற்கான தலைப்பினைக் கண்டறித லாகும். தலைப்புக்குத் தொடர்புடைய சிந்தனைகளை உருவாக்கும் உத்திமுறையாகும். ஒருவர் மனத்தில் பதியும்படி கருத்தைக் கூறுவதற்கு இருவழிகளைக் கையாள லாம். புலப்பாட்டு நெறிக்குப் புறம்பான அல்லது புலப் பாட்டு மனமாற்றத்தை உறுதிபடுத்தும் வழிகள் (Non-artistic or non technical means of persuafion) என்பது ஒரு வழி. சட்டங்கள், சாட்சிகள், ஒப்பந்தங்கள், துன்புறுத் தல்கள் (Tortures), சத்தியம் செய்தல் ஆகியன புலப் பாட்டு நெறிக்குப் புறம்பான புலப்பாட்டு நெறிகள். பேசுவோன் தன் கருத்துக்குப் பிறரை இணங்க வைக்க மூன்று வழிகளைப் பின்பற்றலாம் என்று அரிஸ்டாடில் கூறுகிறார். கேட்போனின் பகுத்தறிவுந் திறன் அடிப்படை, (rational appeal) உணர்ச்சிகளைப் கிளர்தெழச் செய்தல், (emotional appeal) பேச்சாளரின் தூய்மையான ஒழுக்க அடிப்படை (Ethical appcal) ஆகிய மூவழிகளில் முன் இருப்போர் மனங்களைக் கவர்ந்திருக்கலாம்.

மக்கள் எதனை உண்மை என நம்புகிறார்களோ அதன் அடிப்படையில் பேச்சாளன் தன் வாதத்தை அமைத் துக் கொள்வது வழக்கம். இது ஒரு குறை எனப் பிளேட்டோ சுட்டுகிறார். புலப்பாட்டு நெறி தருக்க நெறி யிலிருந்து சிறிது வேறுபட்டாலும் பெரும்பாலும் இரண்டும் ஒத்த தன்மையின.

பேசப்போகும் பொருளைப் பகுத்து வரிசைப்படுத்திக் (Arrangement) கொள்ளவேண்டியது பேச்சாளனின் கடமை

யாகும். மொழியில் கையாளப்படும் நடை (Style)யும் பேச்சில் சிறப்பிடம் பெறும். நினைவாற்றல் ((Memory) உடையவரே கோர்வையாகப் பேசமுடியும். சிறப்புரை ஆற்றுபவன் (Delivery) வழங்கு முறையையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று கூறும் அரிஸ்டாட்டில், நீதி மன்றப் பேச்சு (Forensit) ஆழ்ந்த சிந்தனைப் பேச்சு (Deliberative) பொழுது போக்கிற்கான பேச்சு (Epideictic) எனப் பேச்சுக் கலையை மூவகையாகப் பகுத்துள்ளார். ஒப்புமை அடிப்படையில் ஒருவன் தன் வாதத்தை நிலை நிறுத்த ஒரு தனி நிகழ்ச்சியை மேற்கோளாகக் காட்டலாம் என்பதைப் புலப்பாட்டுநெறி ஏற்கிறது. ' மார்க் அன்டனி யின் சொற்பொழிவு உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்தது. இப்பொழிவில் உணர்ச்சியுடன் பகுத்தறிவும் கலந்துள்ளது. உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் பேச்சாளன் பகுத்தறிவு வாதத்துடன் கருத்துக்களை விளக்க முற்படுகிறான். அதனால் புலப்பாட்டு நெறியாளர் அனைவரும் இம் முறையை ஏற்கின்றனர். பேசுபவன் ஒழுக்கமுடைய வனாக இருந்தால்தான் கேட்போரும் மதித்து அவன் கருத்தை ஏற்பர். ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்லை யாவரும் விரும்புவர். புலப்பாட்டு நெறியாளர்களான சிசரோவும் குவின்டிலியனும் இவ்வொழுக்க மேம்பாட்டைப் பெரிதும் போற்றுகின்றனர்.

நீதிமன்றப் பேச்சுக்களை அரிஸ்டாட்டில் சிறப்புத் தலைப்பாக (Special Topic) வகுப்பார். எந்தச் சூழலுக்கும் பொருத்தமான சில மரபு வாதங்களையும் பொதுத் தலைப்புள் அடக்குவார். விளக்கம் தரல், ஒப்பீடு செய்தல், தொடர்பு படுத்திப் பார்த்தல், சூழலமைவு நோக்கல், சான்றாதாரம் காட்டல் ஆகியன பொதுத் தலைப்புள் அடங்கும்.

எடுத்துக் கொண்ட பொருளை 1. அகராதியில் விளக்குவது. (Expository) 2. தேவையானவற்றை மட்டும்

(Essential) விளக்குவது என இருவகையாக விளக்கலாம். ஒற்றுமை வேற்றுமைகளை அறிய ஒப்பீட்டு முறை பயன் படுகிறது. காரண காரியத்தொடர்பு, முரண்பாடு ஆகிய வற்றை அறியத் தொடர்புபடுத்திப் பார்க்கும் முறை துணை செய்கிறது. முடிவன, முடியாதன என்பவற்றின் அடிப் படையில் வாதங்களை நிகழ்த்த சூழலமைவு நோக்கல் தேவைப்படுகிறது. சான்றாதாரங்கள். புள்ளி விவரங்கள், நீதி உரைகள், சட்டங்கள், முன்மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையில் வாதங்களை நிகழ்த்தலாம். வாதங்களுக்குச் சான்றுகளாய்க் கலைக் களஞ்சியங்கள், யார்-எவர் என்ற தொகுப்புக்கள், வரலாற்று நூல்களுள், வரைபடங்கள், அரசிதழ்கள் போன்றவைகளும் அமையலாம்.

சொற்பொழிவு நிகழ்த்தவோ கட்டுரை வரையவோ வேண்டுமாயின் எடுத்துக் கொண்ட பொருளை வகைப் படுத்தி முறைப்படுத்த வேண்டும். அரிஸ்டாட்டிலின் சொற்பொழிவில் வாதத்தின் இயல்பு கூறும் பகுதியும் (Statement of the case) அதனை நிரூபணம் செய்யும் பகுதியும் காணப்பெறும். இலத்தின் மொழியாசிரியர்கள் இவ்வகை முறையை முன்னுரை விளக்கம், அடுக்குமுறை, நிரூபணம், மறுப்புரை, முடிவுரை என ஆறு வகைப்படுத் துவர். விளக்கத்திற்கும் அடுக்கு முறைக்கும் அதிக வேறு பாடு கிடையாது. அதனால் ஐந்தாகவும் ஆக்குவர். வேறு சிலர் இவ்விரண்டையும் விடுத்து நடை (Style), மனனம் (Memory), ஒலி வெளிப்பாடு (Delivery) ஆகியவற்றைச் சேர்ப்பர்.

நடை என்பது மனிதன் தன் எண்ணங்களை வெளியிடும் தனிமுறைமை என பிளேர் (Blair) கூறுகிறார். மொழியில் உரக்கச் சிந்திப்பது நடை என்று நியூமென் (New man) கருதுகிறார். நடை என்பது மனிதனே என பப்போ (Buffow) கூறுகிறார். சரியான இடத்தில் சரியான சொல்லைக் கூறுவது நடை என்கிறார் ஸ்விட் (Swift).

ஆரம்ப கால இவ்வரையறைகள் மிகத் தெளிவானவை என்று சொல்ல முடியாததால் மறுமலர்ச்சிக் காலப் புலப் பாட்டு நெறியாளர்கள் நடைவகைகளைப் பற்றி விவாதித் தனர். இயல்புநடை (Plain Style) அறிவுறுத்தல் நடை யாக அமைந்தது. உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும் நடை நடுநடை (Middle Style) எனப்பட்டது. அழகு நடையே உயர் நடை (High Style) ஆயிற்று. நடை உருவாக தெளிவு, தூய்மை, எளிமை, அழகு, பொருத்தம் ஆகிய பண்பமைந்த சொற்களைத் தொடுக்கும் முறையிலும் புலப் பாட்டு நெறியினர் மிகுந்த அக்கறை செலுத்தினர். சொற்பொழிவின் இடையே தக்க இடையீடுகள் (Rhetorical term periods) இருத்தல் அவசியம். சரியான தொட ரமைப்பு (Correct syntax) சொற்களிடையே இயைபு (Collecation of words) வாக்கியக் கோலங்கள் (Pattern of sentences) இணைப்புச் சொற்களின் பயன்பாடு (Proper use of conjuctions) ஆகியவற்றை அறிந்து கொள்வதே தொடுக்கும் முறையாகும். ஒலிக்கோலங்களின் ஓத்திசைப் பில் கேட்போர் மயங்குவர். பேச்சாளனுக்கு மனனப்பயிற்சி என்பது சோபிஸ்டுகளின் கருத்தாகும். மனனம் செய்ய சில உத்திகளை (Devices) இவர்கள் பயன்படுத்தினர். 18ஆம் நூற்றாண்டுப் புலப்பாட்டு நெறி நூல்களில் ஒலி வெளிப்பாடு பற்றிய குறிப்பு வந்துள்ளது. கிரேக்கச் சொற்பொழிவாளர் டெமாஸ்தனீஸ் இதற்கு முதன்மை தந்தவர் ஆவார். ஒலியில் ஏற்ற இறக்கமும் சைகைகளும் சொற்பொழிவாளனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். போர்க்கு எழுதல், வரிவிதிப்பு, கோவில்கள் அணைகள் கட்டுதல், பிறநாட்டாருடன் ஒப்பந்தம் செய்தல் ஆகிய உள்ளடங்களைக் கொண்ட சொற்பொழிவுகள் அறிவீட்டல் சொற்பொழிவுகள் (Delibrative Oratory) ஆகும். அரிஸ் டாட்டில் இவ்வகைச் சொற்பொழிவுகளை எதிர்காலம் பற்றியனவாகக் கருதுகிறார். நீதிமன்றங்களிலும், பொது மன்றங்களிலும் ஒரு பொருளை வெட்டி அல்லது ஒட்டிப்

பேசும் சொற்பொழிவுகளை இறந்த காலத்துக்குரியவனாக அரிஸ்டாட்டில் கருதுகிறார். இப்படியும் இருக்கலாம் என்ற தன்மையைப் புலப்பாட்டு நெறியின் அடிநாதமாக அரிஸ் டாட்டில் கொண்டார்.

மகிழ்வித்தலும் உணர்வூட்டலும் ஆகிய நோக்கங்களை கொண்ட பிரகடனங்கள் போன்ற பேருரைகள் மரபுப் பேருரைகளாகும். இலக்கியச் சொற்பொழிவும் இதனுள் அடங்கும். இவ்வகைச் சொற்பொழிவை நிகழ்காலத்துக் குரியவனாய் அரிஸ்டாட்டில் கருதுகிறார்.

சிசரோ (Cicero) தம் பேச்சுக்களாலும் கடிதங்களாலும் புலப்பாட்டு நெறியை விளக்கியுள்ளார். புலப்பாட்டு நெறிக் கெனத் தனிப்பாடங்கள் (Subject Matter) உண்டு என்பது இவருடையகருத்தாகும். 'Rhetorica Ad Hereneeiem) என்ற நூல் (கி.மு. 86-82) இலத்தீன் மொழியிலுள்ள மூவகை நடை அமைப்புக்களையும் பேச்சுக்கலையில் மனனம் பெறு மிடத்தையும் விளக்கும் எழுச்சியான உயர்நடை (Elevated or high style) நேர்த்தியான எடுப்பான நடை (elegant or middle style) சாதாரண அல்லது தாழ்ந்த நடை ஆகிய மூவித நடைகளின் விளக்கம் இந்நூலில் உள்ளது. சிசரோ சிறந்த பேச்சாளர். 'Asiatic' 'Atticites' என்ற இருவகை மொழிநடைகளுக்கிடையே உள்ள முரண்பாட்டைப் போக்கியவர் இவரே. அரிஸ்டாட்டில் பொருளைவிட நடைக்கே முதன்மை தந்தார். சிசரோ பொருளுக்கு முதன்மை தந்தார். சிறந்த பேச்சாளனுக்குப் பல்கலை அறிவு தேவை என்பார். சொற்பொழிவு நூல் எழுதினார். உயரியது, எளியது என இருவகை நடைகள் இவர் காலத் தில் இருந்தன. உயர்நடையை 'Asiatics Style' என்றும் எளிய நடையை 'Attics Style' என்றும் வழங்கினர். கல்வி முறைக்கு உறுதுணையாக நிற்பது புலப்பாட்டு நெறி என்பது இவரது கருத்தாகும்.

ஸ்பெயினில் பிறந்து, உரோமில் கல்வி கற்று நீதி மன்றப் பேச்சால் செல்வாக்குப் பெற்றவர் பேபியஸ் குவின் டிலியான் (Feabius Quintilian.) ஆசிரியப்பணி ஆற்றிய பின் 'Institutio oratoria' என்ற நூலை எழுதினார். இடைக்கால முழுதும் இந்நூலே செல்வாக்குப் பெற்றது. சிசரோ கருத்தையொட்டிச் சொற்பொழிவு நூல்கள் எழுதினார். புலப்பாட்டு நெறியின் தன்மை, நோக்கம் பரப்பு ஆகியவைகளை இவரது நூல்கள் ஆய்வு செய்கின் றன. பேச்சுத் தலைப்பினைக் காண்டலும், பேசும் பொருளை ஒழுங்குபடுத்தலும் இன்றியமையாப் பண்பு களாகச் சுட்டுகிறார். பேச்சாளன், ஆளுமை, தூய்மை, நல் லொழுக்கம் உடையனாக விளங்குதல் வேண்டும் என்பது இவரது கருத்து. மனனம் செய்வது, சொற்களை நன்கு முறைப்படி உச்சரிப்பது, நடை ஆகிய செய்திகளை இவர் விளக்கியுள்ளார். கிறித்தவச் சமயவாதிகள் இவர் கருத்தை வரவேற்றனர். பேச்சாளன் போதிய கலை அறிவனாக பன் னூற்பயிற்சி உடையனாக, ஒழுக்க நெறி உடையனாக இருத்தல் அவசியம். பேச்சாளனுக்கென்று ஒரு தகுதி நிலை இருப்பது நலம் என்று இவர் கருத்துத் தெரிவித்துள்ளார். கிறித்தவச் சமயபரப்புப் பரவியிருந்த இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும், இவருடைய கருத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது, கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் St. Gall எழுதிய Institutes of Oratory என்ற நூல் செல்வாக்குப் பெற்றது.

உரோமில் வாழ்ந்த டயோனிசியஸ் (Dinonysices) என்பவர் எழுதிய 'On the arrangement of words' எனும் நூல் சொல்லின் ஒழுங்கு, அழகு, நடை பற்றி விளக்குகிறது. 'Attic' சொற்பொழிவாளர்களின் வரலாற்றினையும் திறனாய்வையும் பற்றி விளக்கியுள்ளார். பிளேட்டோ, தூசி டைடஸ், செனபோன் (Xenoplon) ஆகியோரின் நடையை ஆய்ந்துள்ளார். உரோமில் புலப்பாட்டு நெறியைக்கற்பித்து வந்தார். சொற்களை அடுக்கிச் சொல்லும் பேச்சு முறையை ஆதரித்தார். எளிய சொற்களைக் கொண்டே

சொல்லழகை ஏற்படுத்த முடியுமென்பது இவரது கருத்தாகும்.

ஹெர்மோஜெனிஸ் (Hermogenes) என்பவரும் எப்தோனியஸ் (Aphthonius) என்பவரும் கருவினை (Theme) அடிப்படையாகக் கொண்டு புலப்பாட்டு நெறிப் பாடநூல்கள் எழுதி வெளியிட்டனர். கி. பி. 15, 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பள்ளிச் சிறுவர்களுக்கு இவர்களது நூல்கள் பாடநூல்களாயின. இவர்கள் எழுதிய 'P. ogymoasmata' என்ற நூலில் பேச்சுக்கலை பற்றி விளக்க எடுத்துக்காட்டுகளும், பயிற்சிகளும் தந்துள்ளனர். இந்நூல் கிரேக்க மொழியிலும் இலத்தீன் மொழியிலும் பல பதிப்புக்களாக வெளிவந்தது. லாஞ்ஜுனியஸ் (Longinius) எழுதிய 'On the Sublime' என்ற நூல் இலக்கியத் திறனாய்விற்குப் பெரிதும் துணை நிற்பதாகும். பொருத்தமான இடங்களில் அணிகளைப் பயன்படுத்துவது, பொருளைக் கூறுவதில் ஒழுங்கு, நேர்மை, சொற்களை வரிசைப்படுத்தி அமைப்பதில் உள்ள சிறப்பு ஆகியன இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன. புலப்பாட்டு நெறி பற்றிய நூலாதலால் அணி நயஞ் செறிந்த நடைபற்றியும் உன்னதச் சொற்களை ஒழுங்கு படுத்தும் நிலைபற்றியும் இந்நூல் விளக்குகிறது.

கிரேக்க நாட்டு வரலாற்றில் டெமாஸ்தனிஸ் சொற்போர் வன்மைக்காகத் தங்கக் கிரீடம் பரிசாகப் பெற்ற விடுதலை இயக்க வீரராகக் குறிக்கப்படுகிறார். கிரேக்க நாட்டு அரசியலில் பேச்சுக்கலைக்குத் தலையாக பங்கு உரோமாபுரியிலும் நாடாளுமன்ற செயற்குழுவினர் போர் வீரராயும் அறிஞராயும் சொற்பொழிஞராயும் விளங்கினர். பேச்சுக்கலையின் பிறப்பிடாகக் கிரேக்கம் விளங்கியது. கிரேக்கரின் பேச்சுக்கலை நடைக்கு 'Attic Style' என்று பெயர். உரோம அறிஞர்கள் பின்பற்றிய நடையை **'Asian Style'** என்று குறித்தனர். **'Scholastic Style'** என்ற

புதுமை நடையும் தோன்றியது. இயற்கையான திறமை அனுபவம், மனித சுபாவத்தைப் புரிந்து கொள்ளுதல், தன்னம்பிக்கை நடை ஆகியன ஒரு பேச்சாளனுக்குத் தேவை என்று உரோமானியர் கருதினர்.

இடைக்காலத்தில் பேச்சுக்கலையைக் கற்பித்த சோபிஸ்டுகள் தமக்கு அளிக்கப்பட்ட சலுகைகளைப் பயன்படுத்தித் தவறான வழிகளில் சென்றனர். அதனால் பேச்சுக்கலை திசை திரும்பியது. பொழுது போக்குக் கலையாக மாறியது. பள்ளிகளில் 'Sophist' கல்வி என்றும், அரசியல் கல்வி என்றும் இருவகைப் பாடங்கள் கற்றுத்தரப் பட்டன, சோபிஸ்டு கல்வி உயர்ந்ததாகக் கருதப்பட்டது. சோபிஸ்டுகள் பள்ளிகளில் பேருரை நிகழ்த்தும் முறை பற்றியும் கடிதங்கள் எழுதும் முறைப்பற்றியும் கற்றுக் கொடுத்தனர். இடைக்காலப் பேச்சுக்கலை இலக்கிய நடையாக வளர்ந்தது. புதிய மாற்றத்தைத் தோற்றுவிக்கவில்லை.

பைபிள் வசனங்களிலுள்ள புலப்பாட்டு நெறியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டவர், தூய அகஸ்டின். (St. Augustine). சிறுவயதில் சிறந்த பேச்சாளராகவும் பின்னர் நல்லாசிரியராகபும் திகழ்ந்தவக் அகஸ்டின். 'The confession' என்ற நூலை எழுதினார். கிறித்தவர் ஒழுக்கச் சீலராய்த் திகழ வேண்டும் என்பதை இவர் வற்புறுத்தினார். நடையழகுக்கு மட்டுமே முதன்மை தந்த சோபிஸ்டுகளின் கருத்தை இவர் ஏற்கவில்லை. சிசரோவின் கோட்பாடுகளை ஏற்றார். தூயவாழ்வு வாழக் கிறித்தவர்க்கு வழிகாட்டும் முகமாக புலப்பட்டு நெறியில் ஆர்வம் காட்டி வந்தார். தூய பால் (St. Paul) என்பவரின் திருமடல்களில் கவனம் செலுத்தினார். போதகன் புனித வாழ்வு வாழ வேண்டும் என்பது இவர் கருத்தாதலின் சோபிஸ்ட் கருத்துக்களையும் குவண்டிலியனின் கொள்கைகளையும் வெறுத்து ஒதுக்கினார். பேச்சாளன் ஒழுக்கமுள்ளவனாக இருக்கவேண்டும்

என்பது கட்டாயமில்லை. ஆனால் ஒழுக்கமுள்ளவனாக இருந்தால் கேட்போர் மீது நல்ல பாதிப்பைஏற்படுத்தலாம். ஒழுக்கத்தைப்பற்றிச் சிந்திக்காத ஒரு பேச்சாளன் தன் நாக்குவான்மையால் கேட்போரைத் தன்வயப்படுத்த முடியும் என்றும் இவர் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் 16 ஆம் நூற்றாண்டில்தான் புலப் பாட்டு நெறி பற்றிய சிந்தனை மேலோங்கியது. ஆங்கிலப் பள்ளிகளில் இந்நெறி பாடமாகியது. மறுமலர்ச்சிப் காலத்திதில் மரபு வழிச்சிந்தனை, தருக்க முறைச்சித்தனை, திட்ட வரையரைச் சிந்தனை என மூவகைப் போக்குகள் காணப்பட்டன. லியானார்டு காக்ஸ் (Leonard Cox) என்பவர் 1580ல் புலப்பாட்டு நெறி பற்றிய நூல்எழுதினார். இது மரபு வழிச் சிந்தனை நூலாகும். 1550ல் ரிச்சர்டு செர்ரி (Richard Sherry) இந்நெறி குறித்து நூல் எழுதி னார். 1554ல் தாமஸ்வில்சன் (Thomas Wilson) எழுதிய நூல் சிசரோ கொள்கையை அடியொற்றி எழுதப்பட்ட தாகும். கூற்றுமுறை (Narration) நடை, மனனம், உச்சரிப்பு. முடிவுரை ஆகிய கூறுகளை இவரது நூல் நன்கு விளங்குகிறது. எராமல் (Eramas) டீன் காலட் (Dean colet) ஆகியோர் முயற்சியால் இங்கிலாந்தில் பேச்சுக் கலைப் பள்ளிகள் நிறுவப்பட்டன. பல பாடநூல்கள் எழுதப் பட்டன. மொழிநடையைப் பயன்படுத்தும் முறை இந்நூல் களில் விதந்தோதப்பட்டது. ஜுயன் லுயிற் வைவ்ஸ் (Juan Luis vivs) என்பவர் இங்கிலாந்தில் ஆங்கிலப் புலப் பாட்டு நெறியை வளர்க்கப்பாடுபட்டார். இவர் எட்டாம் ஹென்றியின் மகள் மேரியின் ஆசிரியர் ஆவார். புலப்பாட்டு நெறிக்கொள்கையைவிளக்கும்'Deconsecriben dis Epitsolas' என்ற நூலை எழுதினார். பொருளுக்கு முதன்மை தந்தவர் மொசில்லானாஸ் (Mosellanus). சொற்களைத் தகுதியான இடத்தில் அமைத்துப் போவதில் அதிக கவனம் செலுத்தி னார். பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மாற்றத்திற்கு வழிகாட்டியவர் இவரே. தலைப்பைத் தேர்தல், சொற்

பகுப்பு, நடை, நினைவாற்றல், பேருரையை வெளிப் படுத்தும்திறன் ஆகியவற்றில் மரபுவழிச்சிந்தனையை மேற் கொள்வோர் மரபுவாதிகள் (Traditionalist) என்றழைக்கப்பட்டனர். தலைப்பைத் தேர்ந்தெடுப்பது சொற்பாகுபாடு செய்வது ஆகிய இருபகுதிகளைத் தருக்க வாதத்திற்கும் பேச்சுக்கலைக்கும் கையாண்டோர் ரேமிஸ்டு கள் (Ramists) என்றும், திட்ட வரைவுக்கும் அணி வகை களுக்கும் முதன்மை தந்தோர் பிக்ரிக்டுகள் (Figuris) என்றும் அழைக்கப்பட்டனர். தாமஸ் வில்கர் எழுதிய 'Art of Rhetorique' என்ற நூல் சிறப்பு வாய்ந்தது ஆகும். முகவுரை, நிகழ்ச்சி வருணனை உரை, பொருத்தமான அளவு, பகுப்பு, உடன்பாட்டுரை, மறுப்புரை முடிவுரை ஆகிய பகுதிகளில் விளக்கவுரையினை இந்நூலில் காணலாம்.

ஆங்கிலப் புலப்பாட்டுநெறியில் பதினேழாம் நூற் றாண்டு ஒரு திருப்புமுனையாகும். சிசரோவின் கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றன. காரணகாரிய அடிப்படையில் வாதங்களைத் தருக்கமுறையில் விவாதித்துக்கற்பனையுடன் கலந்து பேச்சுக்கலைக்கு மெருகூட்டிய காலமிதுவாகும். சமயச் சார்பான நூற்பொருளை விளக்கும் பேருரைகள் தோன்றிய காலமாகும். பேச்சிலும் எழுத்திலும் எளிமையும் இனிமையும் உண்டாக்கக் காரணமாக இருந்த ஆசிரியர்கள் தோன்றிய காலமாகும். புலப்பாட்டு நெறிக்கும் கவிதையின் நடைவேறுபாடுகளைத் தோற்றுவித்த காலமாகும். பல கட்டமைப்பில் நெகிழ்வு, ஒத்திசைக்குறைவு போன்ற குறைகளைக் களையத் துணை நின்ற காலமாகும். இங்கிலாந்தில் ராயல் சொசைட்டி என்ற கழகம் புலப்பாட்டு நெறி வளர்ச்சிக்குத் துணையாக நின்ற காலமாகும். பதி னேழாம் நூற்றாண்டுப் புலப்பாட்டு நெறி பிரான்சிஸ் பேகனுடன் (Francis Becan) தொடங்குகிறது எனலாம். ஜான் டிரைடன் (John Dryden) வளர்த்த நடுவண் நடை சீர்கெட்ட மொழிநடைகளை நீக்கப்பயன்பட்டது. தாமஸ்

பிளவுண்ட் (Thomas Blount) என்பவர் பேகனைப் (Bacon) பின்பற்றியே நூல்கள் எழுதினார், நால்வகை நடைகளை இவர் வலியுறுத்தினார், ஹால் (Hall) என்பவர் புலப்பாட்டு நெறியிலும் ஹாப்ஸ் (Hobes) என்பவர் இயல்பு நடையிலும் ஆர்வம் காட்டினர். வழங்குமொழிநடையின் தந்தையாக டிரைடன் (Dryden) விளங்கினார், மரபு வழிச் சிந்தனைக்குப் புத்துயிர் அளித்துப் புலப்பாட்டு நெறியை வளர்த்தகள் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசிரியர்கள்.

இலக்கியத்தோடு தொடர்பு கொண்டு திறனாய்வுக் கலையாகப் புலப்பாட்டு நெறி வளர்ந்த காலம் பதினெட்டாம் நூற்றாண்டேயாகும், உயர்தர இலக்கியக்கருக்களுக்கு உருக்கொடுத்ததும், புலப்பாட்டு நெறியை ஒரு செயல் முறைக்கலை (Practical Art) யாக ஏற்றதும் இக்காலமே. ஜார்ஜ் செயின்பரி (George Saint bury) என்பவர் புலப்பாட்டு நெறியைச் சொற்பொழிவுத்திறன் நெறி என்றார். Rhetorio now dubled as Eloquence. becomes the Art of literatine or in other words criticism'' என்று விளக்கம் தருகிறார். ஐம்பது நூல்களுக்கு மேல்புலப்பாட்டு நெறி பற்றி வெளிவந்தகாலம் இக்காலமே. 1737ல் Herald Fharding எழுதிய English Rhetorical Theory என்ற நூலும் John stirbling எழுதிய Asystem or Rhetoric என்ற நூலும் John Holime எழுதிய lectures concerning oratory என்ற நூலும் குறிப்பிடத்தக்கன. தாமஸ் செரிடான் (Thomas Sheridan) பேச்சுமுறைக்கும் உச்சரிப்புக்கும் முதன்மை தந்தார். வாசிப்புக்கலை, பேச்சுக்கலை, உச்சரிப்பு, கல்வி ஆகிய மூன்று பிரிவுகளில் இவரது கோட்பாடுகளை அடக்கலாம், உரை நிகழ்த்தும்போது அழுத்தம், தொனி, ஏற்ற இறக்கம், அமைதி தந்து பேசல், உச்சரிப்பு சைகை போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். 1758ல் ஜான் லாசன் (John Lawson) சொற்பொழிவு நூல் எழுதி வெளியிட்டார். இத்நூலில் அரிஸ்டாட்டில்,

சிசரோ, குவிண்டினியன் ஆகியோர் கருத்துக்களும் தரப் பட்டுள்ளன. 1781 ல் வெளிவந்த சிறந்த நூல் (Elements of Elocution) என்பதாகும். உளவியல் நோக்கில் மக்களை அணுகிச் செயல்படுவன கலைகளாக மாறும் எனும் கொள்கையராய் மூவர் விளங்கினர். ஸ்காட்லாந்து அறிஞர் களான அவர்கள் Lord Kames, Ceorge Campbell, Blair. சிசரோ கொள்கை அடிப்படையில் புலப்பாட்டுநெறி பற்றிய நூல்கள் எழுதினர்.

The Philosophy of Rhetoric 1870 வரை அமெரிக்கக் கல்லூரிகளில் பாடநூலாக இருந்தது. பேச்சின் வெற்றி அதனை முடிக்கும் திறனில் இருப்பதாக இவர் எழுதி யுள்ளார். பேச்சுக்கலை பற்றிப் பிளேர் (Blair) தெரிவித்த கருத்துக்கள் பல்கலைக் கழக மாணவரிடையே பெரும்பரப் பரப்பை ஏற்படுத்தின. இவரது நூல் ஐம்பது பதிப்புக்களாய் வெளி வந்ததுடன் இத்தாலி, பிரஞ்சு, ஆகியமொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. சுவை, அழகு, எழுச்சியாக யான நடை ஆகியன இந்நூலில் விவாதிக்கப்படுகின்றன. திறனாய்வு வளர்ச்சியில் திருப்பத்தை ஏற்படுத்திய இம் மூன்று பண்புகள் பதினெட்டாம் நூற்றாண்டின் புலப்பாட்டு நெறி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கன.

பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் புலப்பாட்டு நெறி பற்றிய நூல்கள் பல எழுந்தன. உளவியல், பொருண்மை, கொன்கையின் அடிப்படையிலான ஆய்வு, நடைமுறை அறிவியற்கலைஆகியவற்றின் தாக்கத்தால்புதிய புலப்பாட்டு நெறி தோன்றிய காலம் இதுவாகும். சொற் பொழிவுக் கலைக்கு இந்நெறி உரியது என்று மதிப்பிடப்பட் டது இக்காலமே. இலக்கியத் திறனாய்வுப் பொழிவுகளை இந்நெறியில் எட்வர்டு டி சானிங் (Edward T. Stanning) அடக்கினார். ஐ. ஏ. ரிச்சர்டு 'New Rhetoric' புலப்பாட்டு நெறியில் தத்துவத்தை எழுதினார்.

கென்னத் பர்க் (Kenneth Burke) என்பவர் இலக்கியத்தர முடைய புலப்பாட்டு நெறியாளராக மதிக்கப்பட்டார். புதிய புலப்பாட்டு நெறி (New Rhetoric) நூலைப் பெரல்மேன் (Perolman) எழுதினார். பேசுவோன் மன நிலையையும் கேட்போர் மனநிலையையும் தெளிவாக இனம் கண்டு கொள்ளுதல் (Identification) பற்றிய பல்வேறு நிலைகளை இந்நெறியின் கொள்கைகளாய்ப் பின் பற்றியவர் கென்னத்பர்க் ஆவார். புதிய புலப்பாட்டு நெறி வளர்ச்சியில் இங்கிலாந்தும், அமெரிக்காவும் பெரும் பங்கு வகிக்கின்றன. தற்கால இலக்கிய வளர்ச்சியில் புலப்பாட்டு நெறிக் கோட்பாடுகள் பெரிதும் அறிவியல் சார்ந்த நிலையில் துணை போகின்றன. பேச்சுக் கலையில் சைகைகளைப்பயன் படுத்துவது ஒருவகை உத்தியே. இவ்வுத்தி நீதிமன்றப் பேச்சுக்களிலும் இன்று பயன்பட்டு வருகின்றது.

கேட்போர் மனத்தில் தருக்க வாதத்தை ஏற்படுத்தும் வகையில் பேச்சுக்கலையை நெறிப்படுத்தும் முறையே புலப் பாட்டு நெறி என்று மேரி ரிக்கார்டு கூறுவார். கருத்துக் களோடு மக்களையும், மக்களோடு கருத்துக்களையும் இணங்க வைக்கும் செயல்முறையைப் புலப்பாட்டு நெறி என்பர். கேட்போரை இணங்க வைக்கும் வகையில் மொழியை ஒரு குறியீட்டுக் கருவியாகப் பயன்படுத்தும் நெறி புலப்பாட்டு நெறி. ஒரு குறிப்பிட்ட சூழலில் கேட்போரை இணங்க வைக்கும் முயற்சி புலப்பாட்டு நெறிக்கு உரியது. கருத்துப்பரிமாற்றக் கருவியான மொழிகளைச் செப்பமுற அமைத்து ஒழுங்கு செய்து கொள்வதை விளக்கும் கலையே புலப்பாட்டு நெறி.

இயல் 2

தமிழ் இலக்கணங்களின் புலப்பாட்டு நெறி

தொல்காப்பியரின் புலப்பாட்டு நெறி

தமிழ் மொழியை வரையறைப்படுத்திப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் தொல்காப்பியம் துணை நிற்கின்றது. எழுத்து, சொல், பொருள் என மூவகைப் பகுப்பை உடையது இவ்விலக்கண நூல். எழுத்துக்களை வரிசைப் படுத்தி வகைப்படுத்தும் போக்கு எழுத்ததிகாரத்தில் காணப் படுகிறது. பொது, சிறப்பு என்ற இருவகைப் பாகுப் பாட்டை நூல் முழுதும் காணலாம். வகைமைகளை விளக் குவதில் ஒரு வரிசை அமைவு உள்ளது. தம் கருத்தைக் கூறும்போது மற்றவர் கூறும் கருத்துக்களையும் ஏற்கிறார் தொல்காப்பியர்.

> "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
> சொல்லினாகும் என்மனார் புலவர்" *(641)*

என்ற சொல்லதிகார நூற்பாவில்வரும் என்மனார் புலவர் எனுஞ் சொற்றொடர் முன்னோர் கூற்றை ஏற்பதாகும். மொழிப, என்ப, அறிந்திசினோரே எனப்பல இடங்களில் முன்னோர் கூற்றைப் பொன்போல் போற்றியுள்ளார்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று கூறும் தொல்காப்பியர் சொற்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை மூன்று நிலைகளில் விளக்குகிறார். அவை 1. வழு 2. வழுவமைதி 3. வழு அல்லாதவை.

"வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறிகிளவியும்
மயங்கல் கூடா தம்மரபினவே"

"செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்"

"வினாவும் செப்பே வினா எதிர்வரினே" போன்ற

நூற்பாக்கள் பேசுவோன் கேட்போன் என்ற நிலைகளையும் மயக்கமின்றிப் பேசவேண்டும் என்பதனையும் உணர்த்து கின்றன. இயற்கைப் பொருளைக் இற்றெனக்கூற வேண்டும். செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் வேண்டும். தகுதியும் வழக்கும் என இருவகை நிலை சொல்லில் உளது.

"குறித்தோன் கூற்றம் தெரித்து மொழிகிளவி"
செயற்படு பொருளை செய்தது போல
தொழிற்படக்கிளத்தல்"

போன்று சொற்களைச் சொல்லும் முறையும் விளக்கப்படு படுகிறது.

இடம் நோக்கிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டும். தருசொல் வருசொல் தன்மை முன்னிலை இடங்களில் வரும். செலவும் வரவும் படர்க்கையில் வரும். யாது எவன் ஆகிய சொற்கள் அறியாப் பொருள்வயின் செறியத்தோன்றும், யாது என்ற வினா அறிந்த பொருள்வயின் ஐயந்தவிர்தற்குத் தெரிந்த களவியாதலும் உரித்தே. வணிகர்களின் புலப்பாட்டு நெறியை,

" எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிது பொருள் கூறல்"

என விளக்குகிறார். சொல் ஒழுங்கு (Word Order) பற்றி

"சிறப்பினாகிய பெயர் நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க்கிளவி முற்படக்கிளாவார்" எனக்

குறிப்பிடுகிறார். கிளவியாக்கம் புலப்பாட்டு நெறிக்குத் துணை நிற்கும் இயலாகும். டனோசியஸ் (Dionysius) எழுதிய 'On the arrangement of words' என்ற நூல் தரும் சொல் ஒழுங்குவிதி தொல்காப்பியத்திலும் காணப்படுகிறது.

மரபியல் கருத்துக்களைத் தொகுத்துக் கண்டால் புலப்பாட்டு நெறிக் கூறுகளைக் காணலாம், பத்துக்குற்றம் நீங்குதல், பத்து அழகு பெறுதல் என்ற பாகுபாடுகள் நூலுக்கு மட்டுமன்று; ஆய்வேட்டிற்கும் பொருந்தும் வகையில் உள.

" வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூல் ஆகும்" என்பதில்

வெளியீட்டு முறை (Elocutis) காணப்படுகிறது.

" செய்யுள் மருங்கினும் வழக்கியன் மருங்கினும்
மெய் பெறக் கிளந்த கிளவியெல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல் வரைந்தறியப் பிரித்தனர் காட்டல் "

என்பதால் இருவகை வழக்கு உண்மை புலப்படுகிறது,

செய்யுளில் வண்ணமும் வனப்பும் அமையும் வகைகளைப் புலப்பாட்டு நெறி வழிநின்று விளக்குகிறார். வண்ணம் பற்றிய நூற்பாக்களில் "ஏந்தல் வண்ணம் சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்", "அமைப்பு

வண்ணம் அறுத்தறுத்து ஒழுகும்'' என்பன புலப்பாட்டு நெறி கூறுகளை உள்ளடக்கியவை.

சொற்களின் பொருள் புலப்பாட்டிற்குக் காரணம் உண்டு என்கிறார். ''மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.'' சொல்லும் பொருளும் இணைந்து காணப் பெறுவது இயற்கையே. சொல்வோனும் கேட்போனும் இருந்தால் சொல்லுக்குப் பொருள் உணர்த்த வேண்டிய நிலை ஏற்படும். 'பொருட்டு திரிபிலவை உணர்த்த வல்லின்' என்றும் 'உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்தே' என்றும் கருத்தை உணர்த்தும் புலப்பாட்டு நெறியைக் கூறியுள்ளார்.

முன்னுரையாகக் கூறவந்த பொருளின் பொது இலக்கணம் அமைத்து, பின் நடுவில் பொருளை வகைப்படுத்தி முடிவுரையாகப் புறனடை நூற்பா கூறியிருப்பதை நோக்கின் தொல்காப்பியர் தனக்கென ஒரு புலப்பாட்டு நெறியை உருவாக்கிக் கொண்டார் எனலாம்.

அவையில் கூறக்கூடாத சொற்களைக் கூற வேண்டிய முறை பற்றி, ''அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' என்கிறார். 'மறைக்குங்காலை மருவியது ஒரா அல்''. பேவையில் பேசப் பெறும் நாகாரிகப் பேச்சு அமையும்முறை கூறியிருப்பதால் புலப்பாட்டு நெறி பற்றித் தொல்காப்பியர் மிக நுட்பமாக அறிந்திருந்தார் என்பது புலனாகும். தம்கால வழக்குகளில் அரியனவற்றைப் புதிதாகத் தந்திருப்பது கண்டுபிடிப்பு எனும் உத்தியில் அமையும்.

செய்யுளியலில் வண்ணத்தை இருபதாகப்பகுத்துக் கூறுவதில் ஒரு முறைமையைக் கையாள்கிறார். எழுத்து, சீர், அடி, தொடை என்ற நான்கினையும் அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்துகிறார். ஒலிநய வேறுபாடுகளை உணர்த்தும் வண்ணங்களை நடையியல் பொருள்கோள் அடிப்படைகளில் விளக்க வாய்ப்பு உளது.

சிசரோவின் கூற்றுப்படி கண்டுபிடிப்பு (Inventio) வரிசை அமைவு (Dionysius) வெளியீட்டுமுறை (Elocutio) உச்சரிப்பு (Pronuntis) நினைவாற்றல் (Memoria) ஆகிய ஐந்து உத்திகளின் உள்ளடக்கமே புலப்பாட்டு நெறியாகும். இவ்வுத்திகள் அனைத்தும் தொல்காப்பிய நூற்பாக்களில் அமைந்து கிடப்பதால் தொல்காப்பியமும் புலப்பாட்டு நெறிக் கூறுகளை உள்ளடக்கிய நூல் எனலாம்.

புலப்பாட்டு நெறி என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கேட்போனின் மனத்தில் பேசுவோன் தன் கருத்தைப் பதிய வைக்கும் முயற்சி அல்லது முயற்சியின் வழிவகைகளைக் கண்டறியும் நெறியேயாகும். பேச்சுக்கலைக்கும் கட்டுரைக்கலைக்கும் இந்நெறி தேவைப்பட்டது. இலக்கியத் திறனாய்விற்கும் இந்நெறியைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்நெறி கிரேக்கத்தில் பிறந்தது எனினும் தமிழ் இலக்கணிகளின் சிந்தனைச் சிதறல்களிலும் வேறுவிதமாகத் தவழ்ந்துள்ளது. தமிழில் அந்நெறியைக் கலையாக ஏற்றுத் தனி நூல்கள் எழுதப்படவில்லை. எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றிய தமிழன், நூல் பற்றிய சிந்தனையை வளர்த்து அந்நூலுக்குரிய பண்புகளைக் குறித்தான். அப்பண்புகளைக் கிரேக்கரின் புலப்பாட்டு நெறியுடன் ஒப்பிட்டால் புலப்பாட்டுச் சிந்தனை தமிழ் நாட்டிலும் உண்டு என நிறுவலாம்.

தமிழ் இலக்கணிகளில் தலைமை சான்றவர் வரிசையில் முன்னூலாசிரியன தொல்காப்பியரும் அவரின் வழிநின்ற பின்னுனூலாரான நன்னூலாரும் இடம் பெறுகின்றனர்.

நன்னூலாரின் புலப்பாட்டு நெறி

நூல் என்றால் பாயிரம் வேண்டும். அதனை முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், தந்துரை, புனைந்துரை ஆகிய ஏதேனும் ஒன்றன் பெயரால் அழைக்கலாம். பாயிரத்தில் கூற வேண்டியவை ஐந்து கருத்துக்கள் நூலே, நுவல்

வோன், நுவலலும்திறன், கொள்வோன். கோடற்கூற்று என்பன அவை. ஒரு நூல் குற்றங்கள் பத்தினின்றும் நீங்கிப் பத்தழகுடன் எழுமதம் தழுவி 32 உத்திகளில் சிலவற்றை ஏற்று விளங்க வேண்டும் என்பது வரையறை. முகவுரையை முன்னுரையாக ஏற்கலாம். பதியவைத்தல் பதிகமானால் புலப்பாட்டு நெறி முன்னுரையில் தொடங்கிவிடுகிறது. அன்றைய நூலை இன்றைய ஆய்வேடாக ஏற்றால் அத்தனை இலக்கண விதிகளும் ஆய்வு ஏட்டிற்கும் பொருந்தி வரும் பாங்கினை அறியலாம்.

"குன்றக்கூறல் மிகைப்படக்கூறல்
கூறியதுகூறல் மிகைப்படக்கூறல்
வழூச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்று தேய்ந்து இறுதல் நின்று பயனின்மை"

ஆகிய வழுக்களைச் சான்றோர் நடையில் காணுதல் இயலாது, அறிஞர் நடை என்ற ஆய்வேட்டின் விதிக்கு விதி உரைத்தார் நன்னூலார் எனலாம். இந்நூற்பாவில் 'கூறல்' என்ற சொல்லை நான்குமுறை கூறிக் கேட்போர் மனத்தில் பதிய வைக்கிறார், புணர்த்தல், தொடுத்தல், வைத்தல், விரித்தல் என்ற சொற்களில் ஒலிநயச் சேர்க்கை காணப்படுவதால் கேட்போரைத் தன் வயப்படுத்தும் நிலையைக் காணலாம். நெறிக்கு விதி வகுத்தலோடு நெறியிலும் தான் நிற்கிறார். "தெளிவெனப்படுவது பொருட் புலப்பாடே" என்பது தண்டியலங்காரம், நடையில் தெளிவு அழகு வேண்டும். படைப்பாளி படிப்பாளியை அல்லது திறனாளியை வலிந்து இழுக்கக் கூடாது. இயற்கையாகவே அழகு அமைய நூலைப் படைக்க வேண்டும். அழகைப் பெறுதற்குச் செய்ய வேண்டுவனவற்றை நன்னூலார் தொகுத்துரைக்கிறார்.

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத்தாதல்
முறையின் வைப்பே உலகமலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு தாரணத்த (து)
ஆகுதல் நூலிற்கு அழகு"

மேற்கோள்காட்டுவதை "விளங்கு உதாரணத்தாகுதல்" எனுஞ் சொற்றொடர் சுட்டுகிறது. நன்னடை நல்க, நன்னூலார் இலக்கணம் தந்தார் எனலாம்.

"நூற்பொருள் வழக்கோடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி அறிந்து இதற்கு இவ்வகையாம் எனத்
தரும்வகை செலுத்துதல் தந்திர உத்தி" என

உத்திக்கு இலக்கணம் தந்து 32 உத்திகளை அடுக்கிச் செல்கிறார். உரையாசிரியர்களின் உரைச்சிறப்புக்களையும் உரைமரபுகளையும் விளக்கிக்காட்ட இவ்வுத்திகள் பயன்படுகின்றன. வகுத்துக் காட்டல், சொற்பொருள் விரித்தல், ஒருதலை துணிதல், எடுத்துக்காட்டல், பிறநூல் முடிந்தது தானுடம்படுதல், சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல், தொகுத்துச் சுட்டல், ஒன்றின முடித்தல் உத்திகளை உரையாசிரியர்கள் பலர் பயன்படுத்தியுள்ளனர்.

ஒத்து, படலம் என்ற பிரிவுகள் ஆய்வேட்டின் பகுப்புக்களைச் சுட்டுவதாக ஏற்கலாம். எழுவகை மதங்களில் உடன்படல், மறுத்தல், ஒரு தலைதுணிவே, தன் மதம் கொளல் போன்றவை ஆய்வாளனுக்குத்தேவைப்படுவனவே முன்னைய ஆய்வுகளைக் குறித்துப் பின் தமது ஆய்வின் வேறுபட்ட நிலையைச் சுட்டுவதை ஆய்வேட்டில் காணலாம். இதனை நூலுக்கு விதியாக்கி நன்னூலார்,

"முன்னோர் நூலின் முடிபொருங் கொத்து
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி
அழியா மரபினது வழிநூலாகும்'' என்று
கூறியுள்ளார்.

சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினாவிடை, அதிகாரம், துணிவு, தன்னூலானும் பிறநூலானும் ஐயம் அகல வைப்பது போன்ற உரை விதிகள் ஆய்வேடு எழுதுபவர்க்கும் பொருந்துவன. ஆதலின் புலப்பாட்டு நெறிச் சிந்தனை தமிழ் இலக்கணிகளிடமும் இருந்தது எனலாம்.

இயல்பு 3

வள்ளுவத்தில் புலப்பாட்டு நெறி

பேச்சுக்கலை என்று சொல்லப்படும் புலப்பாட்டு நெறியினை வள்ளுவர் தம் நூலில் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். தாமும் அந்நெறியினை மேற்கொண்டுள்ளார். புலப்பாட்டு நெறிச் சிந்தனையாளராய் விளங்குகிறார். சொல்வன்மை, அவை அஞ்சாமை ஆகிய அதிகாரங்களில் சொற்கோப்புக் கலை நுட்பத்தினை வெளியிடுகிறார். புலப்பாட்டு நெறியின் இலக்கணங்களாகக் கூறப்பெறுவனயாவும் திருக்குறட்பாக்களில் காணப் பெறுகின்றன.

சொல்ல வந்த கருத்தைத் திருவள்ளுவர் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதால் பேச்சுக்கலை வல்லராய்த் திகழ்கிறார். யாப்பிலே குறள் வெண்பா சொற்செட்டு (Economy of words) உடையது.

'' கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுதத் தரித்த குறள்'' என்று இடைக்காடரும்,

'' அணுவைத் துளைத்தேழ் கடலைக் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்'' என்று ஔவையாரும்

சொற்செட்டைப் பாராட்டியுள்ளானர்.

பேச்சுக்கலைப் பண்புகளில் மோனை (Aliteration) நயம் ஒன்றாகும். முதல் எழுத்து ஒன்றி வரும் மோனை நயமுள்ள பாவிற்கு,

" துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை".

" பற்றுக பற்றற்றான் பற்றினைப் அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு".

ஆகிய குறட்பாக்களை எடுத்துக் காட்டலாம்.

ஒரு கருத்தைச் சொல்லும்போது அதன் மாற்றுக் கருத்தையும் கூறுவது பேச்சுக்கலையின் இயல்புகளில் ஒன்றாகும். அறத்திற்கும் மறத்திற்கும் அன்பே சார்பு என்பார்.

" அருளில்லார்க்கி அவ்வுலகமில்லை
பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு", என்று உண்மையாகவே (Antithesis) அமைக்கிறார்.

" அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (76)

" புல்லவையும் பொச்சாந்துஞ் சொல்லற்க
நல்லவையுள்
நன்கு செலச் சொல்லுவார்"

என்ற குறளில் புல்லவைநல்லவை முரணாக அமைந்துள. நன்றியறிதலின் சிறுமை, பெருமைகளுக்கு முறையே தினையையும் பனையையும் குறியீடாக்குவார்.

" தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக
கொள்வர் பயன்தெரி வார்" (குறள் 104)

புலப்பாட்டு கெறியைத் தாம் பின்பற்றியதுடன் அந் நெறி பற்றிய விளக்கக் குறிப்புகளையும் முப்பது அதிகாரங் களில் இலை மறை காயாகக் கூறியுள்ளார்,

" வில்லேர் உழவர் பகை கொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை" (872)

என்ற குறவில் அறமுறை அணுகுமுறை காணப் பெறுகிறது. பேச்சுக்கலை வல்லாரைச் சொல்லேர் உழவர் என்று அழைக்கிறார்.

" கேட்டார் பிணிக்கும் தகைவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதஞ் சொல்"

என்று சொல்லுக்கு இலக்கணம் தருகிறார்.

" இணரூழ்த்தும் நாறா மலரணையர் கற்றது
உணர விரித்துரையா தார்"

என்ற குறளில் சொற்கோப்புக் கலையை உணர்த்த உவமையைக் கையாள்கின்றார். பிறர் உணரும்படி கருத்தைப் புலப்படுத்த வேண்டும் என்பது உணர்வு முறை அணுகலாகும்,

" சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல்
அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மையறிந்து"

என அணிநயம் தோன்ற அறிவுமுறை அணுகலைக் கூறுகிறார்.

கற்றிலனாயினும் கேட்க, எனைத்தானும் நல்லவை கேட்க, ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்லைக் கேட்க வேண்டும் எனக் கூறுவது அறவுணர்வு முறை அணுகலைக் குறிக்கிறது. யார் யார் வாய்க் கேட்டாலும் மெய்ப் பொருள் நன்குணர்ந்து சொல்ல வேண்டும் என்பதும் தத்துவப் பொருண்மையை எடுத்தியம்புவதாகும். செவிக்கு உணவு கேள்வி; அக்கேள்வியால் தோட்கப்படாத செவி செவியாகுமா? என்று வினாவுகிறார். செவியிற் சுவை

உணரா மாக்கள் அவியினும் என்! வாழினும் என்! என வினாவுவது உணர்ச்சி வெளிப்பாடல்லவா!

சொல்ல வேண்டியவற்றை எண்பொருளாகச் செலச் சொல்ல வேண்டும். சொல்லுதல் யார்க்கும் எளிது, சொல்லிய வண்ணம் செயலும் அமைய வேண்டும் என்பதில் பேச்சாளனுக்கு ஒழுக்கத் தேவை உணர்த்தப்படுகிறது. வேட்பச் சொல், வேட்பன சொல், தொகச் சொல், நகச் சொல், ஒரு தலையாச் சொல், பண்பற்றவை பிரியாச் சொல், இன்சொல் எனச் சொற்கலை அறிந்து வகைப் படுத்துகிறார்.

திறனறிந்து சொல்லைச் சொல்லுக. ஆக்கமும் கேடும் அதனால் வரும் ஆதலால் நாகாக்க. பல சொல்லாது சில சொல்லல் போதும்.

> " விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்பெறின்" 648

சொல்லின் தொகை அறிந்து, அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக. சொல்லின் நடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல். கற்றார் முன் கற்ற சில சொல்.

> " அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
> நாடி இனிய சொல்லின்" (96)

எனக் காரண காரியத்தொடர்புடன் தருக்க முறையில் பேச்சுக் கலைக்கு விளக்கம் தருகிறார்.

சொல்லிற் பயனுடைய சொல்லுக. பண்பில் சொல் பல்லாரகத்துச் சொல்லாதே. சொல்லில் கோட்டம் கூடாது. இன்னாச் சொல்லோ கடுஞ்சொல்லோ கடுமொழியோ ஏன் கூற வேண்டும் எனக் கேட்கிறார். பயனற்ற சொல்லைப் பலர்முன் சொல்லாதே.

விருந்தோம்பலுக்குச் சொல் தேவை. மன்னனின் வரிசை நோக்குவதே சொல்திறன் கண்டபின்தான். செவிக்கு

இன்பம் தருவது மழலைச் சொல் கேட்பதேயாம். புகழ்ச் சொல்லைக் கேட்கும் தாய் மகிழ்கிறாள். அவையத்து முந்தியிருப்பச் செய்வது உரைப்பார் உரைப்பவையால்தான். மனத்தொரு வாய்மை மொழிவதில் உண்மை (Truth) உளது. நண்பனுக்கு அறிவுரை கூறச் சொல் பயன்படு சிறது. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப் பாரில்லாமலே கெட்டுவிடுவான், பாராட்டுவதற்கும் சொல்லாடுவதற்கும் பேச்சுக்கலை துணை நிற்கும்.

சொல்வன்மை, அவை அறிதல், அஞ்சாமை, இனியவை கூறல், புறங் கூறாமை, விருந்தோம்பல், பயனில சொல் லாமை, மக்கட்பேறு, குடிமை, கேள்வி, கல்லாமை, புகழ், கூடா ஒழுக்கம், பெரியாரைத் துணைக்கோடல், அமைச்சு, வினைத்திட்பம், குறிப்பறிதல், தூது, இறைமாட்சி. நல் குரவு, இரவச்சம், கயமை, கைத்திறந்தெரிதல், சான்றாமை, நட்பு, கூடாநட்பு எனப் பல அதிகாரங்களில் சொற்றிறன் பற்றிய குறிப்புகள் உள. அரிஸ்டாடில் கூறும் உண்மையைக் காணல், தருக்க முறையில் கூறல் என்பன குறளில் உள. கிரேக்க அறிஞர்கள் எழுதிய நடை பற்றிய கருத்துக்கள் குறளில் உள. தமிழில் பேச்சுக்கலை இருந்தது; எனினும் அதுபற்றிய தனி நூல்கள் அன்று எழுதவில்லை. அவை அறிதல், அவை அஞ்சாமை, சொல்வன்மை அதிகாரங்கள் பேச்சுக்கலை பற்றிய விதிகளை உள்ளடக்கியுள. ஆதி மொழிகள் தொன்றிய இடங்கள் வேறு வேறாக இருப் பினும் அம்மொழிகளில் தோன்றிய கலைகளிடையே ஒற்று மைகள் காணப்படுகின்றன எனலாம்.

இயல் 4

உரையாசிரியர்கள் புலப்பாட்டுநெறி

1. நக்கீரரின் நடை

தமிழில் தோன்றிய முதல் உரை நூல் இறையனார் அகப்பொருளுரையாகும். இலக்கண உரையாயினும் இலக்கியப்போக்குடையதாகும். இவ்வுரையாசிரியர் பின் வந்த உரையாசிரியர்க்கு வழிகாட்டியாக விளங்குகிறார். அந்தாதி முறையில் ஒரு வாக்கிய வினைமுற்று அடுத்த வாக்கியத்தின் தொடர் சொல்லாக விளங்குவதைக் காணலாம். சொல்லுக்கு விளக்கம் தரும்போது தெளிவுடன் விளங்குவதைக் காணலாம். சான்று "அன்பு-குடத்துள் விளக்கும், தடற்றுள் வாளும் போல இதுகாண அன்பு என்று போதத் திறந்து காட்டலாகாது. அன்புடையரான குணம் கண்டவிடத்து இவை உண்மையான் ஈங்கு அன்பு உண்டென்று அனுமித்துக் கொள்ளற்பாற்று" அன்புடையார் குணம்—சாவிற்சாதது நோவின் நோதல், நற்பொருள் கொடுத்தல், நன்கினிது மொழிதல், புணர்வு நனிவேட்டல், பிரிவு இரங்கல் என இவை."

உவமை : கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது
செல்லுமாறு போல"

"கருத்தின்னாதானைக்கட்டி பூசி கடுத்தீற்றியவாறு போல"

என அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய சங்க நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டுள.

வினாவிடை முறை

"இனிப்புகழ் பொருள் நட்பு ஆறனென்றும் நான்கினையும் பயக்கும் இது வல்லனாக. என்னை? கற்று வல்லன் என்பதனின் மிக்க புகழ் இல்லை, உலகத்தாரானும் சமயத்தாரானும் ஒருங்கு புகழப்படுமாகலான் என்பது. இனிப் பொருளும் பயக்கும் என்னை?' கற்றாரைச் சார்ந்து ஒழுகவே நமக்கும் அறிவு பெருகும்' என்று பலரும் சார்ந்து ஒழுகலின் என்பது. இனி அறனும் பயக்கும் என்னை? 'ஞானத்தின் மிக்க கொடை இன்மையான் என்பது. இது பயன்" (ப. 13 இறையனார் அகப்பொருள், பவானந்தர், கழகம், சென்னை, 1939)

உவமைகூறிச் சொற்பொருள் விளக்கம்

"இனி நூலென்ற சொற்குப் பொருளுரைக்கப்படும் நூல் போறலின் நூலென்ப; பாவை போல்வாளைப் பாவை என்றாற்போல" (ப. 16)

மேற்கோள் எடுத்தாளுதல்

இனிக் கரு என்பன தெய்வமும் உணவும் மாவும் மரமும் புள்ளும் பறையும் செய்தியும் யாழின் பகுதியும் முதலாக உடையன. என்னை?

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ் வகை பிறவும் கருவென மொழிப"

என்றாராகலின்—அம்முறையானே சொல்லுதும்" (ப. 22)

மறுத்துக்கூறல்

"இனி ஒழுக்கத்தினை திணை என்பாரும், நிலத்தினைத் திணை என்பாரும் என இரு பகுதியர் ஆசிரியர்: இது பொருந்தாது; ஒழுக்கமே திணை எனப்படும்" (ப. 25)

இலக்கண விதி கூறி விளக்கல்

"அஃதேயெனின், அன்பினான் ஆய ஒழுக்கத்தை அன்பின் வேறென்று கொள்வன், தச்சானானாய மாடம் தச்சனின் வேறாயது போல என்றார்க்கு. அதுவன்று; பொன்னினாய குடம் பொன்னின் வேறல்லது போலக் கொள்க" என்பது. மூன்றாம் வேற்றுமை; காரண காரியத்தை வேறுணரவும் நிற்கும்; வேறன்றியுணரவும் நிற்கும், வேறென்றியுரை நிற்கும் பகுதி கொள்க" (ப. 26)

வகைக்கூறி விளக்கல்

"ஐந்திணை என்பதன் முன்னர்க் களவு என்னும் சொல் எத்திறத்தால் வந்தது? ஒரு சொல் முன் ஒரு சொல் வருங் கால் பயனிலை வகையானும் தொகைநிலை வகையானும் எண்ணுநிலை வகையானுமென மூன்றுறனுள் ஒன்று பற்றி யன்றே வருவது? அவற்றுள், இஃது எவ்வகையான் வந்ததோ? எனின் தொகை நிலை வகையான் வந் தென்பது" (ப. 26)

2. பரிமேலழகரின் பொருட் புலப்பாடு

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையே சிறப்பெனப் போற்றப்படுகிறது. பரிமேலழகர் தமக்கு முற்பட்ட உரை நூல்களைப் பயின்று நினைவில் நிறுத்தி உரைமொழி கின்றார். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகியவற்றின் தொடக்கத்தில் விரிவுரை எழுதுகிறார். இயல்பற்றி ஆய்வுரை தருகிறார். அதிகார வைப்பு முறை

பற்றிய விளக்கம் கூறுகிறார். பொருள் தொடர்புடைய குறட்பாக்களைத் தொகுத்து நோக்குகிறார். ஏனைய விளக்கமும். உரையாசிரியர் கருத்தினின்றும் வேறுபட்டு புத்துரை விளக்கமும் எடுத்துரைக்கின்றார். பாட வேறு பாடுகளைக் குறிப்பிடுகிறார். பிறர் உரைகளை மறுக்கும் போது காரணம் சுட்டுகிறார். வடமொழிப் பயிற்சி மிக்கவர் பரிமேலழகர். கருத்துக்களை விளக்குவார். அவர் தம் பொருட் புலப்பாட்டினைத் திருக்குறள் உரை வழிக் காண்பதே இவண் நோக்கம்.

மேற்கோள் காட்டும் செய்யுள் அடியை உரைநடையில் ஆக்கித் தருபவர். குறள் 64 உரையில் புறநானூற்று 188ம் பாடல் அடிகளை உரைநடை யாக்குகிறார். 'சிறுகையான் அளவலாவது இட்டும் தொட்டும் கௌவியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தல்' என்றார்.

பாடல் அடிகளை அப்படியே எடுத்தாள்வார். 580வது குறட்பா விளக்கத்தில் நாகரிகம் என்பது கண்ணோட்ட மாதல் "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" (நற்றிணை 355) என்பதனாலும் அறிக" என்று தம் மதம் நிறுவ மேற்கோள் காட்டுகிறார்.

திருக்குறளையே சான்றுகாட்டி மேற்கோள் தருவதும் உரைநடையாக்கி எழுதுவதும் உண்டு. (குறள் 135, 161, 263, 305, 457, 755.)

உரை பற்றிய பாட்டு

"நூலில் பரித்தவுரையெல்லாம் பரிமேலழகர்,
தெரித்தவுரை யாமோ"
"தெள்ளு பரிமேலழகர் செய்தவுரை" உமாபதிசிவம்

"திருவள்ளுவரது திருக்குறள் பரிமேலழகியாரது உரை யாகிய புணையைக் கொண்டுதான் இடைக்காலமாகிய

கருங்கடலைக் கடந்து நம் காலம் எனும் கரைக்குச் செவ்வனே வந்து சேர்கின்றது'' (தெ. பொ.மீ ''வள்ளுவரும் மகளிரும்'' பக் 11.)

' திருக்குறளின் பெருமையை ஆராய்ந்து அதன் கருத்துக்களை நுட்பமாக உணர்ந்து, அதற்கு ஓர் அரிய உரை இயற்றி அதன் புகழை வளர்த்தவர் பரிமேலழகர்'' வையாபுரிப்பிள்ளை. (தமிழ்ச் சுடர்மணிகள் பக். 167)

அபிதான கோசம் தரும் செய்தி

இலக்கணங்களும், சாதுரியமும், விசேடவுரை தெரிக்கும் ஆற்றலும், மேற்கோள் எடுத்துச் சித்தாந்தம் செய்யும் உபாயமும், பிறர்க்கெல்லாம் பல வசனங்களான் அன்றி அமையாத விஷயங்களைச் சில சொற் கொண்டு தெற்றெனக் காட்டும் பேராண்மையும் வடமொழிப் பதங்களையும் செந்தமிழ் மொழியாக்கும் அற்புத சாமர்த்தியமும் புராண இதிகாச வடநூற் பயிற்சி முத்தமிழ் விளக்கமும் காணலாம்.

சொற்பொருள் விளக்கம்

அரிய சொற்களுக்கும் தொடர்களுக்கும் விளக்கம் தருவார். மக்கட்பதடி-அறிவு என்னும் உள்ளீடு இன்மையின் மக்கட்பதடி என்றார் (196). தீயவை தீயினும் அஞ்சப் படும்-பிறிதொரு காலத்தும், பிறிதொரு தேயத்தும் பிறிதோர் உடம்பினும் சென்று அடுதல் தீக்கு இன்மையின் தீயினும் அச்சப்படுவதாயிற்று. உள்ளப்பிரிதல் — இனி இவரை யாம் எங்ஙனம் கருதும் என நினையும் நீங்குதல் என்பார்.

உவமைக்காட்டி விளக்கல்

100 வது குறள் உரையில் ''இனிய கனிகள் என்றது ஔவையார் நெல்லிக்கனி போல அமிழ்தானவற்றை

இன்னாத காய்கள் என்றது காஞ்சிரம் போல நஞ்சான வற்றை'' என உவமை காட்டி விளக்குகிறார்.

காரண காரியம் காட்டி நிறுவல்

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்ற அடிக்குக் குணங்கள் மூன்றும் மாறி மாறி வருவதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் அழிந்தார்வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார்வாயினும், உறுதிப்பொருள் பகைவர் வாயினும் கெடுபொருள் நட்டார்வாயினும் ஒரோ வழிக்கேட்கப்படுதலான் எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் என்றார்'' எனக் கூறப்படும் உரை விளக்கத்தில் காரண அடுக்கு காணப்படுகிறது.

பிறஉரை மறுத்து மொழிதல்

தாமரைக்கண்ணான் உலகு என்பதற்குப் பரிமேலழகர் ''துறந்த யோகிகள் எய்தும் செங்கண்மா உலகம்' என்று உரைவகுத்தார். இந்திரன் உலகு என்று உரைப்பாரும் உளர்; தாமரைக்கண்ணான் என்பது அவனுக்குப் பெய ரன்மையின் தந்து உரையன்மை அறிக'' என்று பிறர் உரை மறுத்து மொழிகிறார்.

வகைப்படுத்தி முறைப்படுத்தல்

செங்கோன்மை ''அஃதாவது அரசனாற் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது செவ்விய கோல் போறலிற் செங்கோலெனப்பட்டது'' என்று இலக்கணம் வகுத்து இவையிரண்டு (2,3) பாட்டானுஞ் செங்கோலது சிறப்புக் கூறப்பட்டது என்றும், இவை நான்கு பாட்டானும் (4,5,6,7) அதனைச் செலுத்தினானெய்தும் பயன் கூறப்பட்டதும் வகைப்படுத்துகிறார். குறள் தொகுப்பிற்குத் தலைப்பும் தேர்வு செய்து தருகிறார். கோடுங்கோன்மை செங்கோன்மைக்கு மாறாகலின் இஃத

தன்பின் வைக்கப்பட்டது என்று அதிகாரச் சிறப்புக் கூறுகிறார். கல்வி என்ற அதிகாரத்தில் எண்ணென்பது கனிதம்; அது கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும் என்று தாம் கூறும் விளக்கத்தை வகைப்படுத்துகிறார்.

வினாவிற்கு விடை கூறுவது போல் உரை விளக்கம் தருவார், "கல்வி உடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலாராகலின் அவர் வாய்சொற்கேட்பபடாதென்பது தோன்ற ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்லென்றார்" (கேள்வி அதிகாரம் குறள் 5). இவ்வாறு உரை கூறும் முறைக்கே வரைவிலக்கணம் வகுக்கும் வகையில் பரிமேலழகரின் பொருட் புலப்பாடு விளங்குகிறது.

3. இளம்பூரணர் உரை மரபு

முன்னுரை

தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதிய முதல்வர் இளம்பூரணர். உரையாசிரியர் எனும் சிறப்புப் பெயர் பெற்றவர் ஆவார். தமிழ் மரபிற்கேற்ப உரை செய்தவர். தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர் என்று சிவஞான முனிவரால் பாராட்டப் பெற்றவர். புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கல விருத்தி ஆகியவற்றில் உள்ள பாடல்கள் இவருக்கு மேற்கோள்களாக எடுத்தாளப் பயன் பட்டுள்ளன. நடுவு நிலையுடன் நின்று பொருள் விளக்கம் செய்துள்ளார். மூலநூலாசிரியர் கருத்தைப் பிறர் அறிய வேண்டும் எனக் கருதிய ஆர்வலர்.

"இளம்பூரணர் தமிழ் நன்கு பயின்றவர். தமிழ் மரபு முற்றும் உணர்ந்தவர். வடமொழி அத்துணை பயிலாதவர். தருக்கம் முதலான கலைகளை மிகுதியும் அறியாதவர். ஆகலின் அவர்தம் தனித்தமிழ் நெஞ்சம் தமிழ் மரபிற்

கேற்ப உரை வகுக்கின்றது.'' என்று டாக்டர் க. ஆறுமுகன் கூறுகின்றார்.

சொல்லும் பொருளும்

தொல்காப்பியர் தந்த சொல்லுக்கு இவர் கூறும் பொருள் விளக்கம் ஆய்வாளர்க்குத் துணை செய்யும். அம்பல் (களவி. 49) என்பது முகிழ்த்தல். அஃது ஒருவர் முகக்குறிப்பினால் தோற்றுவித்தல், அவராவது சொல்லு தல். புலவி அண்மைக் காலத்தது; ஊடல் அதனின் மிக்கது. (களவி. 15)

வினாவிடை முறையில் பொருள் விளக்கம் தருவார். மெய்ப்பாட்டியல் நூற்பாவில் உள்ள மடம் என்பதற்கு விளக்கம் தரும் போது 'மடம்' என்பதற்கும் பேதமை என் பதற்கும் வேறுபாடு என்னையெனின், மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல்; பேதமை என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கொடல்'' எனக் கூறுகிறார்.

இலக்கியத்திலிருந்து எடுத்துக்காட்டும் மேற்கோளை உவமையாக்கிச் சொல்லுக்குப் பொருள் கூறுவார். மெய்ப் பாட்டியல் 24வது நூற்பாவில் உள்ள 'மாணாமை' என்ற சொல்லிற்கு விளக்கம் தரும் போது கலித்தொகையிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். 'மாணமறந்து உள்ளா நானில கலித்தே' என்றார் போல மாணாமை என்பது மிகாமை என உரைப்பினும் அமையும்.

ஆயர் என்பார் நிலை மெய்ப்பார் வேட்டுவர் என்பார். வேட்டைத் தொழில் செய்பவர் வந்ததுகொண்டு வராதது முடித்தல் என்பதனால் ஆய்ச்சியர் எனவுங் கொள்க என்று மரபியல் 112ஆம் நூற்பாவுரையில் கூறியுள்ளார்.

பாலைக்கு விளக்கம்

"நிலம் இல்லையென்றாலும் வேனிற்காலம் பற்றி வரும். அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை எனும் மரம் உண்டாம். அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார்."

தம்மதம் நிறுவ வழக்காற்றைக்காட்டல்

சொல்லிய முறையால் சொல்லவும் படுமே' என்ற நூற்பா அடி விளக்கத்தில் உம்மை எதிர்மறையாகலான் இம்முறையன்றி பிறவாய்ப்பட்டால் சொல்லப்படும். காடு, நாடு, மலை, கடல் என்பதே பெருவழக்கு. காடுறை நிலம் என்னாது உலகம், எனக் கூறக் காரணம் ஐவகைப்பூதம் ஐந்திற்கும் உய்த்துணர வைத்தவாறு கண்டுகொள்க.

மறுக்கும் முறை

நூற்பா 659 உரையில் "எனவே இந்நூலும் அவற்று வழிநூலும் எடுத்துக் காட்டுங்கால் தனக்கு முதல்வரா யினாரை நாட்டி அவர் கருத்தே பற்றிப் பிறர் செய்தா ரேனில்லது பிறர் மேல் தலைமை நிறீஇ அவர் கருத்துப் பற்றி இவர் செய்தானைக் கூறார். அங்ஙனங்கூறின் அவர் நூற்கே உரையெழுது வானல்லனோவென மறுக்க"

இளம்பூரணரின் அளவை நூல் புலப்பாடு

கிளவியாக்கம் (61) என்ற நூற்பா உரையில்

"ஆவாழ்க. அந்தணர் வாழ்க என்ற வழி ஒழிந்தனவும் ஒழிந்தாரும் சாக என்றவாறு அன்று" என உரைகூறி அருத்தாபத்திக்கு விளக்கம் தருகிறார்.

வினையியல் (43) "சிறப்பின் கண்ணும் காலம் மயங்கும்" என்ற நூற்பா விளக்கத்தில் அறஞ் செய்தான்துறக்கம் புகும்

என்றும் மறஞ்செய்தான் துறக்கம் புகான் எனப் பொருள் படும்படி அருத்தாபத்தியை விளக்குகிறார்.

அனுமானம் வழிப் புலப்பாடு

வினையியல் 46 ஆம் நூற்பா விளக்கத்தில் இக்காடு போகிற் கூறை கோட்பட்டின், எறும்பு மூட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது எனும் எடுத்துக் காட்டுகளில் அனுமானம் கூறப்படுகிறது, கருதுகோளினைக் கருதிக் கிளவியாக்கம் 19 ஆம் நூற்பா உரை அமைகிறது. உலகத்துப் பொருளெல்லாம் இருவகைப்படும் இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் என. இயற்கை உண்டெனில் செயற்கையும் உண்டு என்பது அனுமானமே.

பிறனுடம்பட்டது தானும்படல் உத்தி

மக்களென்று சுட்டப்படும் பொருளை உயர்திணை யென்று சொல்லுவர் ஆசிரியர் (சொல் 1). மெய்யுரை உள்ளோர் வாய்க்கேட்டுணர்க' (எச்.18) என்பது தந்திர உத்தி.

கிளவியாக்கம் 2 ஆம் நூற்பாவிளக்கத்தில் ஆடூஉ, மகடூஉ பல்லோர் அப்பொருள் மூன்றுபடவே அவற்றை உணர்த்துஞ் சொல் மூன்று வகைப்படும். என்றது. இது தந்திர உத்தி வகைமை கூறல்'' என்று உத்தியைச் சுட்டுகிறார்.

எய்தியது விலக்கல் கிளவியாக்கம் (12, 22) நூற்பாக் கள் விளக்கத்திலும் உரையிற் கோடல் எனும் உத்தி வினை யியல் 38 நூற்பா விளக்கத்திலும் இடம்பெறுவதைக் காணலாம். சிவணுங் குறிப்பின் எச்சொல்லாயினும் இடை நிலை வரையாக எனவே சிவணாக் குறிப்பினை வரையப் படும் என்பதாம். இறந்தது காத்தல் எனும் உத்தி விளிமரபு 9, 10 நூற்பா உரைகளில் காணப்படும் உத்தியாகும். எய்தாதது எய்துவித்தல், விளிமரபு 12, 28 நூற்பாக்

கள் விளக்கத்தில் அமைத்துள்ளார். எய்தியது ஒரு மருங்கு மறுத்தல்-இதனைத் தொல்கப்பியர் கையாண்டதாக இளம் பூரணர் குறித்தார். எய்தியது விலக்கல் என்ற உத்தியையும் இவ்வாறே கருதுகிறார்.

விளிமரபு 14 ஆம் நூற்பா விளக்கத்தில் உள்ள மொழி வாம் என்றல் என்ற உத்தி வேற்றுமையியல் 2ம் நூற்பா உரையில் கையாளப்பட்டுள்ளது. முடிந்தது காட்டல் கிளவியக்கம் 18 ஆம் நூற்பா விளக்கத்தில் வந்துள்ளது. வராததனால் வந்தது முடித்தல், எச்சவியல் 66 உரையில் உள்ளது. ஐயமறுத்தல் கிளவியாக்கம் 4 ஆம் நூற்பா உரையில் சுட்டப் படுகிறது. தொகுத்துக் கூறல்—இவ் வோத்து என்ன பெயர்த்தோவெனில் மாட்டேற்று உத்தி. இது விளி மரபு 25 ஆம் நூற்பாவில் வந்துள்ளது. வேற்றுமை மையங்கியல் 11 ஆவது நூற்பா விளக்கத்தில் ஏது உத்தி யைக் கூறினார். விளி மரபு 5ஆம் நூற்பாவை விளக்க பிறிது வந்தடைதல் எனும் உத்தி பயன்படுகிறது. எச்ச வியல் 29, 55 ஆகிய நூற்பா விளக்கத்தில் ஒழிவு கட்டுரை யெடுத்தது, ஒழி புணர்த்துதல் என்ற இரு உத்திகள் வழி பொருள் உரைக்கின்றார்.

உவமைகள் கூறி விளக்கல்

எழுத்ததிகாரம் 2-ம் நூற்பா விளக்கத்தில் ''சந்தனக் கோல் குறுகினவிடத்தும் பிரப்பங்கோல் ஆகாது. அது போல இகர உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிர் ஆகற்பாலன'' என்று உவமை கூறினார்.

மரபியலில் 19ம் நூற்பாவில் உள்ள சொற்களான கலத்தல், மயக்கம் ஆகிய சொற்களை விளக்க உவமை கூறு கிறார். ''களத்தலாவது முத்தும் பவளமும் நீலமும் மாணிக் கமும் விரவினாற் போறல்; மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செப்பும் உருக்கி ஒன்றாதல் போறல்.''

பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்

பரத்தையிற் பிரிந்த காலையான் என்ற கற்பியல்45-ம் நூற்பா உரையில் 'இதனாற் பயன் என்னை எனின் அது கருந்தோன்றும் காலம் என்க' என்று காரணம் சுட்டி விளக்குகின்றார்.

தம்கால வழக்கு நோக்கி உரை விளக்கம்

"அச்சுப் போலப் பூப்பூக்கும்! அமலே என்னக் காய் காய்க்கும்" என்ற விடுகதை (பிசி) இவரது உரையில் காணப்படுகிறது. உரையிற்கோடல் என்னும் உத்திமுறை

> ' எல்லா மொழிக்கும் உயிர் வரு வழியே
> உடம்படுமெய்யின் உருபு கொளல் வரையார்'
> (எழுத். 144)

என்ற நூற்பாவிளக்கவுரையில் "உரையிற்கோடல் என்பதனால், உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகர ஈறும் ஈகார ஈறும் ஐகார ஈறும் யகர உடம்படுமெய் கொள்வன" எனக் கூறுகிறார்.

4. சேனாவரையரின் உரை மரபுகள்

சொல்லுக்குச் சேனாவரையம் என்பதற்கேற்ப தொல் காப்பிய இலக்கணத்தின் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே ஆனாப்பெருமை சேனாவரையர் உரை எழுதியுள்ளார். ஆய்வுத்திறனுடைய உரையாசிரியராகத் திகழ்கிறார். சுருங்கச்சொல்லி விளங்கவைப்பார். பொருள் சுமந்த சொற்களைக் காணலாம். வினாவிடை அமைத்துத் தருக்க முறையில் உரைகூறுவார். மனனம் செய்து வைத்திருந் தால் முன்னும் பின்னும் உரைகளை அமைத்துச் செல்லும் பாங்கினைக்கண்டு மகிழலாம். சிங்க நோக்கு உத்தியைப் பயன்படுத்தி உரை கூறுவதில் வல்லவர். ஒவ்வோர் இயல் தொடக்கத்திலும் விளக்கம் தருவது இவரது மரபு. ஓசை

நயத்தில் ஆர்வம் உடையவர். மூல நூலாசிரியரின் கருத்துப் போலவே தம் உரையை நடத்திச் செல்கிறார்.

கிளவியாக்கம் "வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான், இவ்வோத்து கிளவியாக்கம் ஆயிற்று ஆக்கம்—அமைத்துக் கோடல்" தலைப்பில் உள்ள சொற்களை விளக்க வேண்டும் என்ற ஆய்வு அமைப்புமுறையை இதில் காணலாம்.

வடமொழிச் சொற்களை ஏற்ற இடங்களில் எடுத்தாள்கின்றார். சான்று ஞாபகம், அநுவாதம் *(10)* யோகவிபாகம் *(11)*.

திருக்குறளை மேற்கோள் காட்டுகிறார். திருக்குறள் மனனம் இவர்க்கு உண்டு. குறளாசிரியரின் 'இகழ்ச்சியின் கெட்டான் மகிழ்ச்சியின் மைந்துற்றான்' என்று குறள் கருத்து உரையில் இடம்பெறுகிறது. நன்னூலார் கருத்துக்களைச் சுட்டுகிறார்.

மக்கள் வழக்கினை உரையில் புகுத்தியுள்ளார். வழுக்களில்லாமல் சொற்களை அமைக்க வேண்டும் எனக் கருதும் அவர் "நொய்யும் நுறுங்கும் களைந்து அரிசி அமைத்தாரை அரிசியாக்கினார் என்பவாகலின்" என்று விளக்குவது மக்கள் பேசும் வழக்கை ஒட்டியதாகும்.

கதைகூறி விளக்கம் தருகின்றார். "தொன்னெறி மொழிவயின் ஆகுநவும்" *(449)* என்ற நூற்பாவை விளக்கும்போது நாட்டில் வழங்கி வந்த கதையைக் கூறுகிறார். ஆற்றுள் செத்த எருமை ஈர்த்தல், ஊர்க்குயவர்க்குக் கடன் என்பது முதலாயின" என்று சுருக்கமிகக் கதையை அமைக்கிறார்.

இளம்பூரணரை இவர் நாகரிகமாக மறுத்துத் தம்மதம் நிறுவுவார். அவர்க்கு அது கருத்தன்று, பிறர்மதம் மேற்

கொண்டு கூறினார் என்று உரையாசிரியர் கருத்தை மறுக்க நாகரிகமாகச் சொற்றொடர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

வினை முடிவு திருப்பத்திரும்ப வரல்

> நிலப்பெயர் (165) நூற்பா விளக்கத்தில்
> "நிலைப்பெயர்—அருவாளன், சோழியன் என்பன.
> குலப்பெயர்—மலையமான், சேரமான் என்பன.
> குழுவின் பெயர்—அவையத்தார், அத்திகோசத்தார் என்பன.

இன்று முதலியவை என்ற சொல்லாமல் நாம் குறிப்பிடும் சொல்லை உள்ளன இல்லன என்னுந் தொடக்கத்தன (170) எனுஞ் சொல்லால் குறிக்கின்றார்.

சில காட்டுக்களைத் தந்துவிட்டு 'வந்தவாறு கண்டு கொள்க' என்று கூறுவது இவரின் வழக்கம்.

செய்யுளில் ஆகாரம் ஓகாரமாகத்திரியும் என் பதற்கு குறுந்தொகை 'வேம்பயில் அழுவம் முன்னியோரே! (7), நற்றிணை 'நெகிழப் பருவரல் செப்பாதோயே'' (70) ஆகிய இரு மேற்கோள் கள் காட்டுகிறார். பாட்டில் வடமொழிச் சொற்கள் காணப்படின் வடமொழிச் சிதைவு எனச் சுட்டுவது வழக்கம்.

மூல நூலாசிரியரின் கருத்தை உரையில் தந்துள்ளார். வினையியல் 201 உரையில் பொது வகையாற்கூறிய வினைச் சொல்லைச் சிறப்பு வகையானுணர்த்திய வெடுத்துக் கொண்டார்.

குறிப்பினும் வினையினும் நெறிப்படத்தோன்றி (201) என்ற நூற்பாவில் உள்ள 'நெறிப்படத்தோன்றி' என்ற சொற்றொடர் வந்த காரணத்தைச் சிறப்பாக விளக்குகிறார். வினை சொற் கால முணர்த்துங்காற் சில நெறிப்பாடுடைய வென்பது விளக்கிய 'நெறிப்படத் தோன்றி' என்றார்.

'முன்னத்தின் உணரும் கிளவி' என்ற நூற்பா.459 விளக்க முடிவில் ''இதுவும் மேலையோத்துக்களுள் உணர்த்துதற்கிய பின்மையான் ஈண்டுணர்த்தினார்'' என்கிறார். மனனமுறையையும், காரண காரியத்தையும் இவ்விளக்கம் காட்டுகிறது.

'எச்சவியலில் வினை யெச்சச் சொற்களை விளக்கும் போது அவை யாவை எனப்பகுத்து, அடுக்கடுக்காக எடுத்துக்காட்டுக்கள் தந்து இடையே எனவும் என்ற சொல்லைப் பலமுறை அமைந்துள்ளார்.

''இடைச் சொல்லெல்லாம் வேற்றுமைச் சொல்லாயினும், அவற்றுள் ஒரு சாரனற்றை வேற்றுமைச் சொல்லென்ப, இயற்சொல்லுள் ஒரு சாரணவற்றை இயற்பெயரென்றாற்போலவென்பது. இதுமோர் நயம்'' (ப.555) விளக்கவுரையில் வினை எச்சத்தொடரைத் திரும்பத் திரும்பக் கையாண்டு நயமும் கூறுகிறார்.

மனனப்பயிற்சி உடையவர் சேனாவரையர். எச்சவியல் 527 நூற்பாவுரையில் உரையாசிரியர் கூற்றை நினைவு படுத்துகிறார். ''உரையாசிரியர் வினையியலுள் ஒருப்பட்டன சில...''

தம்கால அருகிய வழக்கையும் கூறுகின்றார். எச்சவியல் 425 நூற்பா உரையில் ''கட்டுரையகத்து ஒருவன் ஒன்று சொல்லியவழி அதற்குடம்படாதான் கண்டீரே'' எனும் அடுக்கு ''இக்காலத்தரிய; வந்தவழிக்கண்டு கொள்க'' என உரைக்கிறார்.

ஆற்றுப்படையில் முன்னிலை ஒருமை பன்மையுடன் முடியலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு மலைபடுகடாத்திலிருந்து தருகின்றார். எச்சவியல் 462 நூற்பா தேவை தானா என ஆய்ந்து காரணம் சுட்டித் தேவைதான் என நிறுவுகிறார்.

வட நூற்கடலை நிலைக்கண்டுணர்ந்த சேனாவரைய ராதலின் வடமொழி இலக்கணக் கொள்கைகளை விளக்கி, விதிகளை மேற்கோள்களாக எடுத்தாள்கின்றார். இவரது உரை திட்பமும் நுட்பமும் உடையது.

5. நச்சினார்க்கினியரின் புலப்பாட்டு நெறி

தமிழில் தொடக்க கால நூல்கள் யாவும் செய்யுள் வடிவின. அவற்றிற்கு உரை விளக்கம் இல்லை என்றால் புரிந்து கொள்ள இயலாது. ஆதலின் உரையாசிரியர்களின் பணி மதிப்பிட முடியாத நிலையில் உள்ளது. உரையாசிரியர்கள் பலர் தத்தம் அறிவுத்திறனுக்கு ஏற்ப இலக்கண இலக்கிய நூல்களுக்கு உரைவிளக்கம் தந்தனர். அவருள் நச்சினார்க்கினியர் தரும் உரையின் நெறியைப் பத்துப் பாட்டு உரை விளக்கம் வழிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியர் என்று இலக்கணக் கொத்து ஆசிரியரால் போற்றப்படும் இவ்வுரையாசிரியர் இலக்கணம், இலக்கியம் ஆகிய இருதுறை நூல்களுக்கும் உரை தந்துள்ளார். இலக்கண நூல்களில் தொல்காப்பியத்திற்கும், இலக்கிய நூல்களில் பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி ஆகிய நூல்களுக்கும் உரை விளக்கம் எழுதியுள்ளார். "நூல்களுக்கு உரை இயற்றித் தொடங்குமுன் இவர், தமிழ்மொழியிலுள்ள பலப்பல நூல்களை ஆழ்ந்து பயின்று புலமைபெற்றுள்ளார்" ஆய்வாளன் தான் தேர்ந்த தலைப்பை ஒட்டிய நூல்களை நன்கு பயிலவேண்டும். நினைவிற் கொள்ள வேண்டும். உரிய இடத்தில் மேற்கோளாக தம் கருத்தை வலியுறுத்த அந்நூல் கருத்துக்களைக் கையாள வேண்டும்.

> "மனத்துள் அனைத்தும் நிலைக்கப்படித்து
> மீண்டும் மீண்டும் கற்றுக் கற்று
> வரும் நினைவதனில் ஆய்வுரை வரைக" 2

என்பதற்கேற்ப நச்சினார்க்கினியர் ஓர் உரையாசிரியராக மட்டுமின்றி ஆய்வாளராகவும் திகழ்கிறார்.

நவின்ற வாய்மை நச்சினார்க்கினியர் பாரத்துவா சகோத்திர அந்தணர். கல்வி மேம் பாடுடையவர்.

"நூற்படு வான்பொருள் நுண்ணிதின் உணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தின்
நாற்பொருள் பொதிந்த தாக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தையன்"[3]

சைவ நூல்களைக் கற்றுத் தெளிந்தவர். இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர் ஆகிய மூவர்க்கும் காலத்தால் பிந்தியவர். செந்தமிழ் மாமுகில் வள்ளல் என்று தனித் தமிழ் தந்தை மறைமலையடிகள் இவரைப் பாராட்டுகிறார். இவ்வுரையாசிரியர் மேற்கோளாகக் கையாண்ட பெரு நூல்களை எண்ணி வியந்து,

"நச்சினார்க் கினியன் எச்சில்
நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"[4]

எனப் போற்றுவர் இவர் பொருளைப் புலப்புடுத்தும் போது பின்பற்றிய உத்திகளைக் காண்போம்.

எடுத்துக்கொண்ட நூலின் காலம், சமயம், உள்ளப் பாங்கு, நூற்போக்கு ஆகியவற்றைத் தெளிவாக அறிந்து பொருளைப் புலப்படுத்துபவர். கொண்டு கூட்டுப்பொருள் எனும் பொருள்கோளைப் பின்பற்யே பொருள் உரைப்பது இவர் கையாண்ட உத்தியாகும். தேவையான இடங்களில் இலக்கணங்கூறி வினைமுடிவுகளை விளக்குவார். தனிச் சொற்கு இடம் நோக்கிப் பொருள் கூறுவார். சொற்களுக்கு இயைபு தொடர்ச்சிபற்றி விளக்கம் தருவார். சிறந்த மேற் கோள்களைக் கையாள்வார். பழைய பாடல்களை உரை நடையாக்கிக் காட்டுவார். வினாவிடை முறையிலும்

காரண காரியமுறையிலும் உரை விளக்கம் கூறுவார், உவமை காட்டி விளக்கும் உத்தியைக் கையாள்வார். பிறர் கருத்துக்களை மறுக்கும்போது அவர்க்கு அது கருத்தன்று என்றே மறுப்பார், எடுத்துக்காட்டுத் தரும்போது வேண்டிய அடிகளை மட்டுமே சுட்டுவார், ஆசிரியர் பெயரைச் சுட்டார். ''ஒரு பாடலை எடுத்து இடையில் ஒடித்து மடக்கி முன்னும் பின்னும் கொண்டு கூட்டிப்பொருள் உரைத்தல் இவருடைய முறையாகும்'' [5] வரலாற்றுச் செய்திகளை நினைவூட்டியும் பழங்கதை (தொன்மை) வரலாறு கூறியும் பொருளைப் புலப்படுத்துவார். கவிதை நடையை இவரது உரையில் காணலாம். எளிமை, எழில், தெளிவு ஆகியன இவரது உரைப்பண்புகளாம். உள்ளாய்வு முறை இவர் உரையில் காணப்படும் ஆய்வுமுறையாகும், இலக்கியவுரையில் இலக்கண மேற்கோள்களைச் சுட்டுவார். தம்கருத்தை நிலை நாட்டுவதிலும் கவனம் செலுத்துபவர். வடமொழிப் புலமையார் ஆதலின் அம்மொழி மரபினையும் தம் உரையில் வலிந்து புகுத்தியுள்ளார்''...நச்சினார்க் கினியர், வட மொழியில் அவர் (சங்கராசிரியர்) எழுதிய உரைகளைப் பன்முறை பார்த்து அவைபோல், தமிழிலும் உரை வழங்கப் புகுந்து தமிழ்ச் செய்யுள் வரம்பழித்து விட்டார் என்று உணர்க'' [6] தம் பன்னூற் பயிற்சியினை யும் நினைவாற்றலையும் ஏற்ற இடங்களில் பயன்படுத்தி மாட்டு என்ற உத்தியைக் கையாண்டு பொருளை வெளிப் படுத்துவார். சுருங்கக் கூறின் இவர்தம் உரை ஆராய்ச்சித் திறன் மிக்க ஒன்றாகும், ஐரோப்பியரின் உரை விளக்கத் துடன் இவரது உரை விளக்கம் ஒப்பிடத்தக்கதாகும்.

சொல்லும் பொருளும்

இலக்கணக்குறிப்புக் கூறித் தனிச்சொல்லுக்குப் பொருள் விரிக்கிறார். நெடுநல்வாடை: ''இப்பாட்டிற்கு நெடுநல் வாடை என்று பெயர் கூறினார், இப்பெயர் நெடிதாகிய

நல்லவாடை என விரிதலில் பண்புத் தொகையாயிற்று. வாடையென வாடைக்காற்றிற்றோன்றின கூதிர் பாசறையை உணர்த்தலிற் பிளந்த வழிக் கூறலென்னும் ஆகு பெயராய் நின்றது'' 7

பின்னமை நெடுவீழ்: குத்துதல் அமைந்த நெடிய தாதலினான் என்று நச்சினார்க்கினியர் இடம் நோக்கிப் பொருள் உரைக்கின்றார். வேந்தனைப் பிரிந்திருக்கும் கோப்பெருந் தேவி மார்பில் தாலி ஒன்றுமே தூங்கா நிற்க என்னுமிடத்து நிகழ்ச்சிக்கு ஏற்ப உரை தரப்பட்டுள்ளது. பறி—மீன்வாரி எடுக்கும் பறி (பெரும் பாண் 229); தட்டை—தட்டப்படுதலின் தட்டை என்றார் (மதுரை 205) கல்லா இளைஞர்—தம் தொழிலை ஒழிய வேறு கல்லாத இளைஞர் (சிறுபாண் 33) போன்றவை சொற்றொடர் விளக்கங்கள்.

பொருள் கொள்ளும் முறை

செய்யுளிலிருந்து பொருளைக் கொள்ளுதல் பொருள் கோள் எனப்படும், தொல்காப்பியர் 'பொருள்கோள்' என்பதை 'மொழிபுணர் இயப்பு' என்றழைத்தார், பொருள் கோளின் வகைகளாக நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என்னும் நான்கைத் தொல்காப்பியர் கூறுகிறார். நன்னூலார் முன்னோர் மொழி பொருளுடன் யாற்று நீர். பூட்டுவில், தாப்பிசை, கொண்டு கூட்டு, அளை மறிபாப்பு சேர்த்து எட்டாக வகைப்படுத்துகிறார். தொல்காப்பியர் கூறிய மொழிமாற்றே கொண்டு கூட்டு எனும் பெயர் பெற்று வழங்கியது. செய்யுளில் உள்ள சொற்களை வேறு வேறு இடங்களிலிருந்துகொண்டு வந்தும் கூட்டலாம். செய்யுளில் காணப்படாத சொல்லைக்கொண்டு வந்தும் கூட்டலாம். உள்ள பொருளைக் கொள்ளுகின்ற முறையாகக் கொண்டு கூட்டலாம். செய்யுளில் இல்லாத பொருளைக்கொண்டு வந்தும் கூட்டலாம். செய்யுளில் பொருள் நடக்கின்ற முறையை நச்சினார்க்கினியர் தம்

போக்கில் மொழிய அவர் ஏற்கும் பொருள்கோள் உத்தி கொண்டு கூட்டு ஆகும்.

> " மணிமலைப் பணைத்தோள் மாநில மடந்தை
> அணிமுலைத் துயல் வருடும் ஆரம்போல 9

என்ற சிறு பாணாற்றுப்படை அடிகள் பொருள் அடிப்படையில் வரும்போது

> ' பனைத்தோற் மாநில மடந்தை மணிமலை
> அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம்போல'

என்று நச்சினார்க்கினியர் மாற்றிப் பொருள் உரைக்கின்றார்.

"வசையில் புகழ் வழங்கு வெண்மீன்" [10] என்ற பட்டினப் பாலை அடியில் உள்ள 'வசையில் புகழ்' என்ற சொற்றொடரை ஆறாம் அடியில் உள்ள காவிரி' என்பதனுடன் கொண்டு கூட்டிப் பொருள் உரைக்கின்றார்.

முல்லைப் பாட்டில் பதினெட்டாவது அடியில் உள்ள நல்லோர் என்ற சொல்லை ஏழாவது அடியில் கொண்டு சேர்த்துப் பொருள் அமைக்கிறார்.

'அருங்கடி மூதூர் மருங்கில் நல்லோர் போகி' [11] என்று அமைத்துப்பொருள் கூறுவது கொண்டு கூட்டு பொருள் கோள் விகற்பங்களில் ஒன்றாகும். தம் கருத்தைப் புலப் படுத்துவதற்கு அவர்மேற்கொள்ளும் உத்தியே இக்கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆகும்.

மாட்டு

இதுவும் ஒரு பொருள்கோள் வகை என்று நச்சினார்க்கினியர் கருதுகிறார். மாட்டு என்பது பொருள்கோள் வகைகளுள் ஒன்று அன்று என மருதூர் ச, அரங்கராசன் கூறுகிறார்.[12] ஒன்றிற்குக் கூறப்பட்ட செய்தி மற்றொன்றற்கும்

பொருந்தும் எனக்கூறுவது மாட்டேறு. ஒத்தவிதியுடைய வற்றை, இதுவும் அது போலவே கொள்க என நினைவு படுத்தும் முறையே மாட்டேறு. இம்மாட்டேறுவின் வரைவு இலக்கணம் 'மாட்டு' என்பதற்கும் பொருந்தும். செய்யுளுக் குரிய உறுப்புக்களில் ஒன்றாக இதனைத் தொல்காப்பியர் குறித்தார்.

> " அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய நிலை
> யினும்
> இயன்று பொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
> மாட்டெனமொழிப பாட்டியல் வழக்கின்" [13]

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் தரும்போது பொருள்கோள்வகையுள் மாட்டு ஒன்றே என உரைக்கிறார். இளம் பூரணரும் பேராசிரியரும் வேறுபட்டு உரைக்கின்றனர்.

காரண காரிய விளக்கம்

பட்டினப் பாலை "இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாகலின் இதற்குப் பட்டினப்பாலை என்று பெயர் கூறினார்.

திருமுருகாற்றுப்படையில் முருகனைப் பற்றி விளக்கும் போது முருகன் தொன்மைகளைச் சுட்டுகிறார்.

நெடுநல் வாடையில்

பலரோடு முரணிய பாசறைத்தொழில் என்ற 188வது அடிக்குச் சேரன் செம்பியன் முதலிய எழுவரோட மாறு பட்டுப் பொருகின்ற பாசறை இடத்துப் போர்த் தொழில் என எழுதியவர் மதுரைக் காஞ்சியில்,

'இருபெரு வேந்தரோடு வேளிர் சாய' (55) என்ற அடிக்குச் சேரன் சோழன் ஆகிய இருவராகிய பெரிய அரச

ருடனே குறு நில மன்னரும் இளைக்கும்படி' என்று எழுதிக் கதையை விரிவு செய்கிறார். நெடுநில மன்னர் இருவர் குறுநில மன்னர் ஐவருடன் போர் செய்ததாகக் கூறி எழுவர் யார் எனப்பட்டியல் தருகிறார். எழுவராவர்; சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மாள், பொருநன் என்பர், 'இது தலையலங்கானத்து வென்றமை கூறிற்று' என்று வரலாற்றுச் செய்தியையும் உடன் கூறுகிறார்.

இவ்விரு பாட்டுகளின் பாட்டுடைத் தலைவர் தலையலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆதலின் அப்பாண்டியன் பற்றிய செய்திகளைப் புறநானூறு வழி அறிந்து பின்னர் உரை எழுதியிருப்பது இவரது வரலாற்றுப் புலமையைத் தெளிவுபடுத்தும். ஆசிரியரின் பன்னூற்பயிற்சி, ஆராய்ச்சித்திறன், நினைவாற்றல், வரலாற்றுப் புலமை யாவும் இதனால் அறியக் கிடக்கின்றன எனலாம்.

'வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்' (176) என்ற நெடுநல் வாடை அடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரை ஆய்வாளர்களின் சிந்தனையைத் தூண்டியது. பாண்டியனுக்குரிய அடையாள மாலையாகிய வேப்பமாலை பாடலில் குறிப்பிடப்பட்டிருப்பதால் நெடுநல்வாடை புறத்திணைக்கு உரிய பாடலே என்பது நச்சினார்க்கினி கருத்து.

குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிடும் 99 வகையான பூக்களை ஆராய்ந்து பார்த்து இலக்கண நூற்பா உரையில் எழுதிகாட்டித் திணை மயக்கத்தைத் தெளிவு படுத்தியுள்ளார் நச்சினார்க்கினியர். இலக்கிய ஆய்வை இலக்கணவுரையில் மேற்கோளாக்குகிறார்.

கதை கூறிப் பொருள் விளக்கம் தரல்

'திறல் வேல் நுதியின் பூத்தகேணி' (172—173 சிறுபாணாற்றுப்படை) விறல்வேல்வென்றி வேலூர் என்ற

நச்சினார்க்கினியர் முருகன் கையில் வளயினை உடைத்தாகிய வேலின் நுதிபோலே கேணி பூக்கப்பட்ட வெற்றியை உடைய வேலாலே வெற்றியையுடைய வேலூர் என்று கூறி ஒரு கதையையும் இணைக்கிறார். 'நல்லியக் கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி, முருகனை வழிபட்ட வழி அவன் 'இக்கேணியிற் பவை வாங்கிப் பகைவரை ஏறி' என்று கனவிற்கூறி, அதிற்றன் வேலாக நிருமித்ததொரு கதை பூரணக் கூறிற்று' என்பதே அக்கதை.

'திருதரு மரபின் உரவோன்' மன்ற பெரும்பாணாற்றுப் படை அடிக்கு நச்சினார்க்கினியர் கடலின் தலைகொண்டு வந்து ஏறவிட்ட மரபால். திரையன் என்னும் பெயரையுடையவன்'' என்று பொருளை உரைத்து ஒருகதையும் கூறுகிறார். 'நாகப்பட்டினத்துச் சோழன், பிலத்துவாரத்தால் நரகலோகத்தே சென்று நாக கன்னியைப் புணர்ந்த காலத்து அவள் ''யான் பெற்ற புதல்வனை என்ன செய்யக் கடவேன்'' என்ற பொழுது, தொண்டையை அடையாளமாகச் சுட்டிக் கடலிலே விட, அவன் வந்து கரை ஏறின், அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாட்டாட்சி கொடுப்பல்' என்றவன் கூற அவளும் புதல்வனே அங்ஙனம் வரவிடத் திரை தருதலின் திரையன் என்று பெயர் பெற்ற கதை கூறினார்.

''உரை எழுதும் முறை, சொல்லும் வகை, சொற்பொருள் உரைக்கும் திறன், மேற்கோள் ஆட்சி, உரைநடைப் போக்கு ஆகிய எல்லாவற்றிலும் நச்சினார்க்கினியர் பேராசிரியரையே பின்பற்றுகின்றார்.[14] ''உரையாசிரியர்களின் உள்ளத்தினின்றும் வெளிப்படும் சொற்கள் அனைத்தும் அவர்களது அறிவு வெளிப்பாடாகவும் சூழ்நிலைச்சார்புடையனவாகவும் அமைன்றன.''[15]

மேற்கோள் தரும் நூலாசிரியர் பெயரைச் சுட்டியிருப்பின் ஓர் ஆய்வேட்டிற்குரிய எல்லா நலனும் பெற்றுத் திகழும் உரையாக இனியர் உரை அமையும்.

குறிப்புகள்

1. அரவிந்தன், மு. வை. உரையாசிரியர்கள், ப. 110
2. தமிழண்ணல், ஆய்வியல் அறிமுகம். ப. 218
3, உரைச்சிறப்புப்பாயிரம்
4. மேற்படி
5. கணபதி, வி. தமிழ் இலக்கண உலக்கிய அறிமுகம், ப. 151
6. மறைமலையடிகள்—முல்லைப் பாட்டு ஆராய்ச்சி
7. நச்சினார்க்னியர் உரை—பத்துப்பாட்டு உ. வே. சா. பதிப்பு
8. நெடுநல்வாடை ப. 136
9. சிறுபாணாற்றுப்படை
10. பட்டினப்பாலை
11. முல்லைப்பாட்டு
12. அரங்கராசன், சு—பொருள்கோள் ப. 112
13. தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் 210
14, அரவிந்தன் மு. வை. உரையாசிரியர்கள் ப. 200-201
15. கி. ப. த. மன்றக்கருத்தரங்கு ஆய்வுக்கோவை (15) ப.47

6. பேராசிரியர் உரைநெறி

தொல்காப்பியப் பொருதிகாரத்தின் இறுதி நான்கு இயல்களுக்கு உரை எழுதிய பேராசிரியர் புலமைத்திறன் மிக்கவர். பிற இலக்கண நூலாசிரியர் கருத்துக்களை மறுத் துரைக்கும் போக்குடையவர். உரை சொல்லும் வகையிலும் சொற்பொருள் உரைக்கும் திறனிலும், மேற்கோள் ஆட்சி

யிலும் பின்னுரையாளர்க்கு முன்னோடியாகத் திகழ்பவர். பொருளதிகாரம் முழுமைக்கும் உரை தந்தார் எனினும் மெய்ப்பாட்டியல் உவம இயல், செய்யுளியல்,மரபியல் ஆகிய வற்றின் உரைவிளக்கங்கள் மட்டுமே இன்று கிடைத்துள் ளன. இவற்றின் வழி அவர் உரைநெறி காண்பதே இங்கு நோக்கம்.

சொற்பொருள் விளக்கம்

'பண்ணைத் தோன்றிய' என்பதற்கு முடியுண்ட வேந்த ரும் குறுநில மன்னரும் முதலாயினார் நாடக மகளிர் ஆடலும், பாடலும் கண்டும், கேட்டும், காமம் நுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய' என விளக்கம் தருகின் றார். வனப்ப- (செய் 235) பெரும்பான்மையும் பல உறுப்பு திரண்ட வழிப்பெறுவதோர் அழகு. அரற்று- அழகையன்றி பலவும் சொல்லித்தன் குறை கூறுதல்-கனவுவாய்வெருவுதல்; தத்தை—பெருங்கிளி; கிளி—சிறுகிளி; கொலை; அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்று உரைத்தல் எனச் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகின்றார்,

மறுப்புக்கூறும் முறைகள்

'அவை சான்றோர் செய்யுள் அல்ல என மறுக்க'என்று செய்யுளியலிலும், .தமிழ் நூலுள்ளும் தமது மதத்துக்கு ஏற் பனமுதல் நூல் உள என்று இக்காலத்துச்செய்து காட்டினும் அவை முற்காலத்து இல் என்பது, முற் கூற வந்த வகையான் அறிபப்படும்' என்று மரபியலிலும் இலக்கணக் கொள்கை கனவு மறுக்கிறார். முற்கால நூல்களுக்கு ஆதரவு திரட்டுவ தாக இவரது மறுப்புரைகள் அமைந்துள. மறுத்துரைப் பதற்குத்தக்க காரணங்களையும் காட்டுபவர் உவமை இயலில் ''இவ்வோத்தினில் கூறுகின்ற உவமங்கள் சிலவற் றையும் சொல்லதிகாரத்தில் சொல்லுகின்ற சில பொருள் களையும் வாங்கிக் கொண்டு மற்றவை செய்யுட் கண்ணே

அணியாம் என இக்காலத்து ஆசிரியர் நூல் செய்தாரும் உளர்' என்று உரை கூறுதற்கு ஏற்பக் காரணங்களையும் சுட்டுகின்றார். 'அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணி என்று இலக்கணம் கூறப்படா, என்னை? வல்லார் செய்யின் அணியாகியும், அல்லார் செயின் அணியன்றாகியும் வரும். தாம் காட்டிய இலக்கணத்தில் சிதையா வழியும், 'எல்லாம் தொகுத்து அணி எனக் கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணி எனக் கூறுதல் பயமில் கூற்றாம்.'

மரபு என்னும் சொல்லை விளக்க வாதமுறையுடன் ஒழுகிசையும் சேர உரை தருகின்றார். "மரபென்ற பொருண்மை என்னையெனின்: கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் செய்யுளியலுள் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமின்றி, இருதிணைப் பொருட் குணணாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும்பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும் அஃறிணை புல்லும் மரனும் பற்றிய மரபும், அவை பற்றி வரும் உலகியலின் மரபும், நூன்மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது". இவ்வுரையில் ஒப்பாய்வும் அடங்கியுள்ளது.

ஆய்வுத்திறன்

உவமைகள் வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் பிறக்கும் என்பார் தொல்காப்பியர். (உவம) உருவும் நிறமும் பண்பில் அடங்கும் எனினும் தனித்தனி யாகத் தொல்காப்பியர் கூறியதற்குத் தனி விளக்கம் தருகிறார் பேராசிரியர். இவ்விளக்கம் அவரது ஆய்வுத் திறனைப் புலப்படுத்தும். இரவுக்குறிக்கண் கூற்று நிகழ்த் தும் தலைவன் நிறம்பற்றி எங்ஙனம் அறிவான்? தொட்டு உணரக்கூடிய உருவம் பற்றியே கூறமுடியும். பகல் குறியில் சந்தித்தால் நிறம் பற்றிய உவமை கூறுவது இயல்பு என்பதை உணர்ந்தே தொல்காப்பியர் மெய், உரு ஆகிய

வற்றைப் பண்பு என்ற ஒன்றினுள் அடக்கவில்லை எனப் பேராசிரியர் விரித்துரைப்பது அவரது ஆய்வுத் திறனைக் காட்டும்.

உவமை கூறி விளக்கல்

கொச்சகம், ஒப்பினாகிய பெயர், ஓர் ஆடையுள் ஒரு வழி அடுக்கியது கொச்சகம் எனப்படும்; அதுபோல ஒரு செய்யுளுள் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகம் எனப் பட்டது. (செய்: 121) இக்காலத்தார் அதனைப் பெண்டிர்க்கு உரிய உடை உறுப்பாக்கியும் கொய்சகம் என்று ஆக்கலின் என்பது *(152)* என்று உவமை கூறி விளக்கம் தருகிறார்.

மறுத்து உரைத்தல்

'தெரிந்தவர் விரிப்பின் வரம்பில் பல்கும் *(414)*. இது தொடைக்குப் புறனடை. இனி ஐந்து தொடை பலவற்றொடுங் கூட்டியும் பிறவாற்றான் விரிப்பும் வரம்பிலவாமைன்பாருமுளர். அவை எவ்வாறு விரிப்பினும் வரம்பில வல்லவென மறுக்க.

வினா விடைமுறை

413 நூற்பா உரையில் 'இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரஞ் செய்த தென்னையெனின், அங்ஙனமே அதனை ஞாபகப்படச் செய்தான் ஆசிரியன் ஒரு காரணம் நோக்கி. என்னை? இத்தொடைகளை அடியோடு மாறுங்காற் குறைக்கப்படுபவன உளவென்பதூஉம், அவை தொண்டு தலையிட்ட ஐந்து பத்தளவும் ஆறுமுதலாகக் களையப்படுமென்பதூஉங் கோடற்கென்பது.

முன்னிலைப் படுத்திக் கூறல்

> அங்கதந்தானே அரில் தபத்தெரியிற்
> செம்பொருள் கரப்பென இரு வகைத்தே—*(436)*

என்ற நூற்பா உரையில் படிப்பவரை முன்னிலைப் படுத்து கிறார். அங்கதம் என்பது வசை. அதனை இருவாற்றாற் கூறுகலென்பான் இது கூறினான். அவையாமாறு முன்னர்ச் சொல்லுதும், 'அரிறப' வென்ற தென்னையெனின் அவை புகழ் போன்று வசையாதலும் பட்டுத் தோன்றும் மயக்க முடைய வாதலின் மயக்கமற்ற தெரியின்னென்றவாறு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குகிறார்.

நூற்றுவர் தலைவனைக் குறங்கறுத்திடுவான்' (கலித் 52) என்பது புகழ் போன்று வசையாயிற்று; என்னை? கொன்றானாயினுங் குறங்கினைக் கதத்தண்டு கொண்டு ஏற்றுதல் குற்றமாதலின் என்பதறிக.

இலக்கணக்குறிப்பு

'செய்யுட்டாமே ணிரண்டென மொழிப (339) என்ற நூற்பாவை விளக்கும்போது உவமை கூறி இலக்கணக் குறிப்புத் தருகிறார். வாய்த்துள்விக்குள் என்றாற்போலச் செய்யுள் என்பது தொழிற்பெயர் என்று இலக்கணக் குறிப் புத் தருகிறார்.

''உரையாசிரியர்கள் கூறும் எடுத்துக் காட்டுக்கள் நூற் பாவின் கருத்தை மட்டும் விளக்க எடுத்துக் கொண்டவை என்று கொள்வதகு இல்லை. அவைகளினால் அவரவர் தம் செவ்வியகறியும், புலமைத்திறமும் சூழலும் வெளிக் கொணரப்படுகின்றன என்று கூறுதற்கிடனுண்டு'' (ஆய்வுத் கோவை 14 தொகுதி 4. ப. 47).

மனனம்

பொருளோடு புணர்ந்த நகைமொழிக்கு விளக்கம் தந்தவர் ''இவ்வுரைப் பகுதி பிறிதும் ஒன்றுண்டு, அது மரபிய லிலும் பகுத்துச் சொல்லுதும்'' எனக் கூறுகிறார் பேராசிரி யர். உரைமனனம் இருந்தால்தான் நினைவுபடுத்திக் காண இயலும்,

7. சிலப்பதகார உரையாசிரியர்களின் புலப்பாட்டு நெறி

சிலப்பதிகார உரையாசிரியர்கள் என்ற வரிசையில் அரும்பதவுரைகாரர், அடியார்க்கு நல்லார், ந.மு. வேங்கட சாமி நாட்டார், பொ. வே. சோமசுந்தரனார் ஆகியோர் இடம் பெறுகின்றனர், புகார்க்காண்டத்திற்கு மட்டும் ஆர்.கே. சண்முகம் செட்டியார் உரை எழுதியுள்ளார். நூல் தோன்றிய காலத்திற்கும் உரை எழுந்த காலத்திற்கும் கால வேறுபாடு உண்டு. இவற்றுள் பழைய உரை அரும்பத உரையே. நல்லார் உரையோ ஊர் சூழ் வரி வரைதான் கிடைத்துள்ளது.

அரும்பதவுரைகாரர்

அரும்பதவுரைகாரர் தமக்கு முன் இருந்த உரையாளர் களை 'என்பாருமுளர்' எனுஞ் சொற்றொடரால் குறித் துள்ளார், தான் கொண்ட பொருள்கோளை உரைத்த பின் அதற்கு முரண்படக் கூறியவர்களையே'என்பாருமுளர்' எனக்குறித்தார். பிறர் மதம் போற்றும் பண்பு அவரிடம் காணப்படுகிறது. காலத்தால் முற்பட்ட உரையே இது வாகும். அரும்பதவுரைகாரர் பதவுரையே தந்தார். ஆனால் நல்லார் பொழிப்புரையும் தந்துள்ளார். உவமையாலும், வருணனையாலும் விளக்கவுரை தருகிறார் நல்லார். படிப் போரைத் தன் வசப்படுத்தும் வகையில் அடியார்க்குநல்லார் (பதிகம் வரி 0)—''அது கொண்டென்றார், அச்சிலம்பால் மேல்விளைவன தோன்ற,அது அநியாய புரத்தே புகழுகின்ற வன் கூற்றத்தையும் உடன் கொண்டு புக்கானென்றாற் போன்றிருந்தது''. முன் உரைகாரரை இவர் மறுக்கும் போது பெயர் குறிப்பிடாது மறுக்கிறார். துணிவு மிக்கவ ராய் மறுப்பார். சான்று 'நெடுவேள் குன்றம் (கட்டுரை வரி 190) என்பதை அரும்பதவுரைகாரர் 'திருச்செங்கோடு' என்று கூற, நல்லார் இவ்வூர்க்குப் பதிகத்தில் விளக்கம்

தந்து 'விடுகிறார். "குன்றம்—கொடுங்கோளூருக்கு அயலதாகிய செங்குன்றென்னும் மலை. அது திருச்செங்காடென்பவாலெனின் அவரறியார், என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சி நகர்க்கு வடகீழ்த் திசைக்குக் கண்ணதாய் அறுபதின் காத ஆறுண்டாகலானும், அரசனும் உரிமையும் மலைகாண்குவமென்று வந்து கண்ட அன்றே வஞ்சி புகுதலானும் அது கூடாமையினென்க."

தடைவிடை கூறி விளக்கம் தருகிறார். வாதத் திறமையை இது புலப்படுத்துகிறது. நல்லார் முன்னூல் பயிற்சி உடையவர். தொல்காப்பியரை 'ஆசிரியர்' என்று தமது உரையில் குறிப்பிடுகிறார். மங்கலவாழ்த்துப் பாடலில் கோவலனைச் செவ்வேள் என்றுக் கூறும் அடிகளின் நோக்கத்தை அடியார்க்கு நல்லார் தெளிபடுத்துகிறார். மூலநூலாசிரியரின் நோக்கத்தைப் புலப்படுத்த நல்லார் உரை துணை செய்கிறது. "செவ்வேளென்றார், வேட்கிருவருளராகலின். முருகவேளைச் செவ்வேறென்றார்."

சொற்பொருள் விளக்கம்

'சிலம்புள கொண்ம்' என்பதில் உள்ள 'சிலம்புள' என்பதற்குத் தெளிவான விளக்கம் தருகிறார். "சிலம்புளவென்றாள். இவையொழிந்த கலனைல்லாம் தொலைதலால் இவை அணியாது இருத்தலின் அவள் அறியானாகக் கருதினும் அவன் தளர்ச்சி கூறுதலால்தான் இவையுண்மை நினைந்து கூறினாள் என்க. புலந்து கூறினாளெனின் கற்பின் தன்மை அன்றாம்."

அடியார்க்கு நல்லார் புலப்பாட்டு நெறி

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். இவரை நிரம்பையர் காவலர் என்றும் அழைப்பர். கலிங்கத்துப் பரணிப் பாடல்களை எடுத்தாள்வதால் கி.பி. 1120 ம்

ஆண்டுக்குப் பிற்பட்டவர் ஆவார். சங்க மன்னன் பொப் பண்ண காங்கேயர்கோன் என்பவன் இவரை ஆதரித் தான். சிலம்பின் 10வது காதையான ஊர்சூழ்வரை எழுதிய உரையே இன்று கிடைத்துள்ளது. சிலம்பிற்கு அரும்பத உரை ஒன்றுண்டு என்பதை இவ்வாசிரியர் குறிப்பிட்டுள் ளார். பாடவேறுபாடுகளைச் சுட்டுகிறார். பிற உரையாசிரி யர்களின் கருத்துக்களை எடுத்துக்காட்டுகிறார்.

நாடு காண்காதை (95—97) உரையில் ''வயலும் சோலையும் என்பனவற்றைக் கூறிய முறையானே எதிர் நிரனிறையாகக் கொள்வாருமுளர்'' எனப் பிறர் மதம் கூறுகிறார்.

பத்தாம் காதை 9—14ஆம் அடிகள் உரையில் இனி வந்தாய்க்கெனவும் (வந்தீர்க்கு என்பது) காணி எனவும் (காணிர்) பாடங்கூறுவாறுமுளர்' எனப் பாடவேறு பாட்டைக் குறித்தார்.

நல்லார் சங்கநூல் பயிற்சி உயைவர். 'முல்லையுங் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து பாலை என்பதோர் படிவங்கொள்ளும் (11—64—66) என்ற அடிகளுக்கு விளக்கம் தரும்போது அகநானூறு, கலித்தொகைப் பாடல் களை மேற்கோள்களாகத் தருகிறார்.

நல்லாரின் உரை நெறியில் சில இடங்களில் எதுகை மோனையுடன் கூடிய செய்யுளோசை மிகுதியாக அமைந் துள்ளது. கடலாடுகாதை 17ஆம் அடி உரைப்பகுதியைச் சான்றாக்கலாம்.

'' ஒழுக்கமுடைய விழுக்குடிப் பிறந்தோர்
நாணுடை மகளிரொடு நீணெறிச் செல்லார்''

என நடுநிலை தவறாது உரை கூறுகின்றார். ஆய்ச்சியர் குரவை உள்வரி வாழ்த்தாக அமையும் மூன்று பாடல்களுக்கு உரை எழுதும் போது (29—31) 'இவற்றுட் சேரனை முற் கூறாது பாண்டியனை முற்கூறிய தென்னையெனின், இது

மதுரைக் காண்டமாதலானும், 'முடிகெழு வேந்தர் மூவர்க் குரியது' எனச் சாத்தனார் கூறினமை யானுமென்க' என இளங்கோ உள்ளத்தை உணர்ந்து எழுதுகின்றார்.

தன் கருத்தை வலியுறுத்தப் பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். பல்துறைப் புலமை மிக்கார். நன்னூலார் கூறும் கருத்துரைத்தல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங் காட்டல், வினாத் தோற்றல், விடை கொடுத்தல், விசேடம் காட்டல், விரிவுகாட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனொடுபடுத்தல், ஆசிரிய வசனங்காட்டல் போன்றவற்றுடன் கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு, வினாவிடை ஆசிய கூறுகளையும் நல்லார் தம் உரைநெறியில் பின்பற்றுகிறார்.

இனி, இன்பமும் பொருளும் சிறிது இன்பம் பயந்து பெரிது துன்பம் விளக்குமென்பதூஉம், அறம் சிறிது துன்பம் பயந்து பெரிது இன்பம் விளக்குமென்பதூஉம் கூறுவார் (சிலப் 14: 32—34). ஊர்காண்காதை உரையில் கருத்து உரைத்தல் நிலை அமைந்துள்ளது.

வினா விடையாகப் பொருள் கூறிச் செல்லும் பாங்கு பழந்தமிழ் உரையாசிரியர்களிடம் உண்டு. மூல நூலாசிரியரின் உட்கருத்தை அறிய இம்முறை உதவும். அடியார்க்கு நல்லாரும்வினாவிடை முறையைக் கையாண்டுள்ளார், 'அடிகளென்றது துறத்தலான்: அத்துறையின் வரலாறு யாதொவெனின்எனவினாவுகிறார். விடையாகத் துறவு வாழ்வு விரிவாக்கப்படுகிறது.

பிற நூலார் கருத்துக்களைக் காரணம் காட்டி மறுத்துத் தம்மதம் நிறுவும் துணிவு உடையவர். 'இதனைக்கதை என்றால் வலிவுடைத்தென்பார்க்கு அற்றன்று; கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது; என்னை? கதையெனக்கருதல் செய்யான் மெய்யெனத்தானுங்கொண்டான்

என்றமையானும்......'' என விளக்குகிறார், இதில் தருக்க முறைகாணப்படுகிறது. கடலாடுகாதையில் 'இவ்வீணையை உருப்ப சிகையில் வீணையென்பாருமுளர், அது பொருத்த மின்று' எனக் கூறுகின்றார். நாரதரின் வீணை உருப்ப சிகையில் இருப்பதாகக் கூறுவோர் கூற்றை இவ்வாசிரியர் இவ்வாறு மறுத்துரைக்கின்றார்.

சிலப்பதிகாரம் 5வது காதை 170வது அடிக்கு உரை எழுதும்போது இலக்கணப் புலமையை வெளிப்படுத்து கிறார். சிலம்பில் 11:183 அடியில், வரும் 'போன்ம்' என வந்ததற்கு,

"செய்யுளிறுதிப் போலி மொழிவயின்
னகாரமகாரம் ஈரொற்றாகும்' (மொழி மரபு 16)

என்ற தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டு கிறார்.

14வது காதை 181வது அடியில் உள்ள 'குன்றா' என்பதனை அருத்தாபத்தியாக்கிக் குன்றுதலுடயை எனப் பொருள் உரைக்கிறார். 14வது காதை 82வது அடியில் உள்ள 'தெக்கணம் என்ற சொல்லை வடமொழிற்றிரிவு எனக் கூறுகிறார்.

'குழல் வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத்தும்பி வாய்வைத்தூத' (சிலப் 4: 15-16)

என்னும் அடிகளுக்கு உரைகூறும்போது நிரனிறை பொருள் கோளை விளக்குகிறார். 'ஊதுதல் கோவலர்க்கும் தும்பிடுக்கும் பொது ஊநங் குழலினும். முல்லையினும்கோவலரோடு. தும்பி வாய் வைத்து ஊதவெனவெனினும் அமையும்; இது நிரனிறை எனக் கூறியுள்ளார். 'தீபகம்' என்ற அணி இலக்கணப் பெயரைத் தமிழாக்கி 'விளக்கு' என அடியார்க்கு நல்லார் கூறித் தம் தமிழ்ப் பற்றைப் புலப் படுத்தியுள்ளார். உரைகூறும்போது பொருத்தி வினை

முடிவுகள் கூறுவதில் வல்லவர். புறஞ்சேரி இறுத்த காதையில் 184-188 அடிகளின் விளக்கத்தில் 'ஏங்கி என்னும் செய்தெனச்சம் நடுங்க வென்னும் பிறவினை கொண்டு முடிந்தது' என வினை முடிவு கூறுகிறார். வழக்கு நோக்கியும் உரை தருகின்றார். 'தூவி துறைபடியப் போயினாள்' (18:5) என்பதில் உள்ள துறைப்படிதல் நீராடுதல்: அக்கால வழக்கு' என உரைக்கின்றார். இசைக்கலை வித்தகர் நல்லார். இசைக்கருவிகளின் பெயர்களையும் விளக்கங்களையும் உரையில் தந்துள்ளரர். சகோடயாழின் இணை, கிளை, பகை, நட்பு ஆகிய நரம்புகளை விளக்குகிறார். குழல் மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி ஆகியவைகளில் செய்வர் எனக்கூறி ஒவ்வொரு மரத்தாலும் உலோகத்தாலும் ஆன குழலை விளக்குகிறார். அடியார்க்கு நல்லாரின் இசைப்புலமையே விபுலானந்தர் யாழ்நூல் இயற்றத் துணை நின்றது என்பர், பின் ஆய்வாளர்க்குத் துணை செய்திருப்பதால் அடியார்க்கு நல்லார் உரை ஆய்வுரையேயாம்.

நாட்டாரின் உரை மரபுகள்

ந. மு. வேங்கடசாமி நாட்டார் தமது சிலப்பதிகார வுரையில் முன் உரையாளர்களான அரும்பதவுரையாசிரியரையும் அடியார்க்கு நல்லாரையும் சுட்டுகிறார். தாம் பயின்ற இலக்கியங்களிலிருந்து தக்க மேற்கோள்களைக் கையாண்டு கருத்துக்களை நிறுவுகிறார். சொற்பொருள். விளக்கம் தருகிறார். இலக்கணக் குறிப்புக்கள் தந்து விளக்குகிறார். வேறு இலக்கியப்பகுதிகளோடு ஒப்பாய்வு செய்கிறார். உரையாசிரியருக்கும் படிப்பவனுக்கும் மனனம் தேவை என்பதை உணர்த்துகிறார். விவாதமுறையும் உரையில் காணப்படுகிறத். முன்னையாசிரியர் கூற்றுக்களை ஏற்றும் தம்மதம் கூறியும் உரையை அமைத்துள்ளார். காதைச் சுருக்கம் முதலில் தருவதுடன் இனி என்ன கூறப்

போகிறார் என்பதையும் முன் கூட்டியே தெரிவிக்கிறார். பாடபேதங்களைக்கூறி விளக்கவும் செய்கிறார்.

காடு காண்காதையில் "ஆதியில் தோற்றத்து அறிவனை" (அடி, 2) என்பதற்குத் தன்னினும் ஒன்று முதற்கண் இல்லாத தோற்றத்தினையுடைய அருகதேவனைத் தொழுது என்று உரை தந்துள்ளார். அடியார்க்கு நல்லாரோ இளஞாயிற்றினது ஒளியினும் ஒளி சிறப்பவிருந்த அறிவனை வணங்கி எனப்பொருள் உரைக்கின்றார். நன்மொழி (11.7) அறவுரை எனப்புதுப்பொருள் தருகிறார் நாட்டார். வாரணம் என்ற சொல்லுக்கு நல்லார் கோழியூர் என்றும் நாட்டார் உறையூர் என்றும் உரை செப்பியுள்ளனர். கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் (11.67) என்ற சொற்றொடர்க்கு உரை கூறும்போது நாட்டார் நல்லாரின் உரையையும் உடன் தருகின்றார். கொடும்பாளூர் ' நெடுங் குளம் என்னும் இரண்டுக்கும் பொதுவாகிய ஏரிக்கரை என்றும் கூறுவர் அடியார்க்கு நல்லார். 'கொடும்பாளூரின் கண் நெடுங்குளக்கரைக்கு' என்பது நாட்டார் உரை, வேட்டுவ வரியில் "விருந்தின் முரல்" (அடி.53) என்ற சொற்குச் சூழலைக் கூறி பொருள் விளக்கம் தருகின்றார். "இவன் நெடுநாள் முறுவல் ஒழிந்திருந்தாள் என்பது தோன்ற" எனக் கண்ணகியின் சிறப்பைக் காரணத்துடன் காட்டுகிறார். தமது பெருமையினைப் பிறர்கூறுங்கால் நாணுதல் பெரியோர் இயல்பு என்ற பொதுக்கருத்தையும் இவ்வுரையில் இணைக்கிறார்.

"இனி, எயினர் குடிப்பெண் ஒருத்தியைக் கொற்றவைக் கோலம் கொள்வித்தல் கூறுகின்றார்" (ப. 282) என்று உரைப்பது நிகழப் போவதை முன்னரே தெரிவிப்பதாகும்.

"ஐயை என்பதற்கு வென்றி மகள் எனவும், அருங்கலப் பாவை என்பதற்கு இரத்தினப்பாவை எனவும் கூறுவாரு முளர்" (ப. 286) எனப் பிறர் மதம் உரைக்கும்போது நடையில் 'என்பதற்கு' 'எனவும்' என்பன அடுக்கி வந்தன.

கடல்கோள் செய்தியை விளக்கும்போது பிற உரைகளையும் சுட்டுகிறார். 'அடியால் தன்னறவு' (17. 22) என விளக்கம் தந்த அடியார்க்கு நல்லார் 'வேனிற் காதையிற் கூறிப்போந்தாம்' என நினைவுபடுத்த, நல்லாரின் அவ்வுரைக்கு ஒரு கருதுகோள் இருக்க வேண்டும் என உணர்கிறார் நாட்டார்...'' என்பது கொண்டு அவர் அங்ஙனம் கூறினார் போலும்.''

காடு காண் காதை (41. 51) அடியில் பரிபாடல் பகுதியிலிருந்து ஒப்புமைப்படுத்திக் கூறுகிறார். ''ஞாயிறும் திங்களும் சக்கரத்திற்கும் சங்கிற்குமுவமை, அவற்றிடை நின்ற ஆழி சங்கேந்திய நெடியோற்குவமை; மின்னும் வில்லும் பொலம்பூவாடைக்கும் ஆரத்திற்குமுவமை'' (ப. 263.) 'இஃது பரிபாடல் பகுதியோடு ஒத்து நோக்கி மகிழ்தற்குரியது' என்று அவர் கூறுவது மனனப்பயிற்சியைப் புலப்படுத்தும்.

'இங்குக் கூறிய வரலாற்றினை வேனிற்காதையிற் காண்க (ப. 272) என்று நாட்டார் நினைவுபடுத்துவது படிப்போர்க்கு மனனம் தேவை என்பதைச் சுட்டுவதாகும். மயக்கும் தெய்வம் இவ்வன் காட்டுண்மெென என்றது, 'ஆரிடையுண்டோர் ஆரஞர்த் தெய்வம்' என முன்கூறியதனை' (ப. 273).

''வாய்மையும் கொல்லாமையும் தலையாய அறங்கள் என்பதனைப் பொதுமறையானறிக'' என்று வியங்கோளால் முன்னிலைப் படுத்தி உரை தருகின்றார். இம்மைக்கின்பம் புகழ் என்று அடியார்க்கு நல்லார் கூற பொருள் எனவுங் கூறுப என நாட்டார் உரைத்துப் பரிமேலழகர் எழுதிய உரையை நோக்குக எனத் தன்மதம் நிறுவப் பிற உரையாளரைத் துணைக் கொள்கிறார்.

கொண்டு கூட்டுப்பொருள்கோளை நல்லார் வழியில் நாட்டாரும் ஏற்று உரைமொழிகின்றார்.

பாலைத்திணைக்கு இலக்கண விளக்கம் தரும்போது திருத்தொண்டர் புராணச் செய்யுளை மேற்கோள் காட்டுகிறார். அடியார்க்கு நல்லார் அகநானூறு கலித்தொகை ஆகியவற்றிலிருந்து சாட்டுக்கள் தந்து விளக்குகிறார். முல்லை முறைமையிற்றிரிந்து பாலையாயினவாறும் (அகநானூறு) குறிஞ்சி முறைமையிற்றிரிந்து பாலையாயினவாறும் (கலித்தொகை) என வகைப்படுத்தப்பெற்று காட்டுக்கள் தரப்படுகின்றன. காதைச் சுருக்கம் முதலில் கூறியதும் அதில் அமைந்த் சிறப்புக் கூறுகளைத் தனியே எடுத்தியம்புவதும் இவரது மரபு.

8. பெரிய வாச்சான் பிள்ளை உரைச்சிறப்பு

சிறிய திருமடல் திருமங்கை யாழ்வார் அருளியது. 155 அடிகளையுடைய கலிவெண்பாவால் அமைந்த சிற்றிலக்கியமாகும். திருமாலிடம் காதல் கொண்ட தலைவி ஒருத்தி அருள் கிடைக்காத காரணத்தால் மடலூர்வேன் என்று அறிவிக்கும் பாங்கில் அமைந்ததாகும். இது கடவுள் மாட்டு மண்ணாக மகளிர் நயந்த பக்கத்தைச் சார்ந்ததாகும்.

பழங்காலத்தில் தலைவன் காரியம் கைகூடப் பெறா நிலையில் மடலேறுவான்,

> " கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
> பெண்ணிற் பெருந்தக்க தில்" என்பது குறள்.

பக்தி கால இலக்கியத்தில் மானுடக் காதலிலிருந்து தெய்வக்காதல் இலக்கியப் பொருளாக மாறிய போது தலைவி மடலேறுவதாக அருட் கவிஞர்கள் இலக்கியங்களில் அமைத்துப் பாடினர். திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டியங்கும் வைணவ சமயக் கவிஞர் திருமங்கையாழ்வாரின் பெரிய, சிறிய திருமடல்களை இவ்வகைக்குச் சான்றுகளாக் கலாம்.

இத்திருமடல்களுக்கு எழுதிய பெரியவாச்சான்பிள்ளை மடலின் அமைப்பு மாற்றத்தையொட்டியே உரை வகுத்துள்ளார். வ்யாக்யானம் என்ற வடசொல் உரை விளக்கம் எனும் பொருளைக் கொண்டது. ப்ரவேசம் என்ற பகுதி முன்னுரையைக் குறிக்கும். மூவாயிரப்படி ஆறாயிரப்படி எனப் படிமுறை வளர்ச்சியில் உரை விளக்கம் அமைந்துள்ளது. ஒவ்வொரு படிவிளக்கங்களிலும் விளக்க விரிவுகள் வேறுபாடுகளுடன் காணப்படுவதால் ஒப்பாய்விற்கு இடம் உண்டு. வடமொழிச் சொற்கள் விரவிக் காணப்படுவதால் மணிப்பிரவாள நடைக்குச் சான்றாக இவ்வுரைகள் விளங்குகின்றன.

சொற்பொருள் விளக்கம்

மூவாயிரப்படி "மடலாவது (துல்ய சீலவயோவ் ருத்தாம் துய்யா பிஜ நலக்ஷணாம்) என்கிறபடியே இருவரும் ஒத்த பருவத்தராய் புலம்ஸ்த் வத்துக்கே காந்தமான அறிவு நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்கிற குணங்களாலே அவனும் பூர்ணனாய், ஸ்த்ரீத் வத்துக் கேகாந்தமான நான், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற குணங்களாலே இவளும் பூர்ணையாய்..." —சொல் விளக்கத்தில் ஆண், பெண் குணங்கள் பற்றித் தொல்காப்பிய இலக்கண மரபு காணப்படுகிறது.

ஆறாயிரப்படியில் வடசொற்களைப் பெரிதும் குறைத்து விடுகிறார். "மடல் என்பது யாதெனில் ஒத்த குணம் வயது ஒழுக்கம் ஆகியவற்றை உடையவளும், ஒத்தகுலம் அழகு ஆகியவற்றையுடையவளுமான சீதைக்கு ராம பிரவாள தகுந்தவர்...என்கிறபடியே அறிவு, மதிப்பு, ஆராய்ச்சி, உறுதி ஆகிய குணங்களாலே நாயகியும் நிறைந்தவளாய்..." ஆண், பெண் குணங்கள் இங்கு வேறு வகையாகச் சான்றுடன் விளக்கப்படுவதைக் காணலாம்.

பெரிய திருமடலை விளக்க முற்படும் உரையாசிரியர் சிறிய திருமடலை உவமையாக்கி நினைவுபடுத்துகிறார். "பெரிய திருமடல், சிறிய திருமடலைப் போலே அன்பின் மிகுதியாலே தன் ஸ்ருபத்தையும், ப்ரஸ்வருபத்தையும். அறியவொட்டாமல் கண்கூறன்று கிறுகிறுக்க வைத்த மற்றொரு பிரபந்தமாகும்."

'காரர் வரைக்கொங்கை' என்ற சிறிய திருமடல் சொற்றொடரைக் காரணகாரியத்துடன்தொடர்புபடுத்தி விளக்குகிறார். "மேகம் படிந்த மலையென்கையாலே முலைக்கண் கறுத்திருத்தாற்போலே யிருக்குமென்கை. மலைகளை முலையாக்கிச் சொல்லிற்றாகில் எம்மலைகளைச் சொல்லிற்றென்னில்; திருமலைகளிரண்டையும் முலையாகச் சொல்லிற்றென்னுமிடஞ் சொல்லிற்றுத் தென்னுயர் பொருப்பும் தெய்வ வடமலையுமெனுமிவையே முலையா மென்று பெரிய திருமடலிலே சொல்லிற்று". என பெரிய திருமடல் உரையை மேற்கோள் காட்டுகிறார்.

உவமை கூறி விளக்கல்

தலைவியின் பேச்சினிமையை விளக்க ஓர் உவமையைக் கையாள்கிறார். "கிளியின் பேச்சு பேயின் பாட்டு என்று சொல்லும்படி இருக்கிறது. வல்வினையை விளக்க வந்த உரையாசிரியர் உலகியல் நீதி கூற உவமையாக்குகிறார். கடல் கொண்ட பொருள் மீளுமோ "ராமனை என் கண் பின் தொடர்ந்தது, இன்றளவும், திரும்பவில்லை என்று தசரதன் சொன்னது போலே" என்ற இதிகாச உவமை 'ஊரார் உகப்பதேயாயினேன்" என்பதை விளக்கப் பயன் படுகிறது. 'பெற்ற தாய் குழந்தையைத் தடவிக் கொடுப்பது போலவே திருவடியாலே தடவிக் கொடுத்து நின்ற நீர்மை" என்பதில் உவமை வந்துள்ளது.

வினா விடை அமைத்து விளக்கம் கூறல்

தன் உடைமையை யாசித்துப் பெறுமவனன்றோ? அப்படிப் பட்டவன் தன்னுடையவளான இவளை விட்டு

வைக்குமா? என்றபடி மண்ணை யாசித்து அளந்து கொள்ளு மவன் பெண்ணை நோவுபட விட்டு வைப்பானோ? மண் ணாசை பெண்ணாசை பொன்னாசை என்பவற்றில் மண் ணாசைக்கும் மேற்பட்டதாயிற்றே பெண்ணாசை என்று கருத்து மாபலியிடம் இரண்டடி மண்கேட்ட தொன்மைக் கதையை வினாவாக்கி மடலூரும் மங்கைக்கு அருள்புரிவான் என்பதைவிளக்குகிறார் உரையாசிரியர்.

வருணனை முறையில் பொருள் விளக்கம்

கட்டுப்படுத்துதல் என்ற சொல்லுக்குக் குறிகேட்டல் உன்று விளக்கம் தந்தவர் கட்டுவிச்சியைப்பற்றி வருணனை நடையில் விளக்கம் தருகிறார். "இப்பெண்ணைப் பிடிப்பது இன்ன தெய்வம் என்று கட்டுப் படுத்துபவள் கட்டுவிச்சி, கட்டுவிச்சியானவள் தேவாஷ்டையானாள். அதாவது தூக்கத்திற்போலே கொட்டாவி விடாமல், சோம்பல் முறி யாமலிருந்தபோதிலும், தன் நினைறியாமல் தெய்வத்தி னால் தூண்டப்பட்டு வார்த்தை சொல்லும் நிலை கட்டுவிச்சி கூறிநிற்கும் நிலையாகும்."

தருக்க நெறி விளக்கம்

காதல் நோய்பற்றி விளக்கத்திற்குத் திருவாய் மொழி யிலிருந்து மேற்கோள் காட்டி நோய் நாடி அது தீர்க்கும் வாய்ப்பையும் ஆய்ந்து கூறுகிறார். நோய்பற்றிய விளக்கம் தருக்க நெறியில் அமைந்துள்ளது. "இந்நோய் எப்படித் தீரும்? என்று கேட்கிறவர்களுக்கு, 'தீராத நோய்' என் கிறாள். 'உற்ற நல்நோய்' திருவாய்மொழி (4—6—1) என் கிறபடியே பகவத் பக்தியாகிற இந்நோய் மிகவும் உத்யேச்ய மாகையாலே ஸர்வேஸ்வரனாலே வந்த இந்நோய் விட்டால் என் செய்வது? என்று கேட்கிறார்களாக நினைத்து நோய் என்கிறாள்"

பெயர்ப்பதிலி இறுதியில் அமைந்த நிலை

"காதலுக்காகத் தன் தோழிகளின் பெரிய குழுவை விரைவிலே விட்டு நின்றாளன்றோ அவள்" "தோழிமார் திரளில் கால் பொருந்திற்றோ அவளுக்கு?"

பெரியதிருமடல் உரையில் புதிய சொற்றொடர்கள்

"அப்படியே ஸர்வேஸ்வரன் விரும்பி விடாதே கிடக்கிற தேகமிதே" "திருமேனி தீண்டப் பெற்றதாலே ஆனந்தம் பெருக்கெடுத்து அவ்வானத்தம் பெருவெள்ளத்துக்கு ஆயிரம் வடிகால்கள் வெட்டி விட்டிருப்பது போலே "இருக்கை" "மார்பிலே தோயப் பெறாத இன்னாப்பு" "நான் அருளத்தக்கவனாகில், ஐயமின்றியே என்னைக் கைவிடுவிர், ப்ரதி ஜ்ஜையைக் காப்பாற்றிக் கொள்வர்". "உறங்குவேன் போல் யோக நித்ரையிலே"

தான்கிடந்து' சொல்விளக்கம்

இயற்கையிலேயே எல்லாமறிபவனாய் எக்காரணத்தாலும், எந்தவிதமான கலக்கமில்லாமலிருக்கும் அவன், இவன் தீண்டப்பெற்றதால் உண்டான ஆனந்தத்தாலே, கடல் கவரி வீசுவதையும் இவள் திருவடி உருடுவதையுமறியாமல் கிடந்து உறங்குகின்றான்" என்று காரணங்காரியத்துடன் விளக்கவுரை தருகிறார்.

உவமை

பாடாத பாடுபட்டுக் கையளவு உணவு பெற்றாற் போலச் சிரமத்துக்குத் தக்க பலனில்லை என விளக்குகிறார். நீர்க் காக்கை போலே மூழ்கி என்பது மற்றொரு உவமையாகும். குளிர்கால நீராட்டை இவ்வுவமை விளக்குகிறது,

ஒரே சொல் திரும்ப திரும்ப வரல்

மூவடி என்ன—என்னென்பது என்ன? மண் என்ன ஆர் காலாலே என்ன பெரிய தொரு காலாலே கொண்டாலோ

என்ன என் அப்போஷையன்றோ நீ செய்யக் கடவது என்ன என்று ''என்ன'' என்ற சொல்லைத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தியுள்ளார். திருப்பாவையில் காணப்பெறும் உரை மரபுகளைக் காண்போம்.

உவமைகள் வழி விளக்கம்

போய்பிழையும் புகுதருவான் எனுஞ் சொற்றொடரை விளக்க உவமை கூறுகிறார். பகவத் அனுபலம் எவ்வாறுள தாம்? ''பாலும் கண்ட சர்க்கரையும் குடிக்கப் பித்தம் தன்னடையே போமாப் போலே பகவத் அனுபவம் பன்ண நெருப்பிலிட்ட பஞ்சுக்குவை போல உருமாய்த்து போம்.'' (ப. 45) கன்னிப் பெண்கள் ஒருவரையொருவர் எழுப்பும் நிலையை விளக்கும்போது ஓர் உவமையைக் கையாள்கிறார். ''பெருக் காற்றி விழிவார்க்குத் துணை தேட்டமாமாப் போலே'' (பக், 46) என்பதே உவமையாகும். வையத்து வாழ்வோர்கள் என அழைக்கும் பாடலுக்கு உரை கூறும் போது ''கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்றாறிறே அதவா, மருபூமியில் தண்ணீர் போலே இருள் தருமா ஞாலமான ஸம்ஸாரத்திலேயிருந்து வைத்து க்ருஷ்ணாநுபவம் பண்ணி வாழப் பிறந்தீர்'' என்ற விளக்பத்தில் அவருக்கே உரிய உரை மரபு காணப்படுகிறது. ''உறங்குகிற பிரஜையை யணைத்துக் கொண்டு கிடக்கும் மாதாவைப் போலே'' (ப. 27) என்று இறை நிலையை உணர்த்துகிறார்.

பழமொழி வழி விளக்கல்

'கேளீரோ' என்ற சொல்லை விளக்கப் பழமொழியைக் கையாள்கிறார். ''மேய்ச்சல் தலையிலே அசையிடுவா ருண்டோ?'' (ப. 19)

உரைச்சிறப்பு

'கைகாட்டி' என்பதற்கு ''ஸர்வத்தையும் கொடுத்து ஒன்றும் செய்யப் பெற்றிலோம் என்றிருக்கை'' என உரை

கூறியிருக்கிறார். "பிறரும் ஜீவிக்க வேணும் நாமும் ஜீவிக்க வேணும்" என்பதில் வழக்குமொழியைக் கையாள்கிறார். "தூயோமாய் வந்து நாம்" என்ற சொற்றொடரின் விளக்கத்தில் அந்தாதிமுறை அமைப்புக் காணப்படுகிறது. "அங்குத்தைக் நாம் யோக்யரோ அயோக்யரோ என்று பாராதே இருந்தபடியே வந்து இருந்தபடியே வருகைக்கு மேற்பட சுத்திதேட வேண்டாவிறே". (ப. 43) வலிபாதி வழக்குப்பாதி என்ற சொல் வழக்காறு செல்வச்சிறுமீர்காள் விளக்கத்தில் இடம் பெற்றுள்ளது. வியப்புத்தன்மையின் அடுக்குகளைக் காணலாம், "மார்கழி நீராட்ட மாவா தென்னென்ன; இது கரஸித்த மன்றோவென்ன" (ப. 167) என வடமொழிப் புலமையைப் புலப்படுத்துவார்.ஸ்வர்க்க காமோ யஜேத" என்னுமாப் போலவும் நித்யாஸிதவ்ய என்னுமாப்போலவும் பரஸித்தமா யிருந்ததோவென்ன". (ப. 156) உரையாடல் எளிய பேச்சு வழக்கில் கொடுந் தமிழ் நடையில் காணப்படுகிறது. 'ஆகில் வேண்டுவது சொல்லுங்கோனென்ன கேட்பதியாகில் என்கிறது அந்ய பாதையிலே இங்கு வினைமுற்று முந்தி விடுகிறது. 'அந்ய பாதை யென்னென்னில்; பஞ்சஷங் குடியிற் பெண்களும் முன்னே நிற்கையிலே இவர்கள் முலையிலும் இடையிலும் கண்ணிலும் முகத்திலும், துவண்டு ஆனைக்குப்பு ஆடுவாரைப் போலேயிருக்கையாலே தட்டி யெழுப்பு றார்கள்." என்ற உரைவிளக்கத்தில் ஓசை நயம் காணப்படு கிறது. "ஒன்பது நாள் வெயிலும் ஒருநாள் மழையுமாய்" என்று திங்கள் மும்மாரிக்கு விளக்கம் தருகிறார். (ப. 161)

சொற் பொருள் விளக்கம்

கோல விளக்கே அழகிய விளக்கு என்பது நேரடியான விளக்கமே "அதாகிறது மங்கள தீபம்" என்று பாவை நோன்பிற்கு ஏற்ப மேலும் விளக்குகிறார். "மணிவிளக்கை (ப. 42) திருவாய்பாடிக்கு மங்கள தீபமென்றுமாம்" என்ற கூற்றுப் பின் விளக்கத்திற்குப் பயன்படுகிறது. பெரிய

வாச்சான் பிள்ளை செய்த மூவாயிரப்படி வியாக்கியானம் வியாக்கியான அவதாரிகை எனுந் தலைப்பில் முன்னுரை அமைகிறது.

"ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும்; ஆழ்வோர்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத்தனைவாசிபோரும்: பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனைவாசிபோரும். அவர்களின் இவளுக்கு வாசியென்னெனில்............" என்று உரை முன்னுரை சொல்கிறது. வாசிபோரும் எனுஞ்சொல் மீள மீள வருதலைக் காணலாம். ஏனென்றால் என விளக்கம் கூறப்புகுந்தவா வடமொழி வாசகத்தை மேற்கோள் காட்டி அதனால்தான் என நிறுவுகிறார். "அநாதிமாயயாஸுப்த" என்கிறாப் போலே.

"இந்நோன்புக்கு மூலமென்னெனில், மீமாம்ஸையிலே ஹோளாதிகரன் நியாயத்தாலே சிஷ்டாஸாரஸித்தம் மேலையார்கள் செய்வகைகள் என்று ஆண்டாள்தானும் அருளிச்செய்தாள். பாவை நோன்பிற்கு முன்னோடி எது என்பதனையும் அது இப்பாவை இலக்கியத்தில் எங்ஙனம் குறிப்பாக உணர்த்தப்படுகிறதென்பதனையும் பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிடுகிறார். முன்னுரையில் முன்னூல்கள் குறித்தல் ஒரு மரபே.

"இவர்கள் மடலூராதே நோன்பிலே கை, வைப்பானென்னென்னில்; "ராஜமதிஷ் உஞ்சவ்ருத்தி பண்ணிஜ்வித்தால் ராஜாவுக்கு அவத்யாவை ஹமாமா போலே குணங்யஸ் நியன்றியே தானும் ஒக்க மடலெடுப்பானொரு கணை கேடனாகையாலும் மடல் இவ்விஷயத்தில் பலியாது என்று பார்த்து நோற்கிறார்கள்" என்று நோன்பின் வழிமுறையைஉரையாசிரியர் காரணங் காட்டி விளக்குகிறார்.

பாட்டிற்கும் மூவாயிரப்படி, ஆறாயிரப்படி என இருவகையாக உரை கூறுகின்றார்.

மார்கழித்திங்கள் என்ற முதற்பாட்டின் அச்சொற்றொடரை மூவாயிரப்படி விளக்குகையில் மாதத்தின் தன்மைகளை எடுத்துரைக்கின்றார். குளிர் மிகுந்தகாலம் (அதிசீதனம் மாதலன்றிக்கேயிருக்கும் மாஸம்) என்றும் மாதங்களில் கண்ணன் மார்கழியில் இருப்பதால் இது வைஷ்ணவமாலை மாஸம் என்றுகுறிப்பிடுகிறார்.

ஆறாயிரப்படியில் இச்சொற்கு விளக்கம் தரும் போது ஒழிவில் காலம் என்றும் மாதங்களுக்கெல்லாம் முதலாக மாதம் என்றும் வேறுபட விளக்குவதால் இவ்வாயிரப்படிகள் ஒப்பாய்வு செய்வோர்க்கு உறுதுணை செய்வன. பின் ஆய்வாளர்களுக்குச் சிந்தனையைத் தூண்டும் வகையில் இவ்வுரைகள் அமைந்துள்ளன.

மூவாயிரப்படி

நன்னாள்—மாஸத்துக்கும் பக்ஷத்துக்கும் தாயக்கல் போலவேயிருப்பதொருநாள் நேர்பட்ட படியென்! நம்மை க்ருஷ்ணனோடு சேருகைக்கு ப்ரமாணம் பண்ணிக்கொடுத்த நாளாகப் பெற்றதே.

ஆறாயிரப்படி

பெருமானை முடி சூட்டியநுபவிக்கப் பாரித்துக்கொண்டிருக்க வெறுந்தலையான நான்போலன்றிக்கே மீண்டு வந்து திருமுடி சூடியருளின நாள் போலே.

மூவாயிரப்படி

நீராட—க்ருஷ்ணவிரஹத்தால் பிறந்த தாபம் ஆலும்படி போய்க்குளிக்கை தமிழரும் கலவியை—'சுனையாடல்' என்றார்கள்.

ஆறாயிரப்படி

"தோழிமார் ஒருவருக்கொருவர் பவ்யைகளாயிருந்ததாகப் பண்ணவேண்டும் தேவைகளுக்கு ஒரெல்லையில்லை.

இந்த நிரவதிகஸ கஸம்பத்தைப் பார்த்தவாறே கௌவ்யை களாயிருப்பார்களீறே யமுனஜாலம் ஒருத்தியுடைய விரஹாக் தியாலே அவறுமே'' என்று புதிய விளக்கம் தருகிறார்.

மூவாயிரப்படி விளக்கத்தில் இன்ன இன்ன பாட்டில் இன்ன இன்ன செய்தி கூறப்பட்டுள்ளது எனக் கூறுவதால் பகுப்பாய்வுத் திறன் மிக்கவராய்த் திகழ்கிறார். பரிமேலழ கரின் பகுப்பாய்வு போலவே இவரது மூவாயிரப்படி விளக்கம் அமைகிறது, அறியாமையை இரு வகைப்படுத்தி உரை கூறுவதால் பகுப்பாயும் திறன் நன்கு புலப்படுகிறது.'' பால் யத்தாலே வந்த அஜ்ஞாநம்; சேமத்தாலே வந்த அஜ்ஞா நம்'' (ப. 184) அந்த ஹேதுக்களால் வந்த அறியாத்தன்மை பொறுக்க வேணும்''. பெயரெச்சத் தொடர் அடுக்கி வரு வதை இதில் காணலாம். உவமை உருபை மீள வர அமைத்து கோயிலின் பெருமை பேசுகிறார், ''கட்டிப்பொன் போலே அவன் பணிப்பொன் போலே திருநாமம்'' (ப. 29) திருமங்கை ஆழ்வார் பாசுரங்களை ஒப்பு நோக்கித் தம் ஒப்பாய்வு நோக்கைப் புலப்படுத்துகிறார். ஆயர்குலத்தவர் மேன்மையைப் ''புண்ணியத்துக்குச் சோறிட்டு வளர்க் கிறவர்களன்றோ'' என விளக்குகிறார்.

சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே படித்தால் பலன் கிட்டும் என்பதைப் பலவாறு விளக்குகிறார். சங்கம் என்ற சொல்லுக்குத் திரள் என்றும் குழாம் என்றும் பொரு ளுரைக்கின்றார். ஆண்டாளால் உபநிடதம் தமிழாகி விட்டது என்கிறார். ''விலையில்வாத ரத்நங்ளாலே செய்த ஏகாவலியிலே ஒரு ரத்நம் குறைந்தாலும் நெடு பாழாயிருக்கு மிதே; அப்படியே ஒரு பாட்டுக் குறையிலும் பேரிழவாயிருக்குமென்கை''. ஒரு பாட்டும் குறையாமல் படிக்கவேண்டும் என்பதற்கு இரத்தினமாலை வழி விளக்கு கிறார்.

''மாதவனை — சேனழயார் சென்றிறைஞ்சி—
மறைகொண்டவாற்றை — கோதை சொன்னதமிழ்

மாலை — உரைப்பார்-எம்பாவாய் இன்புறுவர். பெரிய பிராட்டியார் இன்புற்றாற்போலே இன்புற்றாராவர்கள்''. ''எம்பாவாய்—நீராடப்போதுவீர் போதுமினோ என்று கூட்டிக்கொண்டார்கள்'' என்று ஆறாயிரப்படி உரை முடிகிறது. முப்பதாம் பாட்டில் உள்ள அணிபுதுவை என்ற சொல்லுக்கு நந்தகோபனுடைய கோயிலில் என்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் வடபெருங்கோயில் என்றும் விளக்கம் தந்துள்ளார்.

ஆறாயிரப்படியில் உணர்ச்சிநடை உண்டு. ''தாழ்ந்தவர்களை ரக்ஷணம் பார்னும் இக்குலத்திலே பிறக்கச் சொன்னாரார்? பராக்ஷணமும் பண்ணாமல் ஸ்வரக்ஷணமும் பண்ணாதார் குலத்திலே யுன்னைப் பிறக்கச் சொன்னாரார்?'' (ப. 189)பலவகையான வாக்கிய அமைப்புக்கள் காணப்படுகின்றன.ப்ராயத்தை நிஷ்கரித்து ப்ரார்த்திக்கிறார்கள்—இப்பாட்டில்(ப. 184) வினைமுற்றுக்குப்பின் விட்டிசையிட்டு பெயர்ச்சொல் காணப்படுகிறது. ஆறாயிரப்படி இருபத்தொன்பதாம் பாட்டு உரையில் மற்றோரிடத்தில் பெயருக்குப் பின் வினை என்ற முறைப்படி வாக்கியம் வந்துளது,''... கீழ்ப்படிலே வெளியிட்டார்கள்'' ''மாணிக்கத்தை விட்டு தவிடுகொள்வாரைப்போலேயிறே'' என்பதில் உவமைக்குப் பின் வினைமுற்று அமைந்துள்ளது. எளிய வாக்கியங்களில் விளக்கம் தருவதையும் காணலாம். ''எங்கள் தப்புக்கு அநுபவித்தோம், பொறை கொண்டோம், எங்களுக்கு இனிச் செய்யவேண்மமம்சமில்லை'' கறவைக்கு அளித்தல் பற்றிய இவ்விளக்கவுரையில் எளிய வாக்கியநிலை காணப்படுகிறது. இப்போதே எம்மை நீராட்டு எனுஞ் சொற்றொடர் விளக்கத்தில் பிற உரையாளரையும் சுட்டிப் பிறர் மதம் கூறுகிறார்: (பக் 172)

சிறியாத்தாள் (பக் 12), ஆரேனும் (பக் 14) ஒரு மேகத்திலே இரண்டு தாமரை பூத்தாப்போலேயிருக்கை எனக் கண்களைக் குறிப்பிடல் (பக் 14) போக்கற்றவனுக்குத்

திறந்த கிடந்த (பக் 15) வாசலிலே போன்ற வழக்குகள் காணப்படுகின்றன,

வினையெச்சம் திரும்ப திரும்ப வரும்படியும் உரைப் பகுதி "காலத்தைக் கொண்டாடி, பலத்தைச் சொல்லி, அதிகாரிகளைச் சொல்லி, இதுகேட்டபின்பு அவர்களுக்குப் பிறந்த பெலிங்கல்யத்தைச் சொல்லி, கொண் டாடும்படிச் சொல்லிக் காட்டுகிறார். (ப. 16) "அத்தனை யேனும் மேலானவர்களை எத்தனையேனுந் தாழ்ந்தவர்கள் திருவுள்ளமாகில் செய்தருள வேண்டும் என்று முரண் அமைத்து உரை தருகின்றார். (ப. 155)

பாரதத்திலும் இராமாயணத்திலும் உள்ள ஈடுபாட் டினைப் பல இடங்களில் புலப்படுத்தியுள்ளார் உரை யாசிரியர்.

முடிவுரை

நாலயிரத் திவ்விய பிரபந்தம் முழுமைக்கும் விளக்க உரை எழுதிய பெருமை பெரியவாச்சான் பிள்ளையைச் சாரும். வியாக்கியான சக்கிரவர்த்தி என்று இவரை அழைப்பர். வைணவ சமய உண்மை யின் பிரதிபலிப்பை இவரது உரைகளில் காணலாம். சில இடங்களில் கவிதை நடை நடை, போடுவதைக் காணமுடிகிறது. மூல நூலாசிரியர்களின் உள்ளங்களை உரைகளில் வெளிக்கொண்டு வருகிறார். வடமொழி வல்லுநர்; வான்மீகி இராமாணத்தில் ஈடுபாடுடையவர். வேதாந்தக் கருத்துக்களை விரித்துரைக்கும்போது மணிப் பிரவாள நடையில் எழுதுகிறார். உரையில் இராமாயண மேற்கோள்கள் இடம் பெற்றுள. சில இடங்களில் தமிழில் கதை கூறி விளக்கம் எழுகின்றார். முத்துமணிகளும் பவளங் களும் மாறி மாறி வைத்துக் கட்டபெறு மாலை போல வட

மொழிச் சொற்களும், தமிழ்சொற்களும், கலந்து எழுதப் பெறும் நடையே மணிப்ரவாள நடையாகும். வடசொற்களும், தொடர்களும் தமிழ்ச் சொற்களுடன் பிராகிருத மொழிச் சொற்களும் கலந்து வரும் நடையாகும், வாக்கிய அமைப்பு தமிழ் இலக்கணத்தைத் தழுவியே காணப்பெறும். மொழிச் சொற்கள் தமிழ் ஒலிக்கு ஏற்ப வடிவு பெறாமல் அப்படியே கையாளப்பட்டிருக்கும். ஆழ்வார்களின் பாடல்களுக்கு விளக்கவுரை தந்த உரையாளரான சோழ நாட்டு அந்தணர் பெரிய வாச்சான் பிள்ளையும் மணிப்பிரவான நடையில்தான் உரை எழுதினார்.

இயல் 5

உரை நடை ஆசிரியர்களின் புலப்பாட்டு நெறி

1. இராகவையங்காரின் புலப்பாட்டு நெறி

ஆய்வு நூல்கள் ஏடுகளாய் இன்று ஆய்வகங்களில் மலர்கின்றன. எழுபது எண்பதுகளில் ஆய்வு நிலைக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆய்வேடுகளின் குவியல்களைக் காண முடிகின்றது. ஐம்பதுகளிலும் தமிழாய்வு இன்று வளர்ந்துள்ள அளவிற்கு இருந்துளது என்பதனை மெய்ப்பிக்கும் நூல் ஆராய்ச்சியாளர் மு. இராகவையங்காரின் 'ஆராய்ச்சித் தொகுதி' யாகும். இத்தொகுதியில் செந்தமிழ் எனும் திங்களிதழில் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளே மிகுதி. பத்திரிகை வாசகர்களே பார்வையாளர்கள். ஆதலின் பேச்சுப்பாங்கில் முன்னிற்போரை அழைத்துப் பேசுவது போலவே கட்டுரைப் போக்கு அமைந்துள்ளது, ஒரு சிறந்த ஆய்வாளனின் பண்புநலன்கள் அனைத்தும் ஒருங்கே பெற்றவராய்த் திகழும் மு. இராகவையங்கார் இக் கட்டுரைகளில் தம் ஆய்வு நுணுக்கங்களைப் புலப்படுத்தப் பல உத்திகளைக் கையாண்டுள்ளார்.

இவ்வாய்வாளர் வேளிர் வரலாறு, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, சேரன் செங்குட்டுவன்,

ஆழ்வார்கள் காலநிலை, சாசனத் தமிழ்க்கவி சரிதம் ஆகிய ஆய்வு நூல்கள் எழுதியுள்ளார். நரி விருத்தம், சிதம்பரப் பாட்டியல், திருக்கலம்பகம், விக்கிரமச் சோழனுலா, சந்திரா லோகம், கேசவப்பெருமாள் இரட்டைமணி மாலை ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். 2000க்கும் மேற்பட்ட தனிப்பாடல்களைத் தொகுத்துள்ளார். ஆய்வாளர்க்குப் பயன்படும் வகையில் முன்னுள இலக்கியங்களைத் தொகுத்துள்ளார். பல நிகண்டுகளை ஆய்ந்து அகர நிரல்படி தொருத்துள்ளார். பல இடங்களில் கிடைத்த பரிமேலழகரின் உரை ஏடுகளையும் ஆய்வு செய்து திருத்தங்களுடன் கீழ்க்குறிப்பும் முன்னுரையும் அமைத்து வெளியிட்டார். விழுமிய பொருளில் ஒழுகிய ஓசையுடன் இவர் தம் நடை அமைந்துள்ளது. இதழாசிரியராக, தொகுப்பாசிரியராக. ஒப்பாய்வாளராக, விவாதமுறையில் பிறர்மதம் மதித்துத் தம் மதம் நிறுவும் ஆய்வில் அறிஞராகத் திகழ்வதை இந் நூல் வழி அறியலாம்.

வான்மீகி முனிவரும் தென்னாடும், இராமாயணமும் தமிழ் வழக்குகளும், கண்ணபிரானைப் பற்றிய தமிழ் நாட்டு வழக்குகள், அருச்சுனனும் பாண்டியமரபும், மார்கழி நோன்பாகிய தைந்நீராடல், மணிமேகலையும் புத்தசாதகமும், சேரர் வஞ்சியும் சிலா சாசன வழக்கும், தமிழரும் ஆந்திரரும் ஆகிய தலைப்புக்களில் அமைந்த ஆய்வுக் கட்டுரைகள் ஒப்பாய்வுத் திறனை விளக்குவன.

தருக்க நெறி முறை

வினாத் தொடுத்து விடை பகரும் பான்மையினைத் தொல்காப்பியத்துக் கண்ட பழைய வழக்குகள் என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் காணலாம். "இவை இவை விழ்ந்த வழக்குகள்" என்று குறிப்பிட்டவை பெரும் பாலவும் கடைச் சங்கத்தார் காலத்துக்கு முன்பு இறந்தவை என்றே கொள்ளத்தக்கன; என்னை? அச்சங்கத்திலக்கியங்

களெல்லாம் ஆராய்ந்தே அவர்கள் அங்ஙனமெழுதலான் என்பது,'' (ப. 120)

"ஆயின் இதனை ஈண்டுக்கூற வந்த தென்னையெனின், இப்புதிய கருத்து வெளிப்படின், அது பின் ஆராயப்பெற்று முடிவடைதற்குங் காரணமாகலாமென்னும் எண்ணங் கொண்டேயென்க.'' (ப. 405) என்று இளம்பூரணவடிகள் என்ற ஆய்வுக் கட்டுரையில் தருக்க நெறிமுறை வழிக் கருத்தைப் புலப்படுத்துகிறார்.

ஒழுகிய ஓசை

''இவ்வேகாதிபத்தியம் நிலைகுலையவே இதன் பிரதிநிதி களாய்த் தென்னாடாண்ட தலைவர்க்கும் வலியவர்க்கும் சிறியவும் பெரியவுமான இராஜ்யங்களை ஆங்காங்குத் தாபித்துக் கொண்டனர்.'' (ப. 336)

''பெரும் புகழாளராகிய இவர் காலத்திற் கோயில்களும் குளங்களும் செழித்ததும், மதுரையே புதுப்பிக்கப்பட்டதும் பலரும் அறிந்தவை'' (ப. 339)

''தமிழ் மக்கள் ஆந்திர தேசத்தை ஆண்ட காலங் களிலும் ஆந்திர மக்கள் தமிழகத்தை ஆண்டகாலங்களிலும் பாஷை நடையுடைகளாலும் மனோபாவங்களாலும் அவ்விருவரும் பெரிதும் கலப்புற்றிருக்க வேண்டுமென்பது சொல்லாமலே அமையும்'' (ப. 337)

''இவ்வாறு வெளிவாராமைக்கு, நூன்முழுதும் அகப் படாது போனமையே காரணமாகுமா'' (ப. 455) எனத் துணிவு உரைக்கும்போது தேற்றேகாரத்தைப் பயன்படுத்து கிறார். ''இந்நரிவிருத்தம் இக்காலத்து அருக்கிய நூலாயிருப் பினும், இதனுட் கூறப்பட்ட நாகரிகத்தை இந்நாட்டில் பண்டிதர் பாமரர் எல்லாரும் தெரிந்திருந்ததாகவே வெளியாகின்றது.'' (ப. 449).

சொற்றொடர் விளக்கம்

சொற்றொடர் விளக்கம் தரும்போது பழைய வழக்கும் உடன்கூறிப் பயின்று வரும் இலக்கிய மேற்கோளும் காட்டுகிறார். தாளம் போடுதல் (ப. 480) என்ற சொல் வழக்கு மிகப் பிற்காலத்தது; போகடுதல் எனபதே பழைய வழக்கு. "வண்டு போகட்ட மலர் போல் மருண் மாலை" விளையாட்டு என்பது, மனத்துக்கு இன்பம் விளைக்கும் ஆட்டம் என்று பொருள்படும்" (ப. 297) என்று பொருள் விளக்கம் தருவது ஒரு வரையறையாக விளங்குகிறது. தமிழில் வழங்கும் பிற நாட்டார் வழக்குகளைச் சுட்டுகிறார். துலாக் கோல். தராசு என்ற இந்திச் சொல்லாலும், மத்தியம், மையம் என்ற தெலுங்குச் சொல்லாலும் வழங்குவதை (ப. 483) எடுத்துக்கட்டுகிறார். "பாவையென்பது 'கொல்லிப்பாவை' என்புழிப்போல ஈண்டுப்பெண் தெய்வத்தின் பிரதிமையைக் குறிப்பதாகும்" (ப. 189) என்று உவமை வாயிலாகச் சொற்பொருள் விளக்கம் தந்துள்ளார். திறனாய்வு முறையிலும் சொற்றொடர் விளக்கம் தருவதைப் பரிமேலழகர் உரை ஆய்வில் காணலாம்" "இனி, 'ஒப்புரவறிதல்' என அதிகாரமிட்ட தெய்வப் புலவர் கருத்து யாது? பரிமேலழகர் கூறிய 'உலக நடையினை அறிந்து செய்தல்' என்பதனுள் 'உலக நடை' என்னுந்தொடர்க்கு 'உலகத்தின் நடைபேறு' என்று பொருள்கொள்ளுதலே வள்ளுவனார் திருவுள்ளத்துக்குஏற்றதாகும். என்னை? ஜனசமுக வாழ்க்கைக்கு இன்றியமையாத லோகோபகாரங்களை அறிந்து செய்தல் என்பதை ஒப்புரவறிதலதிகாரத்து வரும் ஒவ்வொரு குறளும் விளக்கி நிற்றலால் என்க." (ப. 213) பிறமொழிச் சொல்லுக்கும் பொருள் விளக்கம் தந்து தம் பன்னூற் பயிற்சியைப் புலப்படுத்துகிறார். 'லா' என்பதற்குத் தீபேத் பாஷையில் 'கணவாய்' என்ற பொருள் உண்டு நதுலா. ஜெலப்லா எனக்காண்க, (ப. 184) என்று வியங்கோள் கூறி விளக்குகிறார்.

முன்னிலைப்படுத்திக் கூறல்

"இனி வாதவூரடிகளது திருவெம்பாவையை நோக்கு வோம்" (ப. 189) என்பது போன்றவற்றைக் காணலாம்.

திருப்புக் காட்சிக்குக் கையாளும் உத்தி

வேறுபட நின்ற கருத்துக்களை விளக்கும்போது 'இது நிற்க' எனுஞ் சொற்றொடரை உத்தியாகப் பயன்படுத்து வதை இவர்தம் நூலில் பல விடங்களில் காணலாம். படிப் போரை அல்லது கேட்போரை வேறொரு காட்சிக்குத் திருப்பும் உத்தியே இதுவாகும். "இனி திருச்செங்குன்னூரி னும், திருவொற்றியூரினும் கண்ணகி கோயில் கொண்டாள் என்று கூறப்படுவதெல்லாம், அங்காலத்தே பத்தினி வணக் கம் நாடெங்கும் பரவிய செய்தி குறிப்பதாகவே கருதத் தக்கது. இதுநிற்க, தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையில் (100) தெய்வச்சிலையார், உருபுகள் பல பல வினையான் வந்து ஒருவினைகொண்டு முடிதற்குக் காட்டிய வெண்பா வொன்று, சிலப்பதிகார வரலாற்றைச் சுருங்கக் கூறு வதாம்." (ப. ?40).

உணர்ச்சி நடை போக்கு

"என்ன வீரம்! இதனினும் ஆச்சரியமான செய்தி கேட்டதுண்டோ!" (ப. 171) 'ஆகவே தமிழரசரில் இமயஞ் சென்று பெருமை படைத்தவர் யாவர் என்பது பற்றி நாம் விவாதிக்க வேண்டியதில்லை." (ப. 182) 'திருவள்ளு வரினும் சீரிய பெரியார் வேறு உளரோ?" (ப. 164) "இத் தகைய பயிற்சி சிறுபருவமுதலே நிகழ்ந்து வருமாயின் அந்த ஜனசமூகத்தை வெல்ல வல்லவர் உலகில் யாவர்? ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதன்றோ!" (ப. 168) எனச் சுட்டாலும் வினாவாலும் பழமொழியாலும் உணர் வைப் புலப்படுத்தியுள்ளார்'

ஊர்ப்பெயராய்வு

"அதமன் கோட்டை என்பது அதியமான் கோட்டை என்பதன் மரூஉவாகும். இதனால் இவ்வூரின் பழைமை பெறப்படும்." கண்ணை எனக் கூறப்பட்ட ஊர் இச்செங் கண்மா எனத் தெரிவதால் தேவார வைப்புத்தலம் இது போலும்" (ப. 294)

எதிர்மறைவழிக்கருத்து நிறுவல்

"சங்கச் செய்யுட்களில் தைந்நீராடல் என்று கூறப்படும் விரதம் அம்மார்கழி நோன்பின் வேறாகாதென்பதும் புலப் படக்கூடிய" (ப. 203)

நோக்கம் கூறி விளக்கல்

"அவ்வரலாறு யாது என்பதனை அறிய முயல்வதே இவ்வியாசத்தின் நோக்கமாகும். இங்கு அறிஞர்க்கெல்லாம் முன்னதாக அறிவித்துக் கொள்வதொன்று உண்டு. சைவரும் வைஷ்ணவர்களும் திருவெம்பாவை திருப்பாவை என்ற அடியார்கள் திவ்யப்பிரபந்தங்களைப் பாராயணஞ் செய்பவ ராய் மார்கழி மாதத்தைச் சிறப்பாகக் கொண்டாடி வரு வதற்கு அவரவர் தத்தம் மதத்துக்கேற்ப வேறு வேறு ஐதிகங்கள் கூறக்கூடும். அக்கூற்றுகளும் புகுந்து இன்னார் கொள்கையே ஏற்புடையது என்று நிர்ணயிப்பது என் கருத் தன்று. மற்று என்னெனில் இந்நோன்பு பற்றிப் பண்டைத் தமிழ் நூல் வழியாலும் பிறவழிகளாலும் தெரியும் வரலாறு களை ஒருங்கு நிரப்பிஎடுத்துக்காட்டுவதேயாகும்" (ப,186) பிறர்தம் மறுக்கும் போது நாகரிகமாகத் தம் நோக்கத்தைக் கூறியுள்ளார். "யான் சேரன் செங்குட்டுவன் சரிதத்தை எழுதி வெளியிட்டபோது, ஐயங்காரவர்களது மருமக்கட் டாயக்கொள்கை பண்டையோர்க்கு ஏற்புடையதன்று என்பது ஆராய்ச்சியில் தெரியவந்தமையின், அதனை அந்நூலுட் குறிப்பிடலானேன். அக்குறிப்பினையும் ஒருபடி

யாக நோக்கியே மக்கட்டாயக் கொள்கையைப் பாரதியவர்கள் மறுத்தெழுதியிருந்ததலால், இவர்களது வாதமுறைகளையும் சோதித்து ஒரு முடிவு பெற வைப்பது இப்போது இன்றியமையாததாக உள்ளது'' (ப.339) என்ற முன்னுரையில் ஆய்வின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்,

வடமொழிச் சொற்கள் விரவி வந்தாலும் கால்புள்ளி அரைப்புள்ளியிட்டு நீண்ட வாக்கியங்களை எழுதுகிறார். அத்தனைக் கட்டுரைகளும் ஆய்வுரைகளாகவே அமைந்துள்ளன. வடமொழி இலங்கியங்களும்கல்வெட்டுச் செய்திகளும் எடுத்தாளப்பெற்று அடிக்குறிப்பில் இடம் பெற்றுள. தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள்கள் கட்டுரைகளில் நடுவே காட்டுக்களாய் வந்துள. கட்டுரையின் உட்பகுதியில் சிறு தலைப்புக்கள் துணைத் தலைப்புக்களாகவே காட்சி தருகின்றன.

2. பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் உரை நடைமரபு

கரந்தைத் தமிழ்ச் சங்கம் பதினான்காம் ஆண்டு விழாத் தலைமைப் பேருரையின் தலைப்பு 'தமிழும் தமிழ்ப்பணியும்' என்பதாகும்.

கூட்டத்தினரை விளிக்கும் முகமாக ''ஐயன்மீர்! அன்னைமீர்'' ஆகிய சொற்களையே பயன்படுத்துகிறார் பண்டித மணி.

''இப்பொருளதிகாரத்திற் கண்ட கந்தழி முதலிய சொற்களை ஆராய்வோமாயின், அந்நூற் காலத்துத் தமிழரின் கடவுட் கொள்கை நன்கு புலப்படும்'' (பக்4-5)

''இதனால் தமிழரின் பழமை, காலத்தால் அறுதியிட்டுரைத்தல் அரிதென்பது போதரும். புதிய முறையில் ஆராய்ச்சி செய்வாருள் நுண்மாணுழைபுல மிக்கார் சிலர்க்கும் இஃது உடன்பாடே யாகும்.

தொன்மை வரலாற்று முறையில் நோக்கினும் பழமை புலனாகும்'' (ப. 5) ஆகியவற்றை ஆய்வுப் போக்கிற்குச் சான்றுகளாக்கலாம்.

உணர்வைக் கிளர்ந்தெழச் செய்யும் நடை

''இனி நூல்களின் உண்மைக் கருத்துக்களைத் தம் மதி நுட்பத்தாற் கண்டு உரைவரைந்த ஆசிரியர்களில் பெருமையையை என்னென்பேன்!'' (ப.11)

பேச்சில் அடுக்குத் தொடர்கள்

''......இன்ன இன்ன இடங்களில் இவ் விவ் வண்ணம் உரையாடல்...'' (பக்.12) ''புதிய புதிய எண்ணங்களை மேற்கொண்டு ஆராய்வார்க்கெல்லாம் சிந்தாமணி போல் நீதிப் பொருள்களை வழங்குவதும்'' (பக் 13-14) ''யார் யார் எவ்வெத்திறத்து நூல்களிற் பயிற்சி மிக்குடையரோ அவரவர் அவ்வத்திறத்து நூல்களுக்கு உரையெழுதப் புகல் வேண்டும்.'' (ப. 22)

உம் எனும் ஒழுகிசை

''பல்லாயிரம் ஆண்டுகளாக நம் தேசத்தாராற் பிரமாண நூல்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் இருக்கு முதலிய வேதங்களும், அவற்றுண் முடிபொருளாக விளக்கும் உபநிடதங்களும், தமிழ் நிலத்தார் வாழ்க்கைக்கு இன்றியமையாச் சிறப்பு நூல்களாகவுள்ள ஆகமங்களும் ஆகிய இன்னோரன்ன மூல நூல்கள்......'' (ப. 19)

''இன்னும் வடமொழிக் கண்ணுள்ள அளவை நூல்களும் பிறவும் மொழி பெயர்க்கப்பட வேண்டும்'' (ப. 20)

சொற்பொருள் விளக்கம்

''நூலாசிரியர் உள்ளக்கிடக்கையை நுணுகி ஆராய்ந்து தெளிவுபெற எடுத்தெழுதும் வன்மையாளரே உண்மை உரையாசிரியராவார்'' (ப. 22)

வியங்கோள் தொடர்கள்

''ஆதலின், தமிழ் நலங்கருதி இன்னோரன்ன துறையில் இறங்குமின்கள்! செல்வம் படைத்த ஞான்றே புலவர் பக்க லிருக்க விழைமின்கள்!'' (ப. 26)

எதுகைத் தொடர்

''அவிச்சுவையிலும் இனிய கவிச் சுவையை நுகர் மின்கள்! (ப.26)

மேற்கோள் காட்டி நிறுவல்

''புகழொன்றே, வலவனேவா வானவூர்தியெய்துத லாகிய புண்ணியப் பயனும் நுங்கட்தாம் என்ற தமது கருத்தைப் பழைய பாட்டுச் சொற்களில் அமைக்கிறார். அதற்குச் சான்றாதாரமாக சேக்கிழார் பரஞ்சோதியார் கருத்துக்களை எடுத்தாள்கிறார்.

இலக்கிய மொழி வழக்குகளை அமைத்து உரை செய்தல்

''புலவர் பாடும் புகழுடையாரன்றே'' (ப.50) ''இனிப் பழங்கதைப் பேசிக் கொண்டிருத்தலிற் பயனின்று'' (ப. 51) ''இகலிலர் எஃகுடையராய்த் தம்மிற்கு இன்புறுதலை விடுத்து'' (பக். 52)

முரண்தொடர்

''தீயன கலைந்தாலன்றி நல்லன செய்தற்கு இடன மைதல் அரிது'' (ப, 51) ''பழையன கழிதலினும் புதியன புகுதலினும் முறையே தீமையும் நன்மையும் அறிந்து கோடல் நன்று'' (ப. 53) எனும் பேச்சில் அணி நயம் உள் ளது.

வினையெச்சத் தொடர் சுருக்கல்

"தன்னிடத்துள்ள சிறந்த பழமுதுநூல்களைக்கால மாறுபாட்டால் நீருண்ண, நெருப்புண்ண, நிலமுண்ணக் கொடுத்து இழந்தமை..." (ப. 55)

உணர்வு கிளர்ந்தெழச் செய்தல்

"இதனுட் புகுமின்! புகுங்கால் முதற்கண் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை நெஞ்சார நினைமின்! தமிழ்த் தாயை வாழ்த்துமின்! யான் கூறியவற்றுட் கொள்ளுவன கொண்மின்!" (ப. 59)

"புலத்துறை முற்றிய தவத்துறையும் அன்பரீர்" (ப. 55) என முன்னிலையோரை அழைத்துஅத்துணையுடன் பேச்சு நிகழ்த்துகிறார்.

செந்தமிழ் நடையில் பேச்சு நிகழ்கிறது. "ஒரு நாடு தமக்குரிய மொழியை ஆக்கமுறை ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்துதல் அரிதாம்" (ப. 55)

நம் பண்டைய நீதி நூலாசிரியர் என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை வானொலிப் பேச்சாகும்..."உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் வள்ளுவர் வாய்மொழியிற் காண படுவனவேயாம்" (ப. 60) என்ற தொடரில் எதுகை மோனை நயம் உள்ளது, "ஆகவே எத்தகைய நீதிகளையும் காலநோக்கிக்கொள்ளுதலும் தள்ளுதலுஞ் செய்தல் வேண்டும்" (ப. 67) என்றவாக்கியத்தில் தொடரிணைப்பான் காணப்படுகிறது. மாணிக்கவாசகர் என்ற தலைப்பும் வானொலிப்பேச்சே. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்னும் மூதுரையும் இது பற்றியெழுந்ததே" (ப. 72) என்று காரணங்காரியத்துடன் வாக்கியம் அமைந்து காணப்படுகிறது.

உவமைகூறி விளக்கல்

எங்கும் நிறைந்த பரம்பொருளைச் சில இடங்களில் மாத்திரம் உள்ளதாகக்கொண்டு பாடியது பொருந்துமோ எனின் ஒரு பதவின் உடல் முழுதும் பால் பரவியிருப்பினும் அது தோன்றுதற்குரிய உறுப்பினன்றிப் பிரிவிடத்து வெளிப் படாதவாறு போல, மக்கள் வழிபாட்டிக்கிரங்கி அருள்புரி தற்கு அருட்குறிகளின் முகமாக ஆண்டவன் வெளிப்பட்டு அருளுவர்.'' (ப. 73)

''குயிலை முன்னிலைப்படுத்தி இறைவன் அருட்குணங் களை இங்ஙனம் கூறுக எனவும், வண்டுகளை நோக்கி இங்ஙனம் ஊதுக எனவும் அருளிச் செய்த திருப்பாடல்களை நோக்குங்கால், ஓசையொலியெலாம் சிவமயமாகக் கண் டார் என்பது புலனாம்' (ப. 76) என்பதில் சுட்டை அடுக்கு கிறார். ''சங்ககாலத்து அங்கதம் என்றகட்டுரை வானொலி யில் பேசியதாம்.

''ஒருவனுடைய குறையையோ ஒரு சமூகத்தாரின் குறையையோ, அன்னார் நெஞ்சில் உறுத்தும் வண்ணம் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கூறுதல் அங்கத மாகும்'' (ப. 78)

வாய்காவாது சொல்லும் வசையே செம்பொருளங்கதம் எனப்படும் ''செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினுமென்'' என்னும் திருக்குறளால் அறிய லாம். (ப. 78—79)

காதற்கடிதங்கள் தலைப்புக் கட்டுரையும் வானொலி யில் பேசியதே. ''காதல் என்பது, ஆடவர் மகளிர் இரு வரும் உலக வாழ்க்கையில் அறநெறி பிறழாதொழுகி இன்ப நுகர்தற்குரிய சிறந்த குணமாகும்'' (ப.88) எனத் தலைப் பில் உள்ள சொல்லுக்கு விளக்கம் தந்துள்ளார். இரு காப் பியங்களில் இடம்பெறும் பெண்மக்கள் எழுதிய காதல் கடிதங்களை ஒப்பாய்வு செய்கிறார்.

குறுந்தொகை மாநாட்டில் பேசிய தலைமை உரையே 'குறுந்தொகை' எனும் கட்டுரை உவமை பற்றிய விளக்கத்தின்போது திருக்குறள் சிந்தாமணி போன்ற நூல்களிலிருந்து ஒப்புமை உவமைகளை எடுத்துக்காட்டி விளக்குகிறார். இறுதியில் அமைந்த மணிமேகலைக் கட்டுரை வானொலிப் பேச்சேயாகும். செந்தமிழ் நடையில் ஆராய்ச்சித்திறன் மிகுந்த பேச்சுக்களாகத் அனைத்தும் அமைந்துள.

உரைநடைக்கோவை எனும்பொழிவு நூலில் காணப்படும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துப் பதினான்காம் ஆண்டுவிழாவில் தலைமை தாங்கிப் பேருரை நிகழ்த்திய பேச்சிலிருந்து கேட்டார் பிணிக்கும் தகைமை நெறிகளைக் காண்போம்.

"இப்பொருளதிகாரத்திற் கண்ட கந்தழி முதலிய சொற்களை ஆராய்வோமாயின் அந்நூற் காலத்துத் தமிழரின் கடவுட் கொள்கை நன்கு புலப்படும் "ஒரு பற்றுக் கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொரு"ளாகக் கடவுளைத் தமிழர் ஆராய்ந்து தெளிந்துள்ளாரென்பது அதனாற் புலனாம். தொல்காப்பியர் தமிழ் நிலத்தார் ஒழுங்கங்கண்டு நூல் செய்யுங் காலத்துத் தமிழர் நிலை இத்துணை மேம்பாடுற்றிருக்குமாயின் அதற்கு முன் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் தத்துவ ஆராய்ச்சியில்தலைப்பட்டிருத்தல் வேண்டும். நாள் வினைகளைச் செவ்விதின் இறுக்கப் பணிக்கும் அற நூல்களின் வழியொழுகிப் பயன்படுத்தப்பட்ட உள்ள நிலையுடையாரன்றே முடிவில் தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுவர்? அங்ஙனம் தலைப்படுவாரும் கடவுட்குப் பல்வகைப் பொருந்தா இலக்கணங்களைக் கண்டு ஒருவரோடொருவர் தம்முள் முன்ரண்படுவர். அம்முரண்பாடறுத்துக் கடவுட் பொருளின் தூய இயல்நிலையை உள்ளவாறுணர்வார் மிகவும் அரியர். இவ்வரிய உணர்ச்சியைத் தமிழர் எத்துணையோ ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே எளிதிற் கைவரப்பெற்று ஒழுகினரென்பது அத்தொல்காப்பிய முது

நூலிற் கண்ட உண்மைத் தெளிவாகும் (பக், 5-6). இப்பேச்சுரையில் தருக்கமுறை விளக்கம் காணப்படுகிறது.

"நாளடைவிற் புலவர் தனித் தமிழ்ச் சொற்களைத் தெரிந்து வழங்கும் மதுகையின்மையானும், ஒரோவழித் தெரியினும் அவற்றினும் வடசொற்றொடை செவிக்கு இன்பம் பயப்பனவாம் என மாறுகொள உணர்ந்தமையானும், தனித் தமிழர் சுவைகண்டு இன்புறும் தலைவர் அருகினமையானும், வடமொழியாளர் உவப்பத் தமிழிற் பாட்டு உரை முதலியன இயற்ற வேண்டுமென்னும் விழைவு மேற்கொண்டமையானும், பொது வெழுத்தானும், சிறப்பெழுத்தானும் ஆய வடசொற்கள் பலவற்றைத் தமிழில் வரம்பின்றி வழங்கி வருவாராயினர்" (பக் 8-9). இழும் எனும் ஓசை நயம்படக் காரணவிளக்கம் கூறப்படுகிறது.

"தமிழ்த்துறையில் ஒருசிறிதும் பயிலாத சிலர் தம் பதவி மேம்பாட்டால் ஒரோ வமயம் இன்னோரன்ன அவைக்களங்களில் தலைவராக வீற்றிருக்கும் பேறு பெறுங்கால் அவர் கூறும் உபதேசம் எத்துணைப் பயனுடையதாகுமென்பதை நீங்கள் அறிவர்கள்" (ப.20). அங்கதப்பேச்சால் பொருளைப் பெறவைக்கின்றார்.

"கூறப்படும் பொருள் சிறந்ததாக இருப்பினும் கூறுவவோன் புலவன் அல்லனேல் அது பிறர் நெஞ்சில் தங்கி இன்புறுத்தலாற்றாது" (ப. 24) என்று புலப்பாட்டு நெறிக்கு இலக்கணம் தருகின்றார்,

"நூலாசிரியர் உள்ளக்கிடக்கையை நுணுகி ஆராய்ந்து தெளிவுபெற எடுத்தெழுதும் தின்மையாளரே உண்மையாசிரியராவர்" (பக். 25-26) என்று உரையாசிரியர் எனும் சொல்லுக்கு விளக்கம் தந்துள்ளார்.

"யார் யார் எவ்வத் திறத்து நூல்களிற் பயிற்சிமிக்குடையாரோ அவரவர் அவ்வத்திறத்து நூல்களுக்கும் உரை

யெழுதப் புகல் வேண்டும்'' (பக். 26). எதுகையுடன் கூடிய பேச்சு முறை காணப்படுகிறது.

நீண்ட வாக்கிய அமைப்புக் காணப்படுதல் போல அவர் பேச்சில் நிபந்தனை வாக்கியங்களும் காணப்படுகின்றன... ''எம் மரபினர் புதிய முறையில் எவ்வறத்தையும் முதற்கண் தொடங்குதல் அரிது. அறிவாளரொருவர் தொடங்குவராயின் அவர் முறையைப் பின்பற்றி மற்றையோரும் அந்நற்காரியத்தில் சேறலிற்பெரிதும் விரைவு மேற்கொள்வர்,'' (ப. 33)

முரண்பட வாக்கியங்களைக் கூறிக் கருத்தை விளக்குவார். ''இச்சங்கத்தின் வேலையோ மிகப் பெரிது, இதற்குத் துணைக் கருவியாகவுள்ள பொருள் வருவாயோ மிகச் சுருக்கம்'' (ப. 37)

அளபெடையில் வாக்கிய அமைப்பு தொகுப்புரையில் காணப்படுகிறது. (ப. 40) இதுகாறும் கூறியவற்றால் கல்வி மக்களுக்கு இன்றியமையாதென்பதூஉம், அதனைத் தாய் மொழியாகிய தமிழ் மூலம் பயிலல் வேண்டுமென் பதூஉம், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று விரையில் நிலைபெறச் செய்தல் வேண்டுமென்பதூ உம்......பிறவுமாம்.'' (பக் 40-41)

1932ல் தமிழ்ப் புலவர் மாநாட்டில் நிகழ்த்திய சிறப்புரை 'தமிழ்ப்புலமை' எனுந்தலைப்பில் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

உருவக அமைப்பு

''மதிவலி மிக்க முது புலவனிடத்தினின்றும் தோன்றிய பாடல் நங்கைக்கு, திட்பநுட்பம், தெளிவு, விளக்கம், இனிமை முதலிய பண்புகளமைந்த சொற்றொடர்க்குழுவே

அழகிய உடலும், சுவை நலமுந்துறும் தொனிப்பொருளே உயிருமாம்.'' இந்நங்கைக்கு உவமை முதலிய அணிகளே அணிகலன்களாம்'' (ப. 40)

எதிர் மறைகூறிக் கருத்து விளக்கல்

''தீயன களைந்தாலன்றி நல்லன செய்தற்கு இடனமைதல் அரிது'' (ப, 54) ''ஒரு நாடு தனக்குரிய மொழியை ஆக்கமுறை ஓம்பிப் பாதுகாத்தாலன்றித் தான் சிறந்த நிலை எய்தல் அரிதாம்'' (ப. 59) எந்நாடு தன் மொழிச் சுவையை உணர்தலிற் பின்னடைகின்றதோ, அது மற்றையெல்லா வளங்களானும் பிற்பட்டதாகும்.'' (ப. 59)

இறுவாய்ப்பகுதியில் உணர்ச்சி நடை காணப்படுகிறது. வியப்புக்குறியிடும் வகையில் வினை முற்றுக்கள் இடம் பெற்றுள. ''இதனுட் புகுமின்: புதுங்கால் முதற்கண் எல்லாம் வல்ல இறைவன் திருவருளை நெஞ்சார நினைமின்? தமிழ்த்தாயை வாழ்த்துமின்! யான் கூறியனவற்றுள் கொள்ளுவன கொண்மின்! இன்னும் புலமை வாழ்க்கைக்கு வேண்டுவன சூழ்மின்! சூழ்ச்சி முடிவில் துணிவு எய்துமின்! அத்துணிப் பொருளைத் தாழாது செயலின் மேற்கோண்மின்! (ப. 63)

சமயச் சொற்பொழிவிலும் சிறந்து விளங்கினார். இவரது உரைநடைத் தொகுப்புக்களில் முற்பகுதி சமயக் கட்டுரைகளின் தொகுப்பாகும். உரைநடைக் கோவையின் முதற்கட்டுரை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பத்தாம் ஆண்டு விழாவில் ஆற்றிய சொற்பொழிவாகும். சன்மார்க்கம் என்ற தலைப்பில் அவர் பேசிய பேச்சில் அவருடைய புலப்பாட்டு நெறிக் கூறுகளைக் காணலாம்.

'அன்புமிக்க ஐயன்மீர்' 'ஆன்றோர்களே' என விளிக்கிறார். சிவபெருமானை 'பரமகருணாநிதியாகிய சிவபெருமான்' என்று அடைமொழி கொடுத்து அழைக்கிறார்.

புணர்ச்சி விதிப்படி வாக்கியங்களைச் சந்தி பிரிக்காது அமைக்கிறார். "யாக்கையுடையாரெல்லாரும்தம் பிறப்பா பானனெய்தற் பாலனவாகிய உறுதிப் பயன்களை வாய்துவதற்கு இன்றியமையாச் சாதனங்களாகவுள்ள மொழியறிவும், சமய ஞானமுமேயாம்" (ப. 1)

முன்னால் இருப்போரை உளப்படுத்திப் பேசும்பாங்கு காணப்படுகிறது. "இந்நிலவுலகத்திலுள்ள மக்கட் பிறப்பின ராகிய நாமோ நல்வினை தீவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களைக் கலந்தனுபவிக்கும்படி இறைவனால் கட்டளை இடப்பட்டிருக்கின்றோம்" (ப. 2)

உணர்ச்சிநடை

"அப்பொழுது. ஆ! சற்றுமுன்னரனுபவித்த இன்பம் எங்கே? நிலையிலதாயொழிந்ததே! அதனையே பொரு ளென்று நம்பியிருந்தோமே" (பக் 4-5)

சொற்பொருள் விளக்கம்

சன்மார்க்கம்: "அதுவே தன்பால் நேரிற்போந்தாரைப் பிறவழிகளிற் புகுத்தித் துன்புறுத்தாது, செல்லுந்தோறும் செல்லுந்தோறும் அளவிலா இன்பமுறுத்தி முடிவில் ஒரு தலையாக வீட்டின்பத்திற்றலைப் படுத்துவதாகும். அப் பெருநெறியே சன்மார்க்கமென்று கூறற்குரியதாகும். சன் மார்க்கமென்னும் வடசொல்லை உண்மை நெறியெனத் தமிழிற் பெயர்க்கவாம்" (ப. 6) என்று வடமொழிப் புலமையையும் வெளிப்படுத்துகிறார்.

வினாவழிச் சிந்தனையைத்தூண்டல்

"அங்ஙனம் ஆராயப்புகும்பொழுது முதலில் நான் யார்? எனக்கு இவ்வுடல் வந்தவாறென்னை? என்னோடொத்த பிறப்புடையார் பலரும் பலவிதத் தோற்றமுடையராதற்

கேதுவென்னை? நான் இன்பநுகரும் பொழுது மற்றொரு வன் மிக்க இளமையில் இறக்கின்றனனே;'' (பக் 6-7) இவ் வாறு முரண் அமைத்தும் சிந்தனையைத் தூண்டுகிறார்.

அளபெடை நடை

செய்யுளில் ஓசை நிறைக்கவும் யாப்பமைதிக்காகவும் வரும் அளபெடைகள் பண்டிதமணியின் சொற்பொழிவு நடையிலும் காணப்படுகின்றன ''...இப்பிறப்பிற் செய்யப்பட்ட வினைகள் காரணமாக இன்னும் பல பிறவிகள் நேருமென்பதூ உம்,இங்ஙனமுணர்ந்து வைத்தும் பினனரும் அவ்வினை யீட்டத்திலுள்ளஞ்சேறல் எதனாலென்பதூ உம் பிறவுமாகிய வுணர்ச்சிகளுண்டாம்,'' (ப. 7)

தருக்கமுறை நடை

''ஆனால். முன்னுள்ள ஆணவ மல வழுக்கைப் போக்குதற்குப் பின்னும் இருமலங்களைக் கருவியாகக் கோடல் பொருந்துமோ வெனின், வெள்ளிய .ஆடையிலுள்ள அழுக்கைப் போக்குவதற்கு உவருஞ் சாணியுமாகிய வேறிரண்டு பொருள்களைச் சேர்த்து எல்லாவற்றையும் ஒருங்கே கழுவுதல் வண்ணானிடத்துக் காட்சியிற்றெரிந்திருக்கின்றேமாகலின் பொருந்துமென்க.'' (ப. 8)

மறுத்துக்கூறல்

''இறையுயிர்களின் சிறப்பு இயைபையே அத்துவிதமென்ப இங்ஙனமின்றி அத்துவிதம் என்னும் சொற்கு ஏகமென்று பொருள் கொள்ளுவாரும் உளரேயெனின், அஃது ஏகமென்னாது இரண்டற்றது என்னும் பொருள்பட அத்துவிதம் என்று உய்த்துணர வைத்தமையாற், பொருந்தாதென்க.'' (ப. 9)

உவமைக்கூறி விளக்கல்

"ஒருவண்டு தேனிறைந்த மலரில் வீழ்ந்து அம்மதுவை தேக்கறவுண்டு களித்து அதன்கட்டோய்த்திருக்கும்பொழுது தான்வேறு மதுவேறு என்னும் வேற்றுமையுணர்வின்றிக் கிடத்தல்போல, ஆன்மா இறைவனிடத்துப்பேரின்ப நுகர்ச்சியிற்றலைப் பட்டுத்தான் ஒரு பொருளென்னும் வேற்றுமையுணர்வின்றியொன்றுபட்டிருக்கும் அந்நிலையே அத்துவித நிலையாகும்." (ப. 9)

மேற்கோள் காட்டி விளக்கம்

ஆன்மாவும் மலமும் ஒன்றுபட்டிருக்கும் நிலையும் ஓரத்துவித நிலையே என்று விளக்கவந்த பண்டிதமணி தாயுமானாரின் பாடல் அடிகளை மேற்கோளாகக் கையாள்கின்றார். "இதனை

"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ"

என வரும் தாயுமான அடிகள் உபதேசத்தானுமுணர்க" (ப. 10) வடமொழிக் கிரந்தங்களையும் எடுத்துக்காட்டிச் சன்மார்க்கத்தை விளக்குகிறார்.

பூவாரூர்ச் சைவசித்தாந்த சங்கத்தின் ஐந்தாமாண்டு நிறைவு விழாச்சொற்பொழிவின் தலைப்பே "சிவபெருமான் கருணையும் சீவர்கள் கடமையும்" ஆகும். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 25-ஆண்டு விழாவின் தலைமையுரையே "சைவ சமய விளக்கம்" 'ஞானத்தின் திருவுரு'வும் 'அண்டாள் திருவுரு'வும் ஆய்வுக் கட்டுரைகளாம். இவ்வைந்து கட்டுரைகளின் தொகுப்பே உரைநடைக்கோவையின் முதற் பகுதியாம்.

3. மறைமலை அடிகள் புலப்பாட்டு நெறி

'மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்' என்னும் செந்தமிழ் களஞ்சியத்தில் மறை மலையடிகள் கூறும் செய்திகளை எவ்வகை நிலையில் உணர்த்துகிறார் எனக்காண் போம்மாணிக்கவாசகரின் பெற்றோர்பெயர்புலப்படவில்லை என்ற தமது கருத்தை நிலைநாட்ட பிறர் கருத்தை மறுத்து மொழிகின்றார். "இவர் தந்தையார் பெயர் சம்புபாதாசிரியர்எனவும் அன்னையார் பெயர் சிவஞானவதியார் எனவும் இஞ்ஞான்றுள்ளார் சிலர் கூறினும் இப்பெயர்கள் நம்பியார் திருவிளையாடலிலும், திருவாதவூரர் புராணத்தினுங் காணப்படாமையானும், இத்தகைய வடமொழிப் பெயர்கள் பழைய நாளிலிருந்த தமிழர்க்குள் வழங்காமையானும்,திருஞான சம்பந்தப் பெருமான் தந்தையார் பெயராகக் கூறப்படுஞ் சிவபாதவிருதயர் என்பதன் மொழி பெயர்ப்பாகச் சம்புபாதாசிரியர் எனுஞ்சொற் காணப்படுதலோடு அவர் தம் அன்னையாரின் பெயரான பகவதி என்பதைப் போற் சிவஞானவதி என்னும் மொழியுங் காணப்படலானும் இப்பெயர்கள் பிற்காலத்தார் எவரோ புனைந்து கட்டிவிட்டனவாதல் தோற்றமாம்." (ப, 1)

வரலாற்றுமுறை ஆய்வுநடை

மணிவாசகர் அருள் பெற்ற நிலை குறித்து வரலாற்று மாற்றங்கள் காணப்படுவதாகவும் அம்மாற்றங்களைத் தெளிவு படுத்த விரும்புவதாகவும் கருத்துத் தெரிவிக்கிறார் மறைமலையடிகள். அவ்வாறு தெளிவுபடுத்தும் போது நூல்களிலிருந்து அகச்சான்றுகளை எடுத்துக்காட்டி விளக்குகிறார். "குருந்தம் மேவிய சீர் ஆதியே" என்ற பாடல் அடி வழியாகக் கோவில் உண்மையின் காலத்தை மதிப்பீடு செய்கிறார். (ப. 7) திருவாதவூரர் புராணச் செய்தியே உண்மை என்று நிலை நாட்ட அகச்சான்றிலிருந்து எடுத்துக் காட்டுகள் தந்துள்ளார்.

மோனை நடை

அவ்வாசிரியரின் அடிகளை அடிமை கொண்டருளிய பின்னும் பலநாட்கள் அத்திருப்பெருந்துறைப் பூங்காவின் கண் அமர்ந்தருளினனெனக் கொள்வதாயிற்று''. (ப. 13)

உணர்ச்சி நடை

இப்பொருளையெல்லாம், பலதிருப்பணிகட்குக் கொடுமின்! மேலான அருந்தவத்தோர்க்கு வழங்குமின்! நுகற்றதற்கன்றி வறுமையான் நலிந்தார்க்கு உதவுமின்!'' (ப. 15)

உரையாசிரியர்களின் நடைபோக்கு

''அடிகள்பால் ஏற்றுமன்றோவெனின்; அற்றன்று, அடிகள் அமைச்சராய் நின்ற நிலையில் அரசனது பொருளைத் தாம் வேண்டியவாறு செலவழித்தாரல்லர்?'' (ப. 15) வியங்கோள் வினைமுற்றமைந்த வாக்கியங்களைப் பல இடங்களில் காணலாம். திருவாசகம் திருச்சதகம் 61வது பாடலில் வரும் 'நனிகாணேன்' என்ற சொற்றொடர்க்கு விளக்கம் தரும்போது ''தம் ஆசிரியனைப் பலநாளுங் காணப்பெறாது பிரிந்ததனை நன்கு புலப் படுத்தல் உணர்ந்து கொள்க.'' (ப. 14)

எண்ணும்மைகளை அமைப்பதுடன் புணர்ச்சி விதிப் படிச் சொற்றொடர்களை வாக்கியங்களில் அமைப்பார். ''இவ்வாறு பாண்டியன் சிற்றமுந் துயரமும் வியப்புங் கொண்டிருக்கையில் புலரிக்காலம் வந்தது: பகலவன் தன் அலர்க் கதிர்களைப் பரப்பிக்கொண்டு கீழ்பாலிற் செம் பொற்றிரளை போற்றோன்றினான்.'' (ப. 47)

செய்யுளில் அளபெடை அமைவது போல உரைநடையிலும் இவர் அளபெடை அமைத்து எழுதுவார், ''அல்லதூஉம், கீழ் கடற்கரை மருங்கேயுள்ள ஊர்களிற் கார் காலத்தில் மழை தப்பாது பெய்தல் போலக்'' (ப. 52)

பழமொழியைக் கையாளல்

அவ்வாறு கொள்ளலாம், இயற்கையாய் நிகழ்ந்த அந் நிகழ்ச்சியே அடிகளைக் காத்ததற்கும் உதவியாயினது 'காக்கை ஏற்ப பனம்பழம் வீழ்ந்த' நிகழ்ச்சியோ டொப்ப தேயாமெனின், (ப. 53)

வினையெச்ச அடுக்கும் நடை

''ஓர் அனற் பிழம்பு கிளர்ந்து தோன்றி ஒளிர, அதனைக் கண்ட அடிகளை உள்ளிட்ட அடியார் குழாத்துட் பலர் அதன்கட் சென்று வீழ்ந்து மறைந்தனர்.'' (ப. 66)

தருக்க நடை

இத் 'திருப்பொன்னு சல்' தில்லையில் அருளிச் செய்யப் பட்டதென்று எவரோ வரைந்து வைத்தது சிறிதும் பொருந் தாது. என்னை? அத்திருப்பொன்னூசல் செய்யுட் களிலும் திருவுத்தர கோச மங்கையே விதந்தெடுத்து வைத் துப் பாடப்படுதலின் என்க.'' (ப. 68) அரசவையில் பொன்னம்பலம் என்பதற்கு விளக்கம் தந்தவுடன் அருகே இருந்த புத்தகுரு கோபித்தெழ அவருடன் சொற்போர் செய்தார் மாணிக்கவாசகர். அக்காட்சியை விளக்கும் அடிகளார் தருக்கமுறை நடையைக் கையாண்டு உரைநடை எழுதியுள்ளார். புத்த சமயக்கோட் பாடுகளை மறுத்து, சைவசமையக் கோட்பாடுகளை விளக்குகிறார்.

அடுக்குத் தொடர்வழிக்கோட்பாடுகளை விளக்கல்

''மக்கள் தேவர் ஈறாகப் பலப்பல பிறவிகள் எடுத்து, அவற்றால் அறியாமை தேய்ந்து தேய்ந்து அறிவு விளங்க விளங்க, இறுதியில் இறைவனே குருவடிவிற்றோன்றி அவர்க்கு முற்றறிவு விளங்கச் செய்து, அவரைத் தனது திரு வருட் பேரின்பத்தில் அடக்கிக் கொள்வன்,'' (ப. 98)

வினாவி எதிர்மறை கூறி விடை அமைக்கும் நடையில் வாக்கியம் காணப்படுகிறது. "இஞ்ஞான்றுள்ள பார்ப்பனரும் தவறாமல் ஓதியும் பாராயணஞ் செய்தும் வருகிற அப்பழைய மந்திரமொழிகளை உரைப்போரேனும் ஆக்கினோரேனுங் கூடப் பிரமம் எங்குளது எங்கிருந்து வருகிறது எங்கே செல்கிறதெனத் தாம் பார்த்ததாக வாதல் அறிந்த தாக வாதல் கூறவில்லை என்கின்றாய். ஆதலிற்றான். மூன்று வேதங்களிலும் வல்ல பார்ப்பனர் நாம் அதனைப் பார்த்ததும் இல்லை. அறிந்ததும் இல்லை," (ப. 115)

எதிர்மறையால் கருத்து விளக்கும் நடை

"இங்ஙனம் போந்ததாகிய கௌதம சாக்கியரின் அறிவுரையை நடுநின்று நன்கு ஆராய்ந்து பார்க்குங்கால், அவருடைய கொள்கைகள் பழைய பழைய சைவ சமயக் கொள்கைகளோடு முழுதும் ஒத்துநிற்கக் காண்கின்றனமேயல்லாமல் அவற்றொடு மாறுதலைச் சிறிதுங் காண்கிலோம்" (ப. 119)

சொற்பொருள் விளக்கம்

"இனி, ஆரியப் பார்ப்பனர் தாம் கொணர்ந்த சிறு தெய்வப்பாட்டுகளை 'வேதம்' எனுஞ் சொல்லால் உயர்த்திக்கூறி வழங்கலாயினது பற்றிச் சைவ சமய ஆசிரியர்கள் அதனையுந் தழுவிக் கூறுவராயினும் அவ்வாரிய வேதங்களின் வேறாக அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருள்களையுணர்த்தும் தமிழ் நான் மறைகள் உளவென்பதற்கு,

" அங்கமாய் ஆதியாய் வேதம் ஆகிய
அருமறையோ டைம்பூதந் தானேயாகி"

என்று திருநாவுக்கரசு அடிகளும்:

" பங்கமேறு மதிசேர் சடையார் விடையார்
பலவேதம்
அங்கம் ஆறும். இறைநான் கவையுமானார்"

என்று திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் ஆரியர் கூறிய வேதம் என்பதனோடு 'மறை' என்பதனையும் உடன் வைத்து ஓதுதலே சான்றாம்''. (ப. 122) மந்திரம் என்ற சொல் தூயதமிழ்ச் சொல் என்று நிறுவுகிறார்.

" நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திரமென்ப''

என்று கூறப்படுதலின் மந்திரம் என்னுஞ் சொல் மிகப் பழைய காலந்தொட்டே தமிழ் மொழியில் வழங்கினமை பெறப்படும். 'மந்திரம்' என்னுஞ் சொல்லுக்குப் பொருள் பிறர் செவிக்குப் புலப்படாமல் மறைத்துச் சொல்லுதலே யாமென்பதும் இச்சூத்திரத்தால் நன்குணரக் கிடக்கின்றது. ஆகவே 'மந்திரம்' 'மறைமொழி' யென்பன ஒரு பொருட் கிளவியாதல்பெற்றாம். அரியமெய்ப்பொருளுரையினையே மந்திரம் என வழங்குதல் தமிழ் நூல் வழக்கு'', (ப. 385)

4. செல்வகேசவராய முதலியாரின் நடைச்சிறப்பு

முதலியாரின் நடையில் வடமொழிக்கலப்பு உண்டு. அது அவர் காலச் சூழலைச் சுட்டும். 'தமிழ் வியாசங்கள்' என்ற நூல்வழி அவர் நடையினைக் காண்போம்.

சுத்தத்தின் பெருமையை, ''சுத்தம் சோறிடும்'' என்ப தனாலறியலாம். சுத்தமாவது மலினமில்லாத தன்மை'' (ப. 12) ''கந்தையானலும் கசக்கிக் கட்டு, கூழானாலும், குளித்துக்குடி என்பதே நம்மவர்களில் வறிஞரும் வழங்கும் முதுரை'' (ப. 12) ''செய்வன திருந்தச் செய் என்பதை எவரும் எவ்விஷயத்திலும் மறத்தலாகாது'', (ப. 12.)

''நோய்க்கிடம் கொடேல் என்பனத மறந்து, நோய் வந்தபின் வைத்தியரையும் சுகாதார சாஸ்திரத்தையும்

தேடுவது, கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வதை ஒக்கும்.'' ப. 26.

மேற்கோள் காட்டல்

கருத்து விளக்கத்தின்போது திருக்குறளை, மேற்கோள் காட்டியுள்ளார். வரவுக்குத் தக்கபடி செலவு செய்தல் வேண்டும் என்பதை விளக்க,

> "ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
> போகா றகலாக்கடை''

என்று குறளைக் கூறிய பின் புராண மாந்தரையும் தொடர்பு படுத்திக் காட்டுகிறார். "அளகேசனாலும் அளவறிந்து செலவு செய்ய வேண்டும்'' (ப. 36.)

அறவுரைகளை அடுக்குகிறார். "தானமது விரும்பு, தருமத்துக்குத் தாழ்ச்சி வராது, தருமமே தலைகாக்கும். ஈயார் தேட்டைத்தீயார் கொள்வர். ஈயாதார் வாழ்ந்தென்ன இண்டஞ்செடி தழைத்தென்ன?''

"இளைஞர் இனத்தை இளைஞர் நாடுவது இயற்கை'' என்று மோனை நயத்துடன் அகவற்பா நடையில் அமைந்த வாக்கியமும் உண்டு,

"படாடோபம் உள்ளவர்கள் தம்மிடத்தில் இல்லாத திறமையும் இருப்பதாக நடிப்பர். அவர்களைக் கண்டு அஞ்சுவது யுக்தமல்ல. திறமை மிக்கவர் சிலர் தோற்றப் பொலிவின்றி இருப்பர். அவர்களை இகழ்வதும் யுக்தமல்ல'' (ப. 72) முரண்பட்ட கருத்துக்களுக்கு ஒரே வினைமுடிவைத் திரும்ப திரும்பப் பயன்படுத்துகிறார்,

மனனம் செய்பவர்களைக் கல்வி என்ற தலைப்பில் அமைந்த கட்டுரையில் வகைப்படுத்துகிறார். "ஒரு நூலைப் பாடம் பண்ணுவதில் மாணாக்கர்கள் வெவ்வேறு முறைகளை அனுசரிக்கின்றனர். அந்நூலை பலமுறை பெயர்த்

தெழுதுவர் சிலர். சிலர் வாய்பாட்டாக நெட்டுருப் பண்ணு வர். தாம் கற்கும் நூலின் அமிசங்களை ஒழுங்காக வகைப் படுத்திச் சுருக்கம் எழுதுவர் சிலர் (ப. 99.)

"கவியின் வேறாய் சொன்னடை தமிழில் உரை எனப் படும். உரை என்பது பேச்சு என்பதற்கும் வியாக்கியானம் என்பதற்கும் வழங்கும் வார்த்தை" "பேச்சு என்னும் பொருளில் உரை என்பது உலக வழக்கு என்றவாறு உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்பதனால் இது விளக்கமாகும்". (ப. 108)

இலக்கணமுறையில் சொல் விளக்கம்

"நடை என்பது தமிழிலே ஒழுக்கத்துக்கும் பெயர். செல்லும் செலவிற்கும் பெயர். வேறு அர்த்தமும் அதற்கு உண்டு. எந்த அர்த்தத்திலும் இம்மொழிக்கு 'நட' என் பதே பகுதி. ஆகவே நடை என்பது, செல்லும் செலவு என்னும் அர்த்தத்தில் தொழிற் பெயரும், மற்ற அர்த்தங் களில் தொழிலாகு பெயரும் ஆகும்" (ப. 118.)

பிறமொழி பழமொழி விளக்கம்

கவி என்ற சொல்லுக்கு விளக்கம் தரும் போது ஹீப்ரு பாஷையில் கவிகளுக்குப் பார்ப்பவர் என்று பொருள்படும் பெயர் வழங்குகின்றது. இது மிகவும் பொருத்தமானதே. உலகில் ஏனையோரிலும் கவிகள் கூர்ந்து உய்த்தறிவர். எவரும் உணர்ந்தபடி தெலுங்கில் "ரவி எருகளிதாவு கவி எருகுனு" என்னும் பழமொழி இதனை நன்கு விளக்கு கின்றது" (பக். 133-134.)

5. திரு. வி. க. வின் உரைநடைப் பண்பு

முன்னுரை

தமிழ்த்தென்றல் திருவாரூர் வி. கல்யாணசுந்தரனார் எழுத்திலும் பேச்சிலும் தனி நடையை உருவாக்கியவர், "நவசக்தி" பத்திரிகை ஆசிரியராக இருந்த போது அப் பத்திரிகைக்கென எழுதிய கட்டுரைகளும் தலையங்கக் கட்டுரைகளும் திரட்டப் பெற்று இரண்டொரு பகுதிகளாக வெளியிடப் பெற்ற நூலே "தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு" என்பதாகும். இத்திரட்டின் இரண்டாம் பகுதி வழித் திரு வி. க. வின் உரைநடைப் பண்பு களைக் காண்போம்.

அகரவரிசையில் தலைப்புகள்

1935ல் வெளியிடப்பட்ட "தமிழ்ச் சோலை" இரண்டாம் பகுதியில் அகக்கண், அந்தண நிலையும் அரசியலும், ஆண்மையும் அடிகளும், ஆன்மசக்தி, இதிகாச புராணங்கள், இளைஞர்களுக்கு ஒரு விண்ணப்பம், உலக வாழ்வு, ஊடல், எவர் கடமை, ஒழுக்கம், ஒழுங்கு, கவிதாகூர், காந்தி சமயம், குடியரசின் குதர்க்கம், சமரசம், சிறையோ, சீர்திருத்தம், திருநாள் தொடர்முடங்கல், நீத்தார்பெருமை, பாவம், பிள்ளைப்பேறு, பெண்ணினம், பொருளாராய்ச்சி, மனிதனும் அழகும், மாற்றம், விலகல், வீரம், வெற்றிக்கு வழி வேள்வி, ஹிந்து மதமும் வழிபாடும் எனப் பல்வேறு பட்ட கட்டுலரகள் இடம் பெற்றுள்ள பொருளடக்கத்தில் அகர வரிசையில் இக்கட்டுரைத் தலைப்புகள் தரப்பட்டுள.

ஒப்புமை காட்ட விட்டிசைக்குறி அமைத்தல்

"பண்டைக் காலத்தைப் பார்க்கிலும் இக்காலத்தில் கற்றோர் தொகை பெருகியிருக்கிறது; கல்லூரித் தொகை அருகியிருந்த அந்நாளில்—மரநிழல் கல்லூரியாக இருந்த அக்

காலத்தில் அன்பும் அருளும் மலிந்த அறவழி ஒழுங்கு பெற்றிருந்தது. கற்றோர் தொகை பெருகியுள்ள இந் நாளில்—கல்லூரித் தொகை பெருக்கெடுத்துள்ள இக் காலத்தில் வன்கண்மையும் கொலையும் செறிந்துள்ள மற நெறி வளம் பெற்றிருக்கிறது.'' (ப. 1) பெருகியிருக்கிறது, பெற்றிருக்கிறது என்பன திரும்பக்கூறும் பண்பைப் பெற்றுள.

உணர்ச்சி நடை

''அந்நூலை ஓயாமல் ஓதும் ஐரோப்பிய உலகம் இப்பொழுது எந்நிலையிலிருக்கிறது? பைபிளெங்கே? கிறிஸ்து எங்கே? அவர் சுவிசேஷமெங்கே? ஐரோப்பா, பீரங்கியில்—வெடிகுண்டில்-கொலையில்-அறிவைச் செலுத்தி வருகிறது.'' (ப. 2)

''ஏட்டுக்'கல்வியால் என்ன பயன் விளையும்? எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் அறக் கல்வியைக் காணோம்.'' ''வக்கீல் கல்வி என்ன கல்வி? அந்தோ! கல்வி என்று மக்கள் படுகுழியில் வீழ்கிறார்கள்! அவர்கள் அற மென்று மறத்தை வளர்க்கிறார்கள்! என்ன கொடுமை!'' (ப. 2)

மாற்றியமைத்தல்

''எண்ணில் எழுத்தில் அடங்காச் சிறப்பு; ஒரு மத அளவில், ஒரு வகுப்பளவில், ஒரு மொழி அளவில், ஒரு நாட்டளவில், ஒரு நிற அளவில் கட்டுப்படாச் சிறப்பு'' (ப. 21) எழுவாய் மாறி நிற்கிறது; 'ஒரு' என்ற சொல் திரும்பத் திரும்ப வருகின்றது.

இணையான தொடர் அமைப்பு

''இவ்வளவும். போரின்றி—இரத்தஞ் சிந்தலின்றிப் பொறாமையின்றிப்-பொறுமை வழி நிகழ்ந்தன, இப்பெரும்

போரை—உலகில் என்றும் நடைபெறாத அன்புப்போரை—அறப்போரை—நடாத்தின தலைவர் எவர்?'' (ப.19)
பேசுவது போலவே எழுதுபவராதலால் பேச்சு நடை என்றே இதனைக் கொள்ளலாம். இப்பேச்சு நடையில் சமன்பாடு காணப்படுகிறது.

சொற் பொருள் விளக்கம்

''மூன்றுகாரமுள்ள பொருள்களுக்குத் திரிகடுகம் என்று பெயர். அவை, சுக்கு, திப்பிலி, மிளகு என்பன. இம்மூன்று பொருளும் மனிதன் நோயைப் போக்கி அவனுக்கு இன்பம் தருவன.

மகாத்மா காந்தி தேசத்தின் அடிமை நோயைப் போக்கித் தேசத்துக்குச் சுதந்திர இன்பத்தை ஊட்டவல்ல மூன்று வழங்கியிருக்கிறார்: அவை கதராடை, மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல் என்பன.'' *(ப. 33)*

சமன்பாடு

''மரத்துக்கு ஒளி மண் புனல் காற்று முதலியன எவ்வளவு இன்றியமையாதனவோ அவ்வளவு உயிருக்கு ஒழுக்கம் இன்றியமையாதது'' *(ப. 151)*

''உடல் நலத்துக்கு அழகு அவசியம். எவன் பால் அழகு பொலிகிறதோ அவன் உடல் வளமுடையவனாவன்'' *(ப. 151)*

சொல்வளம் காட்டல்

நம்மவர் நீர் நிலைகள் பக்கங்களில் அசுத்தம் செய்கின்றனர். அப்பக்கங்களைக் குறிப்பிட ஒரே பொருளில் பல சொற்களைப் பயன்படுத்துகிறார். ''கரையோரத்தில் மல ஜலக்கழிவு ஒரு பக்கம், சௌசம் மற்றொரு பக்கம்; துணி தோய்த்தல் இன்னொரு பக்கம்; தலை முழுகல் வேறொரு

பக்கம்; நீரருந்தல் பிறிதொரு பக்கம்'' (ப. 155) தமிழில் சொல்வளம் உண்டு என்பதை உறுதிபடுத்தும் வகையில் சொற்களைக் கையாள்கின்றனர்.

சிறு சிறு வாக்கிய அமைப்பு

எளிய குடும்பத்தில் பிறந்த திரு வி.க. எளிய வாழ்வு வாழ்ந்தார். அவர் வாழ்வு போல அவரது உரைநடையும் எளிய நடைகொண்டது. ''எங்கணும் வெள்ளக்காடு; ஓயா மழை; புயல் சூழற்சி; ஆறுகள் அருவிகள் ஏழைக்குடில்கள் வீழ்ச்சி. இன்னோரன்ன பிற அலைவுகள்'' (ப. 182)

வினைச் சொற்கள் வாக்கியங்களாக அமைவன. அழகு எது? அழகை உன்னுவோம்; அழகில் நிற்போம், திளைப் போம், எழுவாம்,'' (ப. 193)

வினாச் சொல்லுடன் வாக்கியம் முடிகிறது. ''மனிதன் எவன்? அழகு எது? மனிதனுக்கும் அழகுக்குமுள்ள தொடர்பு என்னை?'' (ப. 192

''அழகுள்ள இடத்தை இளமை என்று சிலர் கூறும். கொழுமை என்று சிலர் கூறும். வளமை என்று சிலர் கூறும்'' (ப. 193) என்பதில் திரும்பக் கூறும் பண்பும் எதுகை நயமும் காணப்படுகின்றன.

கலவை வாக்கியம்

''பெண்மக்கள் போதிய கல்வியறிவு பெற்றிருப்பின், அவர்கள் ஆண் மக்களைப் பார்க்கிலும் மிக உரமாகத் தேச சேவையில் ஈடுபடுவார்கள் என்பது உறுதி. ஆண்மக்களை யுஞ் திருந்தச் செய்யும்.'' (ப. 72)

''இவ்வாண் மக்களைப் போலவே பெண் மக்களும் நாத்திக வழியைக் கடைப்பிடித்து ஒழுகி வருவார்களாயின் இந்தியாவின் சொரூபமே அழிந்து போகும்.'' (ப. 72)

மறுத்துக்கூறல்

"பெண்ணுக்கு உரிமை வழங்கிடின், கற்பு நிலை குன்றிப் போகும் என்று நம் நாட்டார் கூறுவது வழக்கம். இது மடவோர் கூற்றாம். கற்பு என்னுஞ் சீரிய பொருள் பெண்மகள் பொறுப்பிலிருப்பது. அதைக் காப்பதும் விடுவதும் அவளது மனோநிலையைப் பொறுத்து நிற்கின்றன.

"பிறர் கட்டுப்பாட்டால் கற்பு காக்கப்படுமென்று நினைப்பது அறியாமை. கட்டுப்பாடில்லையேல் கற்பழியுமென்று கூறுவதை நாம் ஏற்கமாட்டோம்". பிறர் மதம் மறுத்துத் தம் மதம் நிறுவத்திருக்குறளிலிருந்து மேற்கொள் எடுத்துக் காட்டுகிறார்.

"இறை காக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை".

அளபெடையை உரைநடையில் பயன்படுத்துகிறார். "என வருஉம் திருமூலர் திருவாக்கால் ஓர்க" (ப. 191) இதில் உரையாசிரியர் நடையும் வந்துளது.

நீக்கல் உத்தி

"இவ்வதிபர்கள் பண்டைக் காலத்தில் மிக உண்மையாளர்களாக இருந்தார்கள்; பொய்க்கு அஞ்சினார்கள், பாவ காரியங்களில் தலையிட மாட்டார்கள்." (ப. 241) "இவ்வதிபர்கள் பண்டைக்காலத்தில்" என்ற சொற்றொடர் ஏனைய இரு வாக்கியங்களிலும் காணப்படவில்லை எனினும் நீக்கல் உத்தியால் பொருள் புலப்படுத்தப் பட்டுள்ளது.

உவமை வழிப் புலப்பாடு

"குருடனுக்கு குருடன் வழிகாட்டினால் விளைவதென்ன? இருவருங்குழியில் வீழ்ந்து இடர்ப்பட வேண்டு

வதே. அது போலக் காமவெகுளி மயக்கத்தால் மோதுண்டு கிடப்போர் நாட்டைச் சீர்திருத்த வருவதால் நாட்டில் என்ன வளரும்?'' (ப. 335)

திரு வி.க, நடையில் மூவித நடை மருவியதாக அவரே கூறியுள்ளார் எனினும் மூன்றாவது அமைந்த எளிய நடையையே அவர் போற்றுகின்றார்,

6. டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை
சொற்கோப்புக் கலைத் திறன்

இவரைச் ''செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை'' என்பார் துறவி சுத்தானந்த பாரதியார். எதுகை மோனையில் மக்களுக்கு ஆர்வம் இருந்த காலத்தில் இவர் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார். ஆதலின் இசை நய மிக்க சொற்கள் இவரது சொற்பொழிவில் அருவியாய் வந்து வீழ்வதைக் காணலாம். ''சேதுப்பிள்ளையின் பேச்சிலும் எழுத்திலும் எதுகை மோனைகள் அணி செய்யும். அவ்வணி அவர்க்கு இயற்கையாயிற்று'' என்பது திரு. வி. க, வின் மதிப்பீடு. வினையெச்சத் தொடர்கள் வழிச் செய்திகளை இயைபுபடுத்துவார்.

இலக்கியப் பழந்தொடர்களைப் பொழிவின் நடுவே கேட்கலாம். செய்யுள் தொடர்களைக் கையாள்வர். தருக்கநெறிக் கட்டுக்கோப்பினை வினாத் தொடர் அமைத்து வெளிப்படுத்துவார். உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்யும் வகையில் இவரது சொற்பொழிவு அமைந்திருக்கும். நீண்டதொடர் அமைப்பில் வினாக்கள் இருக்கும். பொருள் சுமந்த சிறு தொடர்களும் பேச்சின் நடுவே காணப்பெறும். பலநூல் நயம் கண்டவர் ஆதலின் சொல் நயம் உரைப்பது இவர் மரபு. இவர் கையாளும் பெயர்ப் பயனிலைத் தொடர்கள், தொகைச் சொற்கள், பழஞ் சொற்கள், உவமைகள் இவரது சொற்கோப்புக் கலைத்

திறனை உணர்த்துவன. நிகழ்ச்சிகள் சங்கிலித் தொடர் போல அமையும், விவரிப்பு நடையும் டாக்டர் இரா. பி. சேதுப்பிள்ளை அவர்களிடம் உண்டு.

கருத்துக்களைப் புலப்படுத்த எளிய நடையையே கையாண்டார். 'திருவள்ளுவர் நூல்நயம்' 'சிலப்பதிகார நூல் நயம்' 'வீரமாநகர்' ஆகிய இவரது நூல்களில் இலக்கிய நயங்களைப் புலப்படுத்தியுள்ளார். பரிமேல் அழகர் உரைக்கு மறுப்புத்தர தருக்கமுறையைப் பயன்படுத்தியுள்ளார். கடற்கரையிலே என்னும் நூல் புதுமையான வெளிப்பாட்டு உத்தியைக் கையாண்டு எழுதியதாகும். ஊரும் பேரும் என்ற நூலில் சொற்பொருளாய்வு இடம் பெற்றுள்ளது. 'ஆற்றங்கரையிலே' என்ற நூல் ஒப்பாய்வுப் போக்குடைய தாகும்.

இவரது பல நூல்கள் மேடைப் பேச்சுக்களின் தொகுப்பு களே. பேச்சிலும் எழுத்திலும் பொருத்தமான சொற் களைத் தேர்ந்தெடுத்து இணைப்பதில் ஒரு சொல்லணிக் கலைஞராக இவர் விளங்குகிறார். தம் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் கேட்போன் உள்ளத்தில் பதியும்படி எடுத்துரைக்கும் ஆற்றல் படைத்தவர். கருத்துக்களைச் சிறிய சிறிய வாக்கியங்களில் அமைப்பார். தனித்தமிழில் தான் எழுதுவார். அடைமொழி அடுக்குமொழி முரண் அணி, எதுகை, மோனை போன்ற உத்திகள் இவரது நடைக்கு உயிரூட்டுவன. சொல்லணிக்கலை பிறரை வயப் படுத்தும் கலை என்று அரிஸ்டாட்டில் கூறுவது இவருக்குப் பொருந்தும். இவர் எழுதிய மேடைப்பேச்சு எனும் கட்டுரை பேச்சுக்கலைக்கு ஒரு வரைவிலக்கணம் எனலாம். வேலும் வில்லும் எனும் நூல்வழி இவரது நடைப் பண்பினைக் காண்போம்.

கொடியோரை வென்று அடியோரை நின்று காக்கும் முருகனது வீரவேலின் செம்மையும் இராமனது வலிய வில்லின் பெருமையையும் இந்நூலில் புலப்படுத்தியுள்ளார்.

தெளிவு, உணர்ச்சி சொல்லாட்சித் திறன், ஓசை நயம், எதுகை மோனை போன்ற கூறுகள், இவரது உரைநடையில் மிளிரும்.

ஆசையின் வசப்பட்டு மோசம் போனேன் (ப. 14). கதைகளின் போக்கும் கவிதைகளின் வாக்கும் (ப. 30) எனச்சந்த நயம்பட உரை நடையை அமைப்பார்.

குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்கள் குன்றின் மீது கோயில் அமைத்துக் கோடு முழக்கி கொடுமணி அடித்து குறிஞ்சிப்பாட்டிசைத்து நறும்புகை எடுத்து (ப. 16) என வினையெச்சங்களை அடுக்கிச் செல்வார்.

நீக்கல் உத்தி

மூக்கை இழந்த சூர்ப்ப நகை ஓலமிட்டழைத்தாள். அலறினாள்; கதறினாள்; அரற்றினாள் முறையிட்டாள்; (ப. 45) என வினைமுற்றுக்களை அடுக்கி உணர்ச்சியை வெளிப்படுத்துகிறார்.

இசைவிப்பு நடை

பத்துப்பாட்டு என்னும் பழந்தமிழ்த் தொகை நூலில் முதற்பாட்டாக இலங்கும் சீர்மை வாய்ந்தது திருமுருகாற்றுப் படை என்றால் அதன் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ? (ப. 15)

அடைமொழி அமைப்பு

கோலமாமயில், நீலமாமயில், நெடுந்தவம், பெருவரம் என அடைமொழியுடன் சொற்களைக் கையாள்வார். பழந்தமிழ்ச் சொற்களைக் கட்டுரையில் பயன்படுத்துவதுடன் புதிய சொற்களையும் படைப்பார்.

முருகன் பாலில் நெய்போல் பரந்து நிற்பார் என்று உவமை அமைப்பார். பிறவிப் பெரும் பிணி போன்ற உருவகங்களைப் பயன்படுத்துவார். கேடு வரும் பின்னே மதி

கெட்டு வரும் முன்னேபோன்ற பழமொழிகளைப் பயன் படுத்தியும் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

7. அண்ணாதுரையின் புலப்பாட்டு நெறி

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற பேச்சுக் கலை வல்லுநர் அறிஞர் அண்ணாதுரை. பகுத்தறிவுக் கருத்துப்பரப்பிற்காகத் தமது பேச்சுக் கலையைக் கருவியாகப் பயன்படுத்தியவர். இளைஞர்களின் உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் தமது கருத்துக்களைப் புலப்படுத்தியவர். தமிழ் நாட்டுப் பேச்சுக்கலை வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தித் திராவிடபாணியை உருவாக்கியவர். மாற்றவரும் மனங்கொளும் வகையில் மேடையில் சொற்பெருக்காற்றிச் சொற்கோப்புக் கலைக்குப் புதுமெருகிட்டவர். அவர் நம் புலப்பாட்டு நெறியினை "நிலையும் நினைப்பும்" என்ற சொற்பொழிவு நூல் வழிக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

கார்பெட்டின் திட்டப் பாங்கு

பேச்சுக்கலை வரலாற்றில் உலகப் புகழ் வாய்ந்த நாவலர் அறிஞர் அரிஸ்டாட்டில் ஆவார். தமிழக வரலாற்றில் புகழ் பெற்றவர் அறிஞர் அண்ணாதுரையாவர். பேசுபவர் தாம் பேசப்போகும் பொருளின் உண்மையை அறிய முயற்சி செய்தல் வேண்டும். தலைப்பில் அமைந்த சொற்களுக்கு விளக்கம் தர வேண்டும். பேசப்படும் பொருளைத் தகுந்த முறையில் வகுத்துக் கொள்ள வேண்டும். கேட்பவர் இயல்புக்கேற்றவாறு பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற கிரேக்க நாட்டு விதிமுறைகளை அண்ணாதுரையின் சொற்பொழிவிலும் காணலாம். பொருளைப் பகுத்துக் கொள்வதிலும், கையாளும் நடையிலும், நல்ல நினைவாற்றலுடன் சிறப்பாக பேருரை

ஆற்றுவதிலும், புதிய பார்வை வழிப் பொருளை விளக்கு வதிலும் சிறந்து விளங்கினார் அண்ணாதுரை. சொல் ஒழுங்கு முறையை அடிப்படையாகக் கொண்டு சமன்பாடு (Balance) மாற்றியமைத்தல் (Inversion) நீக்கல் உத்தி (Omission) திரும்பக் கூறும் பண்பு (Repetition) என நான்கு வகைத் திட்டப் பாங்குகளைப் புலப்பாட்டு நெறி நூலாளர் எட்வர்டு பி. சே. கார்பெட் (Edwarb P. I. Corbett என்பார் வகுத்துள்ளார். சமன்பாடு என்ற திட்டப்பாங்கு இணைத் தொடர்களை (Paralielism) யும் முரண்தொடர்ப் போக்கினை Autithesis) யும் உள்ளடக்கியதாகும். அறிஞர் அண்ணாவின் பேச்சுக் கலையில் இத்திட்டப் பாங்கு மிகுதி யாக வந்துள்ளது.

தலைப்பு விளக்கம்

''நிலையும் நினைப்பும்'' என்ற தலைப்பு அண்ணா மலைப் பல்கலைக் கழக தமிழ்ப் பொதுப் பேரவையின் சார்பில் 1947ம் ஆண்டு ஆற்றிய தொடக்க விழாவில் அமைந்த சொற்பொழிவுத் தலைப்பாகும்.

''நிலையும் நினைப்பும்'' என்ற தலைப்பை உங்கள் தொடக்க விழாச் சொற்பொழிவுக்குத் தந்தபொழுது, நான் சற்று சிந்தித்து பார்த்தேன், இன்றைய என் நிலை யும், மக்களது நிலையும் நினைப்பும், மக்கள் என்னைப் பற்றிக் கொண்ட நினைப்பும், நான் மக்களைப் பற்றிக் கொண்ட நினைப்பும், நினைப்பால் மாறிய இவர்களது நிலையும்—இப்படி நான் ''நிலை''— ''நினைப்பு'' என்ற இருதொடர்களையும் பொருத்திப் பார்த்தேன்'' (பக்.8—8) எனத் தொடங்குவது தலைப்புச் சொற்களுக்கு விளக்கம் தருவதாக உள்ளது.

இணையும் முரணும்

''ஒரு நாட்டின் நிலை அதன் நினைப்பை உருவாக்கு கிறது. உன்னத நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு

உயர்ந்திருக்கும்'' தாழ்ந்த நிலையில் உள்ள நாட்டின் நினைப்புத் தாழ்ந்திருக்கும்'' (ப. 8) என்ற நடையில் முரண் தொடை அமைப்புக் காணப்படுகிறது. ''இந்தப்பணி லேசானதல்ல; ஆபத்து நிறைந்தது'' (ப. 38) என்பது இணைத் தொடராகும்.

நிகழ்ச்சி வழி விளக்கல்

நிகழ்ச்சிக் கதைப் போக்குக்குறிய பொருளை விளக்கு வார். நிலைக்கேற்ற நினைப்பில்லை என்பதை விளக்க ஒரு நிகழ்ச்சியைக் கேட்போர் மனக்கண்முன் நிறுத்துகிறார்.'' திருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படியிருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்கு அவன் நினைப்பும் தாழ்ந்திருக்கும். முதலில் கனி பறித்து, பிறகு அவசர அவசரமாகத் தோட்டத்துக்குச் சொந்தக்காரன் வந்து விடுவானோ என்ற பயத்தில் செங்காய்களைப் பறித்து. அதன் பின் காய்களையும் பறிப்பான். கனி பறிக்கையில் அவனது பாரத்தால் மரம் குலுங்கும் பொழுதெல்லாம் அவன் மனம் பயத்தால் குலுங்கும். அடிக்கடி தோட்டத்துச் சொந்தக்காரன் வந்தால் எப்படிக் குதித்து எங்கு ஓடுவது என்று நினைப்பான். அவன் இருப்பது மரத்தின் உச்சியில். ஆனால், அவன் மனம் இருப்பது தரையில்''. (ப. 9) இப் பகுதியில் கதைப்போக்கு காணப்படுவதுடன் முரண்தொடை அமைப்பும் உளது.

எதுகை மோனை நயம்

மோனை நயம்படப் பேசவல்லவர். ''மண்டபங்களிலே மாந்தோப்புக்களிலே மலைச்சரிவிலே, மரநிழலிலே, பாதை ஓரத்திலே நாங்கள் பிரச்சாரம் செய்வோம்'' (ப. 28) நயம் அமைத்துப் பேசுவார். ''கடை வீதி உள்ளவர்களிடத்தில் மாத்திரம் அல்ல. நடைப்பாதையில் உள்ளவர்களித்திலுஞ் செல்ல வேண்டும்.'' (ப. 46) அடுக்கு மொழி

அண்ணாதுரை என்று அடைமொழி பெற்றவர். உவமைகள் கூட அவர் பேச்சில் அடுக்கி வருவதைக் காணலாம்.'' விஞ்ஞானம் இந்த நாட்டில் விழலுக்கிறைத்த நீராகி விட்டது. பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போல, குருடனிடம் காட்டிய முத்து மாலையைப் போல, செவிடன் கேட்ட சங்கீதம் போல விஞ்ஞானம் மதிப்பற்றிருக்கிறது,'' (ப. 49)

காரண காரிய விளக்கம்

தமிழும் ஆரியமும் கலந்ததால் ஏற்பட்ட விளைவுகளை எளிய நடையில் விளக்குகிறார். "தமிழில் ஆரியம் கலந்தது; தமிழகத்துடன் ஆரியாவர்த்தம் ஐக்கியமானது. பிறகு கேட்க வேண்டுமா? பாசறைகளுக்குப் பக்கத்தில் பர்ண சாலைகள், அரண்மனைகளுக்குப் பக்கத்தில் ஆஸ்ரமங்கள், மன்னர்களுக்குப் பக்கத்தில் மாடலமறையவர்கள் என்ற நிலை ஏற்பட்டது.'' (ப. 21)

நொடிக்கதை வழி விளக்கல்

இளைஞன் ஒருவனின் பையில் காசு குறைந்ததும் அவன் மனநிலையும் மாறிவிடுகிறது என்பதை நொடிக்கதை வழி விளக்குகிறார். ''மாலை நேரம். ஒரு வாலிபன் தன் நண்பர்கள் புடை சூழ, நன்றாகச் சாப்பிட்டு விட்டுக் காபி கிளப்பிலிருந்து வெளியில் வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். வருகிற வாலிபனைப் பார்த்து ஒரு பிச்சைக்காரன் ''சாமி, காலணா காசு சாமி'' என்று கேட்பார், உடனே வாலிபன் ஒரு அணாவை வீசி எறிவான். பீடாவைப் போட்டுக்கொண்டே இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன் வாலிபனைப் பார்த்து இன்னொரு பிச்சைக்காரன் ''ஐயா'' என்று கையை நீட்டுவான். இல்லை என்னாமல் காலணா காசு கொடுப்பான். இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன் அதே வாலிபனைப் பார்த்து மற்றொரு பிச்சைக்காரன் ''ஐயா'' என்றால் ''சீ. போ போடான்னா போ'' என்று கூறிவிட்டு தன் நண்பனைப்பார்த்து.

"Nowadays I don't agree with the beggar proplem sir" என்றுசொல்லுவான். (ப. 22)

அங்கத நடை

எள்ளல் சுவைபடப் பேசி எதிர் இருப்போரைச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் அண்ணா நடைக்கு உண்டு. தமிழ்நாட்டு கிராமவாசிகளுக்கு விஞ்ஞானச் சிந்தனை இல்லை என்பதை அங்கதச் சுவையுடன் கூறுகிறார். "அவர்களை நீங்களே கேட்டு பாருங்கள். அமெரிக்காவின் தலைநகரம் எது தெரியுமா? தெரியாது. ருஷியாவின் தலைநகரம் எது தெரியுமா? தெரியாது. பெர்லின் எங்கு இருக்கிறது தெரியுமா? தெரியாது. எமதர்மனுடைய வாகனம் எது தெரியுமா? "அதாங்க எருமைக்கடா" என்று கூறுவார்கள். (ப. 44) தலைநகரம் எது தெரியுமா? தெரியாது என்ற வாக்கியம் திரும்பத் திரும்ப (Repettion) வந்து சுவை கூட்டுவதையும் பகுத்தறிவுக் கருத்துப்பரப்பையும் இப்பேச்சில் காணலாம்.

பிறமொழிச்சொல் கலப்பு

பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசினாலும் மக்கள் மனமகிழ்வோடு ஏற்றுச் சுவைத்தார்கள். அவ்வாறு கையாள்வதற்குக் காரணம் அவர் வாழ்ந்த காலச் சூழலே யாம். "சந்தோஷத்திற்குப் பதில் சந்தேகம்" (ப. 11) கைவிடப்பட்ட கேசு" (ப. 45)

அந்தாதிப் போக்கு

நேர்முக வருணனை போல அந்தாதிப் போக்கில் அமைந்த நடையும் வந்துள்ளது. "வளமான நாடு; அதில் வளைந்து செல்லும் வாய்க்கால்கள். வாய்க்கால்களுக்குப் பக்கத்தில் சாலைகள், சாலைகளுக்குப் பக்கத்தில் குன்றுகள். குன்றுகளைத் தொட்டுத் தடவும் மேகங்கள், மேகங்கள் தரும் மழைத்துளிகள், மழைத்துளி கண்டு மகிழ்ச்சியுறும் மக்கள்." (ப. 18) பக்கத்தில் என்ற சொல் திரும்பக் கூறும்

பண்புடையதாக விளங்கித் திட்டப் பாங்குடையதாக உள்ளது.

புலப்பாட்டுநெறி வினாமுறை

ஒன்றை உறுதிப்படுத்தவோ மறுக்கவோ வினாக்களைத் தொடுப்பார் அண்ணா. விடை அறிவதற்காக அல்ல. இவ் வகை வினா புலப்பாட்டு நெறி வினா (erotem or Rhetoric Questi) ஆகும். "வைரம் எவ்வளவு? பச்சை எவ்வளவு? ஜடவில்லைகள் எத்தனை என்று இந்த மசோதா வந்ததும் இந்து மத பரிபாலனக் கமிட்டி கணக்கிட்டுக் கேட்கும். இதற்குத்தான் இந்த மசோதா." (ப. 34)

"சென்னையில் வாழும் ஒருவனுக்கு டெலிபோனை உபயோகிக்கத் தெரியாமல் போனால் எப்படி இருக்கும்? தந்தி கொடுக்கத் தெரியாமல் போனால் எப்படி இருக்கும்? துறைமுகததில் மிதக்கும் கப்பலைப் பார்த்து, "ஒரு வீடு மிதக்கிறதா என்று கேட்டால் எப்படி இருக்கும்" (ப. 9) எப்படி இருக்கும் என்ற சொற்கள் திரும்பக்கூறும் பண்பு டையன,

மாற்றியமைத்தல்

(Inversion) வினைச் சொல்லை முதலில் கூறிப்பின் பெயர்ச்சொல்லைக் கூறுவது இலக்கண முறைப் பிறழ்வு என்றாலும் மாற்றியமைத்தல் என்ற திட்டப்பாங்கில் இந்நடை அடங்கும். "தமிழகத்திலே செல்வத்திற்கு என்ன குறைவு. கடலிலே முத்து; சுரங்கத்திலே தங்கம்; காட்டிலே அகில்; நஞ்சை புஞ்சை வெளிகளிலே நெற்களஞ்சியங்கள்." (ப, 23)

நீக்கல் உத்தி

பேசும்போது சில சொற்கள் மீண்டும் வராமல் தோன்றா நிலையில் கருத்து விளக்கம் பெறும். "நம்மை ஆளுவது நம்மவரே பிற நாட்டாரல்ல" நம்மை, ஆளுவது

ஆகிய சொற்கள் நீக்கப் பெற்றாலும் சொல்லும் கருத்தில் தெளிவு ஏற்படுகிறது.

உள்ளத்தின் ஆர்வத்தைப் புலப்படுத்துவதில் அண்ணா வுக்கு நிகர் அண்ணாவே. மேனாட்டாரின் புலப்பாட்டு நெறிக் கோட்பாடுகள் இயல்பாகவே அண்ணாவின் பேச்சில் காணப்படுகின்றன. அழகிலும், ஒலிநயத்திலும் கேளாரும் வேட்ப மொழியும் திறத்திலும், தொடர் அமைப்பிலும் அண்ணாவின் புலப்பாட்டு நெறி அவருடைய ஆளுமைத் தன்மையை விளக்கி நிற்கிறது எனலாம்.

8. டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் உரைநடைப் போக்கு

தமிழ்ப் பேராசிரியராக விளங்கிப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக ஏற்றம் பெற்ற ஆராய்ச்சி அறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் உரை நடை நூல்கள் எழுதுவதில் தனக்கென ஒரு பாணியை அமைத்துக் கொண் டவர். பாட்டிலே புரட்சி, பிறந்தது எப்படியோ, தமிழும் பிற பண்பாடும், நீங்களும் சுவையுங்கள், கானல் வரி என்று எந்த உரைநடை நூலைப் படித்தாலும் ஒவ்வொரு கட்டுரையும் ஓர் ஆய்வேடாக மலரும் வகையில் அமைந் திருக்கும். சிந்தனையைத் தூண்டும் ஆய்வு நடையில் இவ ரது உரைநடைப் போக்கு அமைந்துள்ளது. 21 கட்டு ரைகளை உள்ளடக்கிய "நீங்களும் சுவையுங்கள்" எனும் நூலில் காணும் உரைநடைப் பண்புகளைக் காண்போம்.

திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், பரஞ் சோதியார் படைப்புக்களின் திறனாய்வுக் கட்டுரைகள் மிகுதியாகக் காணப்படினும், முத்தமிழின் முழக்கக் கட்டுரை களின் மதிப்பீடும் இந்நூலில் உளது. வினாக்குறியில் கட்டுரைத் தலைப்பு உளது. 'வேறொருவர் உண்டோ?'. 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள?' என் சுவடியா?

பாட்டா? என்பனவற்றைச் சான்றாக்கலாம். குடிமக்கள் காப்பியம் என்ற விரிவான நூலின் அடிப்படைக் கட்டுரை இத்தொகுப்பில் உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் நாடகங்கள் ஒரு பகுப்பாய்வு, வரலாற்றியல் ஆய்வு என்ற முறையில் அமைந்த கட்டுரையாகும். வருடம்—மாதம்—தேதி என்ற தலைப்பே புதுமை மிக்கதாகும். மறைந்து போன திருவாசகம் என்ற கட்டுரைத் தலைப்பு ஆர்வ நிலையை உண்டாக்கக் கூடியது.

உணர்ச்சி நடை

"உலகம் பொய்யானால் நல்லொழுக்கமும் மாயந்தானே? ஆனால் இவ்வாறு மக்கள் உள்ளம், அறத்தினைப் புறக்கணிக்க முடியுமா?" (ப,1) புலப்பாட்டு நெறி வினா அமைப்பு இப்போக்கில் உளது.

உளப்பாட்டுப் பன்மை

வாசகனை ஈக்க்கும் வகையில் உளப்பாட்டுப் பன்மையைப் பயன் படுத்துவார்: "ஏறக்குறைய மிகப் பழைய காலத்திலேயே இந்தியப் பொதுமக்களது அறத்தில் "செயற்பாட்டு அன்புநிலை" என்ற கருத்துத் தோன்றியுள்ளது. இவ்வாறு தோன்றியுள்ளதனை, இந்திய இலக்கியத்தில் நாம் காணும் கதைகள் வழியாகவும் சிறப்பாக கி, பி. 2ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததென நம்பத்தக்க குறளில் கிடைக்கும் அறவுரைகள் வழியாகவும் அறிவோம்." (ப.2)

ஓசை நயம்

எண்ணும்மை வழி, ஓசை நயமிக்க நடையை உருவாக்குகிறார். உவமையும் அடுக்கி வருகின்றது. "புத்தர் பெருமானைப் போலவும் பகவத்கீதையைப் போலவும் திருக்குறளும் உலகின் நின்றும் உள்முகமான விடுதலையைப் பெறவும், வெறுப்பே அற்ற மனநிலையைப் பெறவும் அவாவுகிறது." (ப.4)

எளிய நடை

பேச்சு நடையை உரைநடையில் எளிய வாக்கியங்களில் அமைத்துள்ளார். "சிறுவர்கள் விளையாடுகிறார்கள், விளையாட்டே வினையாகின்றது. போராட்டமாக முற்றுகின்றது. 'அடிக்கு அடி; உதைக்கு உதை! என்ற போர் முறை நடைபெறுகிறது!

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று ஒரு திட்டம் வகுக்கிறான்." "கண்ணைப் பிடுங்கினால் கண்ணைப் பிடுங்கு; பல்லைப் பிடுங்கினால் பல்லைப் பிடுங்கு என்பதே இந்தச் சட்டம்" (ப.8) பெயர்ச் சொல்லில் முடிவதால் முறை பிறழவு (Inversion) அமைந்துள்ளது.

தொடக்க உத்தி

கட்டுரையைத் தொடங்கும் போதே சிந்தனையைத் தூண்டும் வகையில் வினாத்தொடுப்பார். "பெரியது எது? தகுதி என்றது எது? பெருமையும் தகுதியும் ஒப்பத் திகழ்வது எது? இப்படி ஒரு கேள்வி பிறக்கிறது வள்ளுவர் உள்ளத்திலே. செயற்கரிய செய்வார் பெரியர் என்கின்றார் திருவள்ளுவர். தகுதியாவது யாது? நடுவுநிலைமையே தகுதி என்கிறார்." (ப.1?) எது என்ற வினாச் சொல் திரும்பக் கூறும் பண்பில் அமைந்துள்ளது. "பிறப்பிப்பார் யார்? பெறுவார் யார்? நடை கற்றுக் கொடுப்பார் யார்? யார்? தகுதியை என்னென்பது? தகுதி வாழ்வினை என்னென்பது?" (ப.15) 'யார்' என்ற சொல்லும் திரும்பத் திரும்ப வந்துளது.

பழமொழியைக் கையாளால்

"செயற்கரிய செய்வது எப்படி? 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்று வாழ்கின்றவர்கள் பொது அறமாம் தகுதியில் நிற்பது எங்கே? (ப. 15) விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று விளையுமா? தீயில் உருவம்புதிதாக எவ்வாறு தோன்றுகிறது. (ப. 35)

எதுகை நயம்

"மேலாக மென்மை, உள்ளூரத் தின்மை, இந்தத் திண்மையாலேயே செயற்கருஞ்செயல் செய்ய முடிகின்றது" (ப. 15)

சொற்பொருள் விளக்கம்

"மகர வாரி வளம்" எனக் கடல் வளத்தினைப் புகழ் கிறார் இளங்கோவடிகள். 'புயல் எனும் வாரி வளம்' என்பது வள்ளுவர் குறள். இங்கே வாரி என்பதற்கு வருவாய் எனப் பொருள் கொள்வார் பரிமேலழகர். புயல் என்றால் மேகம். 'காரிகோள் முகந்த மஞ்சுசூல்: மாமழை' என்பது திருமுருக காற்றுப் படை. கடலில் இருந்து எழுந்த நீரே மேகம். ஆதலின் அதனைக் கடலின் செல்வம், கடலின் வளம் எனக் கூறத்தட்டில்லை". இளங்கோ அடிகள் திருக்குறளை அடி யொற்றி, வாரிவளம் என்ற தொடரைக் கடல்வளம் என்ற பொருளிலேயே பாடுகின்றார். ஆதலின் புயல் என்னும் வாரிவளம் என்பதற்கும் அவ்வாறு பொருள் கொள்வதே மேல். இதனாலேயே, சிலப்பதிகார உரையாசிரியர்கள் திருக் குறளை ஒட்டிச் சிலப்பதிகாரத்திற்கு உரை கூறுகின்றனர்" (ப. 17) தருக்க முறையில் சொற்பொருள் விளக்கம் தருவது ஆய்வுச் சிந்தனைப் போக்கைச் சுட்டும்.

முடித்தல் உத்தி

பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்ற குறளின் இலக் கியமன்றோ கண்ணகி? வாழ்க கண்ணகி! வாழ்க குறள்வழி! வாழ்க இளங்கோ" (ப. 21) என்று வியங்கோள் வினை முற்றில் கட்டுரையின் முடிப்புரையை அமைக்கிறார்.

திரும்பத் திரும்ப வரும் வினைமுடிவு

"இருட்டினை மறப்போம். வீட்டினை மறப்போம். இந்த உலகினையே மறப்போம்" (ப. 22)

எண்ணும்மை

"அரசனும் அரசியும், வீரரும் சூரரும், பொன்னும் மணியும், அழகும் கடவுளும், பேசும் விலங்குகளும் பாடும்

மரங்களும் எங்களைச் சுற்றிச் சுற்றி வர அந்தச் சித்தருலகில் யாங்களும் ஒருவராய் வாழ்வோம் (ப. 33)

மோனை நயம்

கோவலன் குடிமக்களுள் ஒருவன்; மாதவி பரத்தை யரில் ஒருத்தி இவர்களுடைய சிக்கல் வாழ்க்கையே சிலப்பதி காரச் சித்திரம்'' (ப. 24

விளக்க முறை நடை

'மறைந்து போன திருவாசகம்'' என்றால், நாம், கண்கள் சிவந்து, நெருப்புப் பறக்கப் பார்ப்பதனைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?'' (ப. 27)

ஒகாரம் வழி ஓசை நயம்

குறிப்பிட்ட காலத்தோ, இடத்தோ, குறித்ததொரு நோக்கிலோ, இவர்கள கண்ட தாமரையோ, ஞாயிறோ, குளிர் காய்தலோ, குழவி இன்பமோ. நூலின்பமோ, அறி வாராய்ச்சிக் குறிப்போ இவ்வாய்வாளர் கற்பனையில் கலக்கலாம். (ப. 35)

முரண் அமைப்பு

இன்பத்தில் மட்டுமின்றித் துன்பத்திலுமன்றோ இசை நமக்கு உதவுகிறது? (ப. 126)

நீக்கல் உத்தி

சூரியனோடு எழுகிறோம், ஓடி ஆடுகிறோம், விழு கிறோம். சூரியன் ஒரு பெரிய கடிகாரம். இயற்கைக் கடி காரம்'' (ப. 131)

அறிஞர் தெ. பொ.மீ. புதிய உரைநடையைத் தோற்று வித்துள்ளார். இலக்கண அமைதி நடையில் உண்டு. சிந்தனை நடைப்போக்கு உண்டு. வினாக்களுக்கு முறை உண்டு. புலப்பாட்டு நெறி வினா அமைப்பு மிகுதியாக உடைய நடை இவரது நடையாகும்.

9. டாக்டர் மு. வ. வின் உரை நெறி

டாக்டர் மு. வ. உரைநடை உத்திகளை 'இளங்கோ வடிகள்' எனும் நூல்வழிக் காணலாம்.

மாற்றியமைத்தல் (Inversion)

தமிழும் தமிழ்நாடும் வாழப் பிறந்த தமிழர் இளங்கோவடிகள்; கலைவளம் நிறைந்த தமிழ் நாட்டில் அக்காலத்தில் சிறந்து விளங்கிய கலைகள் பலவற்றை உணர்ந்து போற்றிய தமிழர் அவர். (ப. 1)

விட்டிசைக்குறி அமைத்தல்

"இத்தகைய சமயப் பொது நோக்கு—பிற சமய வெறுப்பின்மை" "சிலப்பதிகாரத்தை—கண்ணகி கோவலன் கதையை—இளங்கோவடிகள். (ப. 123) என ஒரு பொருளை விளக்க விட்டிசைக் குறியைப் பயன்படுத்துகிறார்.

எளிய நடை

அவரது காவியம் ஒரு கலைக் களஞ்சியம், செந்தமிழ் நடைப் போக்கு, நிகழ்ச்சிக் கதைப் போக்கு, விளக்க முறை நடை, ஆய்வுத்திறன் ஆகியவற்றை இவரது நடையில் காணலாம். தமிழ்மணம் கமழும் தனி நடையை இந்நூலில் காணலாம். டாக்டர் மு. வ. வின் உரை நடைப் போக்குத் தண்ணென்று தவழந்து செல்லும். ஆற்றொழுக்குப் போலத் தங்கு தடையின்றி ஒரு சீராகச் செல்லும் தமிழ் நடையாகும்.

திரும்பக் கூறும் பண்பு

"இள்ங்கோ யாராயினும் ஆகுக. எந்த நூற்றாண்டினர் ஆயினும் ஆகுக." (ப. 32) ஆகுக என்ற சொல் வாக்கியந்தோறும் திரும்ப இடம் பெறல் ஒரு திட்டப் பாங்கே. வடு நீங்குவதும் உண்டு. 'நீங்காமல் நிலைப்பதும் உண்டு (ப. 74) என்று உண்டு என்ற சொல்லிலும் இத் திட்டப்பாங்கு உள்ளது.

எதிர்மறை கூறி விளக்கல்

நிலா முற்றத்தில் பாற்கதிரையும் தென்றலையும் கண்ணகி மகிழ்வதாகக் கூறாத இளங்கோவடிகள், மதுரைக்

குச் செல்லும்போது ஒரு நாள் நிலவையும் தென்றலையும் கொண்டு வந்து காட்டுகிறார். (ப. 47)

காரண காரிய விளக்கம்

இளங்கோவின் நெஞ்சில் சிலம்பு விழுமிய உணர்ச்சிகளுக்கு உரியதாய் நின்ற காரணத்தால் அவர் இயற்றிய காவியத்திற்கே சிலப்பதிகாரம் என்று பெயர் அமைத்தார். (ப. 62)

வினை யெச்ச அடுக்கு

திருமணம் தொடங்கி, வாழ்த்தி வழிபடுதல் வரையில் மூன்று காண்டங்களிலும் சிலம்பு தொடர்ந்து விளக்கிக் காவியத்தையே நடத்திச் செல்வது போல் உள்ளது. (ப.62)

சிலம்பு இரண்டையும் காலில் அணிந்து கண்ணகி விளங்கிய காட்சியை எடுத்துக் கூறாமல் சிலம்பு அணியாமல் துயருற்று வாடிய காட்சியைக் காட்டி அதை நினைவூட்டினார். (ப. 63)

இணைத் தொடர்கள்

கண்ணகியுடன் நடத்திய வாழ்க்கை வடு நீங்கு சிறப்பு உடையது என்றதாலேயே மாதவியுடன் வாழ்ந்த வாழ்க்கை வடு நீங்காத்தன்மையுடையது என்பதை உணருமாறு செல்கிறார். (ப. 75)

சொற் பொருள் விளக்கம்

தன் மனையகம் மறந்து என்பதில் உள்ள மனை என்ற சொல்லுக்கு டாக்டர் மு. வ. தனி விளக்கம் தருகின்றார். மாதவியின் இடம் கோவலனுக்கு வீடு ஆகாது என்பதை 'மனை' என்ற சொல் நினைவுறுத்துகின்றது.

நீக்கல் உத்தி

காவியம் இயற்றும் ஆசிரியர் இயற்கை தரும் அழகான காட்சியைச் சொல்லோவியம் ஆக்கிக் காட்டலாம். அன்றாட வாழ்க்கையில் உள்ள இன்ப துன்பங்களைக் கற்பனை செய்து காட்டலாம். நாடெங்கும் உள்ள

போராட்டங்களைப் படைத்துக் காட்டலாம். (ப. 126) காவியம் இயற்றும் ஆசிரியர் என்ற சொற்றொடர் பின்னர் வந்த வாக்கியங்களில் நீக்கப்பட்டிருப்பதால் நீக்கல் உத்தியை டாக்டர் மு. வ. கையாள்கிறார் எனலாம்.

உளப்பாட்டுப் பண்பு

புகார்க் காண்டத்துள் மங்கல வாழ்த்துப் பாடலில் அக் காலத்தில் ஒரு சாரார் நடத்திய திருமணமுறை பற்றி அறிகிறோம். அரங்கேற்று காதையில் கலைகளைப் போற்றிய முறைகளையும், கணிகையர் குடியில் பிறந்த மகளிரின் வாழ்க்கை அமையும் வகையையும் பற்றி அறிகிறோம். இந்தி விழவூரெடுத்த காதையில் பழங்காலத்துக் கோயில்கள் வழிபாடுகள் விழாக்கள் முதலியன பற்றியும், காவிரிப் பூம் பட்டினத்து அமைப்பு நாகரிகம் முதலியன பற்றியும் அறிகிறோம். (ப. 21)

தருக்க முறை

''ஒரே காலத்தில் வாழ்ந்த புலவர்களுக்குள்ளும் நடை வேறுபாடும் சொல்வழக்குகளின் வேறுபாடும் காண்பது இயற்கை'' என்று விவாதத்தைத் தொடங்கிச் சான்றாதாரம் காட்டி நிறுவுகிறார். மறைமலையடிகளாரும், திரு வி. கலியாணசுந்தரனாரும், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரும், திருமணம் செல்வ கேசவராய முதலியாரும் ஒரே காலத்தவரயேினும் அவர்கள் எழுதிய உரைநடையில். தமிழ்ச்சொல் வழக்குகள் வேறுபட்டிருக்கக் காண்கிறோம். அந்த வேறுபாட்டைக் கண்டு, மறைமலையடிகளுக்குப் பின் ஒரு நூற்றாண்டு கழித்து வந்தவர்கள் மற்றவர்கள் என்று கூறிவிட முடியாது. ஆகவே, சொல்வழக்குகளையே முதல் காரணமாகக் கொண்டு நூலாசிரியர்களின் காலத்தை வரையறுப்பது தவறான முடிவுகளுக்கு எளிதில் கொண்டு செல்வதாகும்'' (ப. 13)

இயல் 6

செய்யுளில் பொருட் புலப்பாடு

செய்யுளில் பொருள் புலப்பாட்டுக்குப் பொருள்கோள் துணை செய்கிறது. பொருள்கோளைத் தொல்காப்பியர் மொழிபுணர் இயல்பு என்று அழைப்பார்.

''நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழி புணர்இயல்பே''

(நூற்பா 886)

நன்னூலார் பொருள்கோளை எட்டாகப் பகுப்பார்.

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக்கொண்டு கூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே''

(நூற்பா 412)

செய்யுளிலிருந்து நாம் பொருள் கொள்ளுகின்ற முறையைப் பொருள்கோள் என்ற தொடரும், செய்யுளிற் பொருள் நடக்கின்ற முறையைப் பொருணடை என்ற தொடரும் உணர்த்துவனவாகத் தோன்றுகின்றது.'' என மருதூர் ச. அரங்கராசன் கூறுகின்றார்: (ப. 104 ''பொருள்கோள்'')

நிரல் நிறை

சொல்லும் பொருளும் நிரலே நிற்க அவற்றை இணைத்துப் பொருந்தும்படி பொருள் கொள்வதாகும். இப்பொருள் கோளைத் தொல்காப்பியார் எதிர் நிரல்,

முறை நிரல் எனப் பகுத்துக் கூறவில்லை. இப்பகுப்பை உருவாக்கியவர்கள் உரையாசிரியர்களே. உரையாசிரியர் களின் கூற்றை அடியொற்றி நன்னூலார்,

"பெயரும் வினையுமாஞ் சொல்லையும் பொருளையும்
வேறு நிரல்நிறீஇ முறையினும் எதிரினும்
நேரும் பொருள்கோள் நிரனிறை நெறியே"

(நூற்பா 414)

என்று கூறுகிறார்.

சுண்ணம்

செய்யுளில் முடிக்கப்படுஞ் சொல்லும் முடிக்கும் சொல்லும் எட்டுச் சீர்களிலும் பொடி போலச் சிதறிக் கிடக்கும். அளவடியால் அமைந்த ஈரடியில் எட்டுச் சீரைத் துணித்துப் பொருள் ஒட்டும் வழிக் கூட்டுவது சுண்ணம். சுண்ணம் என்ற சொல்லுக்குப் பொடி என்பது பொரு ளாகும். இப்பொருள் கோளுக்கு உரையாசிரியர்கள் காட்டும் உதாரணம்.

"சுரை யாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை" என்பதாகும்.

ஓரடி ஈரடிகளில் ஒட்டும் வழிக் கூட்டும்போது அதனைச் சுண்ணம் என்னாது மொழி மாற்று என்றனர் உரையாசிரி யர்கள்.

ஈரடி எண்சீரைத்துணித்து ஒட்டினால் சுண்ணம். இந்த வரையறையுள் அடங்காதது மொழி மாற்று என்பது தொல் காப்பியம்.

அடிமறி

அடிகளை மாற்றியமைத்துப் பொருள் கொள்ளுதலா கும். தொல்காப்பியர் இதனை,

"அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமாறும்மே" (நூற்பா 889)

என்கின்றார். பொருள் புலப்பாட்டுக்காக ஒரு செய்யுளில் ஒன்றுக்குமேற் பட்ட அடிகள் முன்னும் பின்னும் மாறும்,

சான்று

"சுரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங்கினரே
சாரனாட நீவரலாறே
வார லெனினே யானஞ்சுவலே"

மொழிமாற்று

இரண்டிற்கு மேற்பட்ட பல அடிகளிற் சொற்களை மாற்றிக் கூறுதல் மொழி மாற்று என்பது தொல்காப்பியர் கருத்து. ஓரடியுள் சொற்களை மாற்றிக் கூட்டிப் பொருள் கூறினால் அது மொழிமாற்று என்று நன்னூலார் கூறுகிறார்.

"சொன்னிலை மாற்றிப் பொருளெதிர் இயைய
முன்னும் பின்னும் கொள்வழிக் கொளாஅல்"

(நூற்பா 891)

என்பது தொல்காப்பியம்.

உரைநடையில் தொடர் அமைப்புச் சொற்களை மாற்றியமைத்துப் பொருள் கொள்ளும் போக்கு இல்லை. பொருள்கோளைச் செய்யுளுக்காகவே இலக்கணப்புலவர்கள் அமைத்துள்ளனர். செய்யுளில்தான் தொடர் அமைப்பில் உள்ள சொற்களை மாற்றியமைத்துப் பொருள் கொள்ள வேண்டியுளது. யாப்பு, எதுகை, பொருட்சிறப்பு, சிலேடை, சுருக்கம் கருதி இம்மாற்றத்தைக் கைக்கொள்வதாகத் திரு சு. அருங்கராசன் கருதுகிறார்.

அடிமறி மாற்று, அடிமொழி மாற்று. அளைமறி பாப்பு, கொண்டு கூட்டு, சுண்ணம், தாப்பிசை, நிரனிறை, புனல்யாறு, மொழிமாற்று, விற்பூட்டு எனப் பொருள் கோளின் வகைமைகளாகத் தமிழ் இலக்கணிகள் குறித்துள்ளனர். தொல்காப்பியம் அவிநயம், அமுதசாகரம், நேமிநாதம். நன்னூல், இலக்கண விளக்கம் தொன்னூல் விளக்கம், சுவாமி நாதம், முத்துவீரியம், தமிழ் நூல் ஆகிய இலக்கண நூல்களில் இப்பொருள்கோளின் வகைப்பாட்டில் பல வேறுபாடுகளைக் காணலாம். செய்யுள் புலப்பாட்டு நெறிக்குப் பொருள்கோள் பெரிதும் துணை நிற்கிறது.

கருவி நூல்கள்

1. Classical Rhetoric—For Modern Student'—Edward P. J. Corlett Oxford university press, Newyork 1971
2. 'உரையாசிரியர்கள்' மு. வை. அரவிந்தன் மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
3' 'பெரியவாச்சான் பிள்ளை உரை — திருமடல்கள், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி
4. 'நிலையும் நினைப்பும்' — C. N. அண்ணாதுரை திராவிடப்பண்ணை, திருச்சி.
5. 'நீங்களும் சுவையுங்கள்' — தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், சர்வோதயாபண்ணை, மதுரை.
6. தமிழ் வியாசங்கள்' — திருமணம் செல்வகேசவராய முதலியார்
7. 'தமிழ்ச்சோலை'—இரண்டாம் பகுதி திரு. வி. கலியாணசுந்தர முதலியார் சாது அச்சுக் கூடம், சென்னை, 1935.
8. 'ஆராய்ச்சித் தொகுதி' — மு. இராகவையங்கார்
9. 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' — முதற்பகுதி மறைமலையடிகள், கழக வெளியீடு, சென்னை, 1930, முதற்பதிப்பு
10. பொருள்கோள்' — மருதூர் சு. அரங்கராசன்
11. 'வேலும் வில்லும்' — இரா. பி. சேதுப்பிள்ளை
12. 'அடியார்க்கு நல்லார் உரைத்திறன்' — அறிஞர் ச. வே. சுப்பிரமணியன்
13. 'தில்லித்தமிழ்ச்சங்கம் வெள்ளிவிழா மலர், தமிழ்ச் சங்க வெளியீடு, 1971.
14. 'ஆய்வியல் அறிமுகம்' — தமிழண்ணல்
15. 'தமிழ் இலக்கண இலக்கிய அறிமுகம்' — வி. கணபதி
16. 'முல்லைப்பாட்டு ஆராய்ச்சி' — மறைமலையடிகள், சாரல் வெளியீடு, சென்னை, 1976.
17, 'பத்துப்பாட்டுரை' — உ. வே. சா. பதிப்பு,

ஆசிரியரின் பிற நூல்கள்

1. நாவல் ஆய்வு

2. ஆய்வு மாலை

கிடைக்குமிடம்

வளனருள் வெளியீடு,
49, காமகோடி நகர்,
வளசரவாக்கம், சென்னை - 600 087.